தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஐப்பசி 1994



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**நான் புறநானூறு படிக்க மிக ஆசை கொண்டிருந்தேன். ஆனால் இயலவில்லை. அந்தக் குறையை தாங்கள் போக்கிவிட்டீர்கள்.**

# அக்கறைப்பூக்கள்

தங்களின் இனிய மாசிலாமணி எழுதும் அன்பு மடல்,

ஐயா! எனக்கு ஆடி மாத இதழ் மிகவும் தாமதமாகவே கிடைத்தது. அது கிடைத்த சில நாட்களிலேயே ஆவணி மாத இதழும் கிடைத்து விட்டது.

மிகவும் நன்றி.

சீதன அரக்கனால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டுமல்ல. பெண்களை உடன்பிறந்தவர்களாகப் பெற்ற ஆண்களே அதிகம். அது தமிழீழத்தில் மட்டமல்ல, அடிமை தமிழகத்திலும் அதிகம். பயங்கரம். தமிழீழத்தைப் போல ஒரு புரட்சியும், நல்ல தலைமையும் ஏற்பட்டாலே சீதன அரக்கனை அழிக்க முடியும்.

விபுலானந்தரின் பெயரையே இதுநாள் வரையில் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் பற்றி ஓரளவு அறிய உதவியதற்கு நன்றி.

கல்வியின் பெருமை பற்றி மிகவும் நன்றாக அறிவேன். பேராசிரியர் துரைராசா அவர்களின் மறைவு தமிழ் மொழிக்கே ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பாகும்.

அடிக்கடி தங்கள் இதழில் கிட்டண்ணா பற்றி எழுதி என்னை தலை குனிய வைக்கின்றீர்கள். மிகப் பெரிய தமிழ்த் தலைவர் ஒருவரை இந்தியப் பேரரசு கொடூரமாக படுகொலை புரிந்தும் அதனை எதிர்த்துப் பேச ஆளில்லா அடிமைத் தேசத்தில் வாழ்வதை எண்ணி எண்ணி மனம் வருந்தித் தலை குனிகின்றேன்.

தமிழீழ வைப்பகம் தொடங்கி இருப்பது, விடுதலை தூரத்தில் இல்லை; எட்டிப் பிடிக்கும் தூரத்தில் உள்ளதை உணர்த்துகின்றது.

உளவியல் பற்றிய உண்மைகள் எனக்கு மிகவும் அவசியம் ஆனவை.

சொந்த நாடே சொர்க்கம் என்ற உண்மையை தமிழீழ மக்கள் உணர்ந்த அளவுக்கு தமிழக மக்கள் உணரவில்லை. ஏன், சொந்த நாடு வேண்டும் என்ற உணர்வே இங்கு இல்லை. அடிமை வாழ்வே இங்கு அழகாய்ப் போனது. கணவனுக்கு மனைவி அடிமையாய் வாழ்வது சுகம் என்பார்கள். ஆனால் இங்கோ மானம் இழந்து மாற்றானுக்கு அடிமையாய் சேவகம் புரிவதே தமிழ் நாட்டு தமிழர்களுக்கு இரண்டரை நூற்றாண்டுகளாய் தேனாய், தெவிட்டாத இன்பமாய், சொர்க்கமாய் உள்ளது.

‘சுதந்திரத்தைத் தேடி’ பகுதியில் போராளிகளின் வாழ்க்கை பற்றி படிக்கும் போது உண்மையில் தினம் நான் வெட்கி தலைகுனிகின்றேன். இப்படிப்பட்ட மாவீரர்கள் வாழும் போது நாம் கோழையாய் உயிர்வாழ அடிமைத் தமிழகத்தில் இருந்து இப்போது வேறு நாட்டில் அடிமையாய் வாழ்வதை எண்ணி எண்ணி மனம் வருந்துகின்றேன்.

உண்மையைச் சொல்கிறேன். அங்கே தமிழீழத்தில் போராளிகள் விடுதலை வேள்வியில் கண் துயிலாமல் கடமை செய்கின்றனர். ஆனால் அடிமை நானோ அவர்களைப் (எரிமலை) பார்த்து மனம் நொந்து என் நிலைமைக்காக தினம் தினம் கண்துயில மறுக்கின்றேன்.

இந்தியப் படைக் காலமே உங்களின் துயரகாலம் என்கிறார்கள். இல்லை ஐயா, அதுதான் உண்மையான பயிற்சிக் காலம்: நாங்கள் பயில வேண்டிய பாட பாலம்.

என் நண்பனிடம் தமிழகத்தின் விடுதலை பற்றிக் கேட்பேன். அவர் “இன்னும் பல்லாண்டுகள் போனாலே நம்மின மக்களுக்கு உணர்வு வரும்” என்கிறார்.

நான் ஒரு முடிவில் இருக்கிறேன். அது தமிழீழம் போகவேண்டும் என்று. வழி தெரியாத காரணத்தினால் அடிமை தேசம் வந்துவிட்டேன். இப்போது எரிமலை படித்தவுடன் தீவிரமாய் உள்ளேன். எப்படியும் தமிழீழம் போவது. சுதந்திர புனித பயணத்தில் ஒருநாளாவது பயணம் செய்வது.

ஆடி இதழில் யாழ். கடல் நீரேரி திட்டம் எனக்கு மிகவும் பிடித்து இருந்தது. இது மட்டும் நிறைவேற்றப்பட்டால் தமிழர்களின் புகழ் உலகம் எல்லாம் பரவும்.

இந்த இதழில் கவிதைகள் மிக அதிகம். நான் புறநானூறு படிக்க மிக ஆசை கொண்டிருந்தேன். ஆனால் இயலவில்லை. அந்தக் குறையை தாங்கள் போக்கிவிட்டீர்கள்.

நான் எரிமலை படிக்க ஆரம்பித்தபின் என் உள்ளம் எப்போதும் தமிழ் ஈழத்திலேயே உள்ளது. அது எப்போதும் அங்கேயே இருக்க, மேலும் என் உடலும் (நானும்) அங்கே போய் சேர அந்த புண்ணிய பூமியை நேரில் காண தாங்கள் தான் நல்ல பாதை ஒன்று காட்டவேண்டும்.

வாழ்க அண்ணன் பிரபாகரன்!
வளர்க புலிகள் இயக்கம்!
வெற்றிகள் நமக்கே சொந்தமாகட்டும்!
பூக்கட்டும் விடுதலைப் பூக்கள்!
பரவட்டும் உலகெங்கும் தமிழர்களின் வீரம்!
உயரட்டும் எரிமலையின் சேவை!
இனிக்கிட்டும் எமது தமிழ்!

நன்றி

**என்றும் எம்மின மக்களின் நினைவில்**
**தங்களின் இனிய மாசிலாமணி**

வாழ்க தமிழினம்! வெல்க தமிழீழ விடுதலைப் புலிகள்!

தமிழினத்தின் உணர்வுகளைக் கக்கும் எரிமலை! உன் இலட்சியம் தமிழீழ விடுதலை!

தமிழ்நாட்டில் எம்போன்ற இளைஞர்களின் மனதில் வீரஉணர்வு ஊட்டும் எமது தியாகச் சுடர்களுக்கு என் இதயஅஞ்சலி.

இதோ என் வாழ்த்துக்கள் கவிதையாக!

*இந்துவின் புனிதத்தலம் காசி,*
*முஸ்லீமின் புனிதத்தலம் மெக்கா,*
*கிறித்தவனின் புனிதத்தலம் ரோம்*
*எங்கள்*
*தமிழனின் புனிதத்தலம் யாழ்ப்பாணம்*

*நாங்கள் ஆடுகளாக இருந்தபோது,*
*கழுத்தில் கத்தி தொங்கியது,*
*நாங்கள் புலிகளாக மாறிய பின்*
*கழுத்தில் குப்பிகள் தொங்குகிறது.*
*மகிழ்ச்சியடைகிறோம்*
*புலியாக இ(ற)ருப்பதற்கே!*

**தமிழீழத்திற்கு தன் உயிரை ஈந்த எங்கள் வேங்கை வெங்கிட்டு நினைவாக ஒரு தமிழனின் நினைவுக் குறிப்பு.**

*கடல்தோறும் அலை மேலே விளையாடும்*
*புலிக்கப்பல் இழந்திட்ட வெங்கிட்டே!*
*களம் தோறும் குழல்தூக்கி தமிழ்வாழும்*
*ஈழத்தில், நீ பார்க்கப்பகை கிட்டே,*
*உளம் இழந்து வாராமல் பின் ஓடும்,*
*வீரத்தைத் தமிழர் மனம் அறியும்!*

**இப்படிக்கு உயிர்தமிழன்**
**திருச்சுனைச்செல்வன், கோவை.**

தொடர்ச்சி 46ம் பக்கம்....

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



மின்னல் குடியிருக்கும் கண்களைத் திறந்து
கைகளை வீசு.
புயல் புறப்பட்டுப் போகட்டும்.
எடுத்துவைக்கும் காலடி ஒவ்வொன்றுக்கும்
இடிமுழக்கங்கள் கேட்கட்டும்
நட; காலம் உனக்கு கைகட்டும்.
வான் பரப்பெங்கும்
பிணந்தின்னிக் கழுகுகள் போடும் எச்சத்தால்;
கீழே குடியிருப்புக்கள் தீப்பிடிக்கின்றன.
ஒவ்வொரு வீட்டு வாசலிலும்
ஒப்பாரி கேட்கிறது.
இத்தனையையும் மீறிக்கொண்டு
சின்ன அலகால் சுள்ளி பொறுக்கி
எங்கள் மரங்களில் குருவிகள் கூடுகட்டுகின்றன.
மேய்ச்சலுக்குப் போகும் மாடுகள்
கன்றீன்று பால் சொரிகின்றன.
வாழும் வழி இதுதான்.
நிமிர்ந்து கொள்.
மேகம் உன் தலைதடவி விளையாடட்டும்.

- மாலிகா -

## இதழின் உள்ளே


★ இலங்கை இனப்பிரச்சினையில் மகாவம்சத்தின் பங்கு - 06
★ பாய்வதற்காகப் பதுங்கிய புலிகள் - 13
★ உலகை ஈர்க்கும் திரைப்படவியல் - 17
★ ஆபிரிக்கக் கவிதைகள் - 22
★ இசையமைப்பாளர் கண்ணனுடன் ஒரு நேர்முகம் - 26
★ வார்த்தைகள் வலுவிழந்துபோன ஒரு ஆற்றமுடியாத துயரம் - 30
★ அரங்கில் காட்சி அமைப்பு ஒரு நோக்கு - 32
★ நவீன ஓவியம் வளர்ச்சிப் பாதையில்... - 37
★ தாத்தாவும் பேரனும் - சிறுகதை - 40


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
ஐப்பசி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42


# சமாதானத் தீர்வு முயற்சி தவிர்க்க முடியாதது

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வை சமாதான ரீதியாகச் சாதிக்க முடியுமெனில், அதனை முயன்று பார்க்க தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதுமே தயாராக இருந்துள்ளனர்; இருக்கின்றனர். 1991ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள், ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவித்து, சிறீலங்கா அரசாங்கத்தை நேரடிப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது, விடுதலைப் புலிகளின் சமாதானத் தீர்வு முயற்சி தெளிவாக வெளிப்பட்டது. அன்றிலிருந்து சமாதானக் கதவுகளை விடுதலைப் புலிகள், அகலவே திறந்து வைத்திருந்தனர். அதனூடாக, பல்வேறு சமாதானக் குழுக்கள், சர்வதேச சமாதானத் தூதுவர்கள், மத அமைப்புக்கள் என்பன சென்று வந்து, விடுதலைப் புலிகளின் சமாதான விருப்பை, அரசாங்கத்துக்குத் தெரிவித்தபோதிலும், அரசாங்கம் மசியவில்லை. முன்னைய அரசாங்கம், பல்வேறு நிபந்தனைகளைப் போட்டு, இராணுவவாதிகளினதும், இனவாதிகளினதும் நிலைப்பாட்டில் செயல்பட்டது. விடுதலைப் புலிகள் நீட்டிய சமாதானக் கையைத் தட்டிவிட்டு இராணுவத் தீர்வில் முனைந்து நின்றது.

இராணுவத் தீர்வு முயற்சி சரிவரவில்லை. மக்களின் நிமிர்ந்த போக்கினால், பொருளாதாரத் தடையும் பிசுபிசுத்துப் போனது. தமிழ் மக்களை மேலும் மேலும் சிறீலங்கா அரசிடமிருந்து அந்நியப்படுத்தும் கைங்கரியத்தையே அது ஆற்றியது. இதனையே நகராநிலை (Stalemate) என்கின்றனர். இதனை இருபக்கத்திற்கும் பொருத்திப் பார்த்து, இரு பக்கமும் வெல்லமுடியாத நிலை எனச் சிலர் வாதாடுகின்றனர். இந்த நகராநிலை அரசாங்கத்துக்குத்தான் பொருந்துமே ஒழிய, விடுதலைப் போராட்டத்தை முனைப்புடன் நடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்குப் பொருந்தாது. சட்டரீதியாக, அரசியல் யாப்பு ரீதியாக, நிர்வாக ரீதியாக, இனப்படுகொலை ரீதியாக, போர் ரீதியாக, பொருளாதாரத்தடை ரீதியாக - இவ்வளவு வழிகளிலும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க முயன்று, அரசாங்கத்துக்கு ஏற்பட்ட தோல்வி நிலையே தவிர, இரு பக்கத்திற்கும் பொதுவான நகரா நிலை அல்ல. கடைசியாக எஞ்சி நிற்பது தமிழ் இனத்தை பூண்டோடு அழிக்கும் முற்று முழுதான இனப்படுகொலையே. அதுவும் சாத்தியமற்றதாய் உள்ளது. இவ்வின ஒடுக்கல்கள் இறுதியில், எதிர் விளைவுகளையே கொடுத்துள்ளன. தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் தலைமையில், இவ் ஒடுக்குமுறையை எதிர் கொண்டு நின்றது மாத்திரமல்லாமல், சிறீலங்கா அரசுக்கு சமனாக, புதிய அரசுக்கான கட்டுமானங்களையும் வளர்த்துக் கொண்டார்கள். தமக்கென்றொரு நிலம், பாதுகாப்பு, பொருளாதாரம், சட்ட ஒழுங்கு, சிவில் நிர்வாகம், வைப்பகம் என்பவற்றை நிலைநிறுத்த முனைந்தார்கள். இக்கட்டத்திலேயே புதிய அரசாங்கம் வந்தது. இந்த யதார்த்த நிலைமையை உணர்ந்துகொண்டது. மேலும் தோல்விகளை நோக்கிச் செல்லாமல் தடுக்கும் வழிகளைத் தேடியது. கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியில் சிலவற்றைத் தக்க வைத்துக் கொண்டு, தமிழீழம் தனிநாடாகப் பிரியாமல், தடுக்கும் நோக்குடனேயே பேச்சுவார்த்தை மூலமாகப் பிரச்சினையைத் தீர்க்க முன்வந்தது. எனவே அரசாங்கத்துக்குப் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. ஆயினும் இம் முயற்சி சரிவராது போனால், இராணுவ ரீதியாக, போர் மூலம் தீர்வு காணலாம் என்ற ஒருதுளி நம்பிக்கை, புதிய அரசாங்கத்தினதும் மனதின் ஒரு மூலையில் இருப்பதால்தான் யுத்தநிறுத்தம் இன்றிப் பேச்சுவார்த்தையை நடத்த விரும்பியது. அண்மையில், பாரிய கடற்படைக் கப்பலானது மூழ்கடிக்கப்பட்டதானது இந்நம்பிக்கையை ஓரளவு சிதறடித்திருக்குமென்றே நம்பலாம். தமிழ் மக்களை, தமது பலம் கொண்டு அடக்கலாம் என்ற நம்பிக்கை எப்போது முற்றாக இல்லாது போகின்றதோ அப்போதே சமாதான ரீதியாகப் பிரச்சினை தீரும்.

இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டு நிலைமைக்கு மேலாக ஒரு தீர்வு காணப்பட்டால், அது தனது உள்நாட்டு நிலைமையில், குறிப்பாக தமிழ்நாட்டில் எதிர் விளைவுகளைக் கொண்டுவரும் என்று நினைக்கிறது. விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக்குத் தனது ஆசீர்வாதத்தை அளித்தபோதிலும் ஏனைய தமிழ்க் குழுக்களையும் பேச்சுவார்த்தையில் இணைத்து, தனது நலனுக்கேற்ற தீர்வொன்றைக் காணுவதை இந்தியா வலியுறுத்தியுள்ளது தெரிகின்றது. சிறீலங்காவின் ஒற்றையாட்சி யாப்பினுள், கூடுதல் அதிகாரப்பரவலாக்கம் என்ற அரசாங்கத்தின் சரடு இந்தியாவுக்கும் ஒப்பானதாகவே உள்ளது. ஆனால், கிழக்குப்பகுதியை அபகரித்தல், சமாதான முயற்சி தோல்வியுற்றால், இந்தியப்படையை வடபகுதிக்கு மட்டும் வரவழைத்து, விடுதலைப்புலிகளை நிர்மூலம் செய்து தனது இராணுவத் தோல்வி நிலையைச் சரி செய்தல் போன்ற நிலைப்பாடுகள் இந்தியாவிற்கு விருப்புடையதாக இருக்க முடியாது. நீதியாக, நேர்மையாக பிரச்சினையைத் தீர்க்க புதிய அரசு முனையுமா என்பதும் கேள்விக்குறியே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# திறந்தே இருக்கும் சமாதானக் கதவுகள்

சிறீலங்காவின் பாராளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுற்று, பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றதை, விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகம் வரவேற்றதோடு, புதிய அரசாங்கத்தோடு, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் எனவும் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து சிறீலங்கா அரசாங்கம், பொருளாதாரத் தடை வெற்றியளிக்கவில்லை; தேவையற்றது என்ற காரணங்களோடும், ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகவும் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மண்ணெண்ணெய் போன்ற 28 பொருட்களின் மீதான தடையை நீக்கியது. இத்தடை நீக்கத்தை வரவேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம், போர்க்கைதிகளாக வைத்திருந்த 10 ஆயுதப்படையினரை சர்வ தேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விடுவித்து, யுத்தநிறுத்தத்திற்கும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குமான தலைவர் வே. பிரபாகரனின் விருப்பத்தை பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தது. பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க யாழ்ப்பாணத்துக்கு வருவாரானால், அவரைத் தலைவர் பிரபாகரன் சந்தித்துப் பேசுவார் என்றும் அம்மகாநாட்டில், விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கத்தால் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவை யாழ்ப்பாணத்துக்கு வரும்படி அழைப்பு விடுத்து, தலைவர் வே. பிரபாகரன் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கடிதம் ஒன்றைக் கொழும்புக்கு அனுப்பியிருந்தார். சிறீலங்கா அரசாங்கம், பிற பகுதிகளில், அவசரகால நிலைமையை நீக்கிய போதும், வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது.

விவசாய உரம் போன்றவற்றிற்கான தடைகளும், பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டு, மீன் பிடிக்கும், விவசாயம் செய்வதற்கும், போக்குவரத்துக்கும் விதிக்கப்பட்ட தடைகளும் அகற்றப்படவில்லை. யாழ். குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் போடப்பட்டுள்ள பூநகரி, ஆனையிறவு இராணுவ முகாம்கள் மக்களின் சுமூகமான போக்குவரத்தைத் தடுத்துக்கொண்டிருக்கின்றன. ஏற்கனவே நிறைய ஆயுதங்கள் அரசாங்கத்தால் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தை சரிவராது போனால், போரினாலேயே தீர்வு காணப்படும் என்று பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுராத ரத்வத்த தெரிவித்துள்ளார். இப்படி நிலமை இருக்கையில் சிறீலங்கா அரசாங்கம் அவசரகால நிலை நீக்கத்தை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும் விஸ்தரித்து யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவதன் மூலமே, பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழலை உருவாக்கலாம். யுத்த நிறுத்தத்துடனான பேச்சுவார்த்தைக்குத் தயார் எனவும், பிரதமர் நேரடியாக யாழ்ப்பாணம் வந்து பேசலாம் எனவும் தலைவர் பிரபாகரனே பிரதமருக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமாதானப் பேச்சுவார்த்தைப் பாதையில் இன்னொரு முன்னேற்றம் இடம்பெற்றது. சிறீலங்கா அரசாங்கம், விடுதலைப் புலிகள் தரப்பில் பேசுவதற்கான முக்கியஸ்தர்களை நியமிக்குமாறு கோரியது. அதன் பிரகாரம் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம், அரசியல் துணைப்பொறுப்பாளர் கரிகாலன் போன்றோரை பேச்சுவார்த்தைக்கென நியமித்தது. அதேவேளை, சிறீலங்கா அரசாங்கம் தனது தரப்பில் பிரதிநிதிகளை நியமிப்பதில் காலதாமதம் செய்வதோடு, இராணுவத்தினரின் தாக்குதல் போக்கினையும் கட்டுப்படுத்தவில்லை. இந்நிலமை பொதுமக்கள் மீதான கடற்படையினரின் தாக்குதல்களுக்கும், எறிகணை, குண்டுவீச்சுத் தாக்குதல்களுக்கும் வழிவகுத்தது.

யுத்தநிறுத்தமற்ற சூழ்நிலையில், அரச ஆயுதப்படையினரின் சீண்டல்கள், பூநகரிப் பகுதியில் இரு தரப்பு மோதலுக்கு வழிவகுத்தது. மேலும், கடற்பகுதியில் ரோந்து செய்து, மீனவர்களைத் தாக்கியும், கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டும் வந்த கடற்படையினரின் பாரிய ரோந்துக் கப்பலொன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கடிக்கப்பட்டது.

சிறீலங்காவின் உதவிப்பாதுகாப்பு அமைச்சர் அனுராத ரத்வத்த, இவ்வாயுத நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைப் போக்கைப் பாதிக்காது என்றும், விரைவில் அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்கான தனது பிரதிநிதிகளை அறிவிக்கும் எனவும் கூறியுள்ளார். ஆரம்பப் பேச்சுவார்த்தையின் போது யுத்தநிறுத்தம் பற்றியும் கதைக்கப்பட்டு, யுத்தநிறுத்தம் கொண்டு வரப்படும் எனவும், அப்போது இத்தகு சம்பவங்கள் நிகழாது என்றும் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்கவும் பேச்சுவார்த்தை சுமுகமான முடிவுகளைத் தரவும் யுத்தநிறுத்தம் அவசியம் என விடுதலைப் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அடுத்து, தனது பிரதிநிதிகளை நியமித்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டியது சிறீலங்கா அரசாங்கத்தின் கையிலேயே தங்கி உள்ளது. யதார்த்த நிலைமைகளை உணர்ந்து, ஏதோ ஒரு கட்டத்தில் யுத்த நிறுத்தத்தை அறிவித்து, பேச்சுவார்த்தையை முன்னோக்கி நகர்த்த சிறீலங்கா அரசாங்கம் முன்வரும் என்றே சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது.

- வளவன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலங்கை இனப்பிரச்சினையில் மகாவம்சத்தின் பங்கு

## - ஒரு பார்வை -

செல்வி. யசோதா பத்மநாதன்



**மகாவம்சத்தில் காணப்படும் தவறான பதிவுகளும் வரலாற்று முரண்பாடுகளும் சிங்கள மக்கள் மனதில் நன்றாகப் பதியவைக்கப் பட்டுள்ளன.**

★★★

**இன்று இலங்கை அரசியலில் பௌத்த மதம் கொண்டுள்ள நெருக்கமான பிணைப்பு மகாவம்சம் இட்டுக்கொடுத்த அடிப்படையாகும்.**

சிங்கள மக்கள் இன்றுவரை முழுமையான தெனவும் பூரணமான முறையில் எழுதப்பட்ட தெனவும் கொள்ளும் வரலாற்று நூல்கள் இலங்கை சிங்கள பௌத்த மக்களுக்கே உரியதென வலியுறுத்து கின்றன. இது சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் மரபு ரீதியாக வளர்த்தெடுக்கப்பட்டு மனதில் பதியவைக்கப் பட்டுள்ளது. ஆனால் அதற்கு மாறாக இது உண்மையில் பல்லின மக்கள் வாழும் பூமி. இங்கு சிங்களவர், தமிழர் ஆகியோர் நாகரிகத்தின் ஆரம்பகாலம் தொட்டு இந்நாட்டு மக்களாய் வாழ்கின்றனர் என்பது அண்மைக் கால ஆய்வுகளின் முடிவாகும். இதனால் இனமுரண் பாடுகள் ஏற்பட்டன.

அதற்கான அடிப்படையை இட்டுக்கொடுத்ததென்ற வகையில் இலங்கையின் வரலாற்று நூல்களுக்கு மிகப்பெரிய பங்குண்டு. பல நூற்றாண்டுகள் பின்னால் இருந்துகொண்டு இறந்த காலத்தைத் தம் இன, மத நோக்கில் அணுகி எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொண்ட இந்த வரலாற்று நூல்களின் ஆசிரியர்கள் தான் இன்றைய இனப்பிரச்சினையின் உண்மையான பாத்திரவாளிகள். ஆனால் இவர்கள் அமைதி வழியையும் அகிம்சா தர்மத்தையும் கடைப்பிடிக்கும் பௌத்த பிக்குகளாக இருந்தார்கள் என்பது ஒரு முரண்பாடான உண்மை. இவர்களால் உருவாக்கப் பட்ட வரலாற்று நூல்கள் இன்றுவரை நாட்டின் அரசியலில் கொண்டிருக்கும் பங்கை யாரும் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது. அந்தவகையில் அதன் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்க்கின்ற போது இவ் அடிப்படை எவ்வாறு இந்நாட்டுக்குரிய சாபக்கேடாக உருவாகிற்று என்ற உண்மையை அறியலாம்.

இலங்கைக்கு பௌத்தம் கி.மு. மூன்றாம் நூற்றாண் டளவில் மகிந்த தேரரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கைக்கு பௌத்தம் அறிமுகப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் நிலையாக நிலவிய கலாச் சாரம், பௌத்த மதத்தினைச் சார்ந்தோர், சாராதோர் என்ற இரு பெரும் பிரிவுகளாக வளர்ச்சி பெற்றது. அதற்குமுன் இலங்கையில் இந்து சாராம்சங்களை உள்ளடக்கிய, பெருமளவுக்கு நிறுவனமயப் படுத் தப்படாத வழிபாட்டு நெறிகளே மேலோங்கிக் காணப்பட்டன. பௌத்தத்தின் வருகையோடு இணைந்து வடஇந்தியப் பேச்சுமொழியாகிய பாளிப் பிராகிருதம் இலங்கையில் வழக்கிலிருந்த சிங்கள மொழியின் மூதாதைய மொழியாகிய எலு மொழியுடன் இணைந்து ஆதிச் சிங்கள மொழி ஒன்றை உருவாக்கியது. பௌத்த மதத்தினைப் பின்பற்றுகின்ற பெரும்பாலான மக்கள் அதனோடு இணைந்த வகையிலான மொழி வடிவத் தினைப் பயன்படுத்த, பௌத்த மதத்தினைச் சாராத ஏனையோர் தமிழ் வடிவத்தைப் பயன்படுத்தினர். எனவே பௌத்தம் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொண்ட மொழி உருவாக்கமானது. பௌத்தர்- பௌத்த ரல்லாதோர் ஆகியோரை மொழி அடிப்படையிலும் வகைப்படுத்தியது.

மதமும் மொழியும் இணைந்து சிங்கள பௌத்தரை உருவாக்கிய வேளையில் இலங்கை அரசியலில்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


வெளிநாட்டுக் காரணிகள் பல ஆதிக்கம் செலுத்த முற்படுவதனைக் காணலாம். பல்லவர் காலத்தில் (கி. பி. ஆறாம் நூற்றாண்டளவில்) தென் இந்தியாவில் ஏற்பட்ட இந்துசமய மறுமலர்ச்சியின் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது. இதனால் இலங்கையில் பௌத்தர்- பௌத்தரல்லாதோர் ஆகியோருக்கிடையே இருந்துவந்த இடைவெளி மேலும் அதிகரித்தது. இலங்கை அரசின் இறைமைக்கெதிரான தென்னிந்திய அரசியல் அச்சுறுத்தல்களும்; பௌத்தரல்லாதோரான தமிழ் இந்துக்களின் தொகை, வட இலங்கை- தென்னிந்திய கலாச்சார, வர்த்தக, வாணிபத் தொடர்புகளால் இலங்கையில் அதிகரித்துக் காணப்பட்டமையும் அவ் இடைவெளியை மேலும் அகலப்படுத்தியது. அத்துடன் தென்னிந்தியாவில் செல்வாக்குற்றிருந்த பௌத்தம் சீரழிய அவ்விடத்தில் மீண்டும் இந்து மதம் மேன்நிலை பெற்றது. இவ்வரலாற்று நிகழ்வுகள் இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பை பிக்குகளின் கையில் ஒப்புவித்தது. இதனால் பௌத்தரல்லாதோரான- பெருமளவு வலிமை கொண்டிருந்த தென்னிந்திய இலங்கைத் தமிழ் இந்துக்களிடமிருந்து சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்கவேண்டிய தேவைக்கு பௌத்த சங்கத்தினர் தள்ளப்பட்டனர். எனவே இம் மதமும் மொழியும் தென்னிந்தியப் பின்னணியும் இணைந்து பௌத்தர்- பௌத்தரல்லாதோர் வேறுபாட்டை வளர்த்ததோடு சிங்கள பௌத்த இனமொன்றையும் தமிழ் இந்துக்கள் என்ற ஓர் இனத்தையும் உருவாக்கிற்று. அத்துடன் அவை இருவேறு முனைப்பில் சென்றுகொண்டுமிருந்தது.

இவ்விடத்தில் மொழியையும் மதத்தையும் ஆளுகின்ற நிறுவனம் என்ற வகையில் அரசு முக்கியம் பெற்றது. இக் காலத்தில் தென்னிந்தியச் சவால்களிலிருந்து பௌத்த மதத்தினையும் மொழியையும் காக்கின்ற அரசனுக்கு முக்கியமாக பௌத்த சங்கத்தினர் ஆதரவு கொடுத்தனர். இதேவேளை தன் அரச அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்குப் பெரும்பான்மை மதத்தையும் மொழியையும் முதன்மைப்படுத்தி ஆதரவைப் பெறவேண்டிய நிலை அரசனுக்கிருந்தது. எனவே அரசன் பௌத்த மதத்திற்குப் பெருமளவு ஆதரவளித்தான். பௌத்த குருமாரும் தம் மதத்திற்கு ஆதரவளிக்கும் அரசர்கள் தம் சிங்கள- பௌத்த இனத்திற்கு ஆதரவளிக்கின்றார்கள் என்ற வகையில் மன்னனுக்கு தம் ஆதரவையளித்தனர். இவ்வாறு மதமும் அரசும் ஒன்றோடொன்று நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருந்தது. இதனால் மதத்தை அடிப்படையாகக் கொண்டு மொழி, இனம், அரசு என்பன இணைக்கப்பட்டன.

இவ்வேளையில் இன்னொரு விடயத்தையும் நாம் நோக்கவேண்டும். அது வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவூடாகப் பரப்பப்பட்ட பௌத்த மதத்தோடு வந்த வரலாற்றைக் கோவைப்படுத்தி வைக்கும் மரபாகும். இம் மரபு வட இந்தியாவில் மகத இராச்சியத்தில் வளர்க்கப்பட்டு மகிந்த தேரருடைய தூதின் போது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. அது ஆரம்பத்தில் பிக்குப் பரம்பரையினரின் செய்திகளையும், அவர்களின் மத நடவடிக்கைகளையும் எழுதிவைக்கும் முறைகளை மரபாகக் கொண்டிருந்தது. இதனால் பௌத்தத்தோடு தொடர்புடைய நூல்களை அவர்கள் எழுதினர். ஆரம்பத்தில் பௌத்த போதனைகளும் அத்துடன் புத்தரின் வரலாற்றுச் செய்திகளும், மத ஆசாரிய பரம்பரையினது செய்திகளும் இவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தன. இவற்றுக்கு கால அடிப்படையைக் கொடுக்கும் நோக்குடன் அவ் அவ் காலத்தில் அரசாண்ட மன்னர்களின் விபரங்கள் சேர்க்கப்பட்டன. மன்னர் ஒவ்வொருவரது ஆட்சிக்காலச் சம்பவங்கள், விகாரைகளுக்கு அவர்கள் அளித்த ஆதரவு போன்ற விடயங்கள் அவற்றில் சிறப்பிடம் பெற்றன.

இம் மரபு காலப்போக்கில் புதிய பாதையில் வளரத்தொடங்கியது. அரச ஆதரவும், நேர அவகாசமும், கல்வி பயிலும் வாய்ப்பும், நூல்களை எழுதும் நாட்டமும், பௌத்த மதம் சமூகத்தில் செல்வாக்குள்ள நிறுவனமாக எழுச்சி பெற்றதும் எல்லாவற்றிற்கும் மேலாக சமூகத்தை வழிநடத்தும் முன்னெடுப்பு பிக்குகளின் கைக்கு மாற்றப்பட்டதும் அது புதிய பாதையில் வளர முக்கிய காரணமாகும். இதனால் பௌத்தமதம் தொடர்பான செய்திகளோடு தமக்கு ஆதரவளித்த அரசர்களின் செய்திகளையும் அவர்களின் மத நடவடிக்கைகளையும் விரிவாக எழுதிப் பேணிவைக்க ஆரம்பித்தனர். அவை விரிவாக இடம்பெற்ற காரணத்தினால் காலப்போக்கில் அரசியல் வரலாற்றுப் பகுதி தனிப் பகுதியாக வளரத்தொடங்கியது. இலங்கையைத் "தர்மதுவீபம்" எனப் போற்றிய பௌத்தர் சங்கத்தினர் அதன் வரலாற்று முக்கியத்துவத்தினைக் காட்டும் நோக்குடன் அவ் அரசியல் பகுதியைத் தனி நூலாக எழுதிப் போற்றத் தொடங்கினர். இதனால் தம் மதத்திற்கு ஆதரவளித்த அரசுக்கு ஆதரவும் அவர்களின் நடவடிக்கைகளுக்கான பதிவுகள் அதிகமாகவும் சுயசார்புத் தன்மையுடையவையாகவும் அமைய, அதற்கு மாறாக அவர்களுக்கு ஆதரவளிக்காத அரசுகளின் நிகழ்ச்சிகள் புறக்கணிக்கப்பட்டும் அவை உருவாகின. இத்தகைய பதிவுத் தொகுதி "சீஹள அட்டஹதா மகாவங்ஸ" என அழைக்கப்பட்டது. இதில் அரச அதிகாரமும் பௌத்தமும் இணைந்திருந்தது. இவ் விபரத் தொகுதியிலிருந்து பெறப்பட்ட நேரடி விளைபொருளே மிக முக்கியமான வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சமாகும்.

இந் நூலில் முக்கியமானது மகிந்ததேரரின் வரவுக்கு முற்பட்ட வரலாற்றுப் பகுதியாகும். இப் பகுதிக்குரிய வரலாறு பற்றிய தகவல்கள் பல செவிவழி மரபுகளாக பொதுமக்களால் பேணப்பட்டு வந்தன. இவை பெருமளவுக்குப் புனைகதை வடிவைப் பெற்றிருந்தன. கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் எதுவித ஒழுங்குமின்றி இக்கதைகள் காணப்பட்டன. இப்பகுதியை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவில் இங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் பற்றிய பழங்குடிகள் பற்றியும், இயக்க, நாக இராச்சியங்களுக்குப் புத்தபிரான் மும்முறை வந்தமை பற்றியும் கூறப்படுகின்றது. பௌத்த மதம் பரப்பப்படவிருந்த ஈழநாடானது புத்தபகவானாலே புனிதமாக்கப்பட்டதென்றும் பௌத்தத்தைப் பாதுகாக்க ஆசீர்வதிக்கப் பட்டவர்களான சிங்கள மக்கள் குடியேறுவதற்காக புத்தரே இங்கு வந்து பழங்குடிகள் பலரை அகற்றிச் சிங்கள மக்களுக்கு வழிவகுத்துக் கொடுத்தார் என்றும் எடுத்துக் காட்டுவதற்கு இக்கதைகள் பயன் படுத்தப்பட்டன. இரண்டாவது பிரிவில் ஈழத்தில் விஜயகுமாரன் கதை வடிவில் ஆரியர் குடியேற்றம் முதன் முதலாக ஏற்பட்டதெனக் கூறப்பட்டது. ஈழத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் ஆரியர் குடியேற்றம் பற்றிய கதை பௌத்த பிக்குகளால் பௌத்த மத ஜாதகக் கதைகளை மையமாக வைத்து இணைக்கப்பட்டவையாகும். மூன்றாவது பிரிவில் விஜய மன்னனுக்குப் பின் தேவநம்பியதீஸ மன்னன் வரைப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளது. இவ்வாறு மரபு வழியாகப் பேணப்பட்டு வந்த ஜாதகக் கதைகள் அதிகாரபூர்வ மன்னனின் வரலாற்றோடு இணைக்கப்பட்டதுடன் சிங்கள பௌத்தருக்குரிய முழுமையான வரலாறு தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாறு தொகுக்கப்பட்டு முழுமைப்படுத்தப்பட்ட நூலில் முக்கியமானது மகாவம்சமாகும். பௌத்த பிக்குகளால் தனியாக எழுதப்பட்ட அதிகாரபூர்வ மன்னர்களுடைய வரலாற்றோடு செவிவழி மரபாகப் பேணப்பட்டு வந்த கட்டுக்கதைப் பண்பைக் கொண்டிருந்த வடிவங்கள் இதில் இணைக்கப்பட்டதுடன் இலங்கைக்கான பூரணமான வரலாற்று நூலாக மகாவம்சம் 'மகாநாமதேரர்' என்ற பௌத்த பிக்குவால் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பூரணப்படுத்தப்பட்டது. இதில் அவதானிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால் இந்நூல் எழுதப்பட்டபோது இங்கு இரு வேறுபட்ட இன, மத, மொழிப் பண்புகளைக் கொண்ட மக்கள் காணப்பட்டனர் என்பதாகும். ஆனால் இதிலிருந்து முரண்பட்ட வகையில் இலங்கையின் தேசிய வரலாறு பௌத்தத்துடனும் சிங்கள இனத்துடனும் இணைந்த வகையில் ஐதிக அம்சங்களை உள்ளடக்கிய புனிதத்துவ நோக்குடனும் எழுதப்பட்டது. இதில் ஏனைய இனத்தின் இறைமை மறைக்கப்பட்டதோடு இப்பூமி சிங்கள பௌத்தருக்கே சொந்தமானது என்ற குரலும் உரம் பெற்றுள்ளது. இதன் உச்சக்கட்ட வெளிப்பாட்டை எல்லாளன் - துட்டகைமுனு போர் சித்தரிப்பில் காணலாம். அது உண்மையில் அரசியல் ஆதிக்கப் போராட்டமாக இருந்தும் கூட மகாவம்ச ஆசிரியர் அதனை ஒரு இனப் போராட்டமாகக் கூறிச் செல்கிறார். முப்பத்தியேழு அத்தியாயங்களைக் கொண்டுள்ள மகாவம்சத்தில் 21-32 வரையான அத்தியாயங்களில் துட்டகைமுனுவின் வீர வரலாறு கூறப்படுகிறது. இது இந்நூலின் மூன்றிலொரு பகுதியாகும். இதில் துட்டகைமுனு தன் இனத்தையும் மதத்தையும் காப்பாற்றிய ஒரு தேசிய விடுதலை வீரனாகச் சித்தரிக்கப்படுகிறான். இந்நூல் இந்துக்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்கள் தவறான நெறியினை அனுஷ்டிப்பவர்கள் என்றே சுட்டப்படுகின்றனர். இந்நூலில் எந்தவொரு இடத்தில் தானும் தமிழ் இந்துக்களும் இந்நாட்டுக்குரியவர்கள் என்ற குறிப்புக் காணப்படவில்லை. தமிழர்களைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் அவர்களை ஆக்கிரமிப்பாளர்களாகவும் புடையெடுப்பவர்களாகவும் இந்நாட்டுக்கு வந்த அன்னியர்களாகவும் அவர் குறிப்பிட்டுள்ளது அவதானிக்கத்தக்கது.

ஆனால் தொல்லியல் ஆய்வுகளும் சமூகவியல், மானிடவியல் தரவுகளும் இவற்றுக்கு முரணான வகையில் முடிவுகளைத் தந்துள்ளன. அவை இலங்கையும் தென்னிந்தியாவை ஒத்த வரலாற்றுக் காலக் கலாச்சாரப் பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டிருந்ததென்றும்; படிப்படியான அரசின் வளர்ச்சி, பண்பாட்டுப் பரவல் பற்றியும் தெளிவான சான்றாதாரங்களைத் தந்துள்ளன. மானிடவியல் ஆய்வு முடிவுகள் தென்னிந்திய - இலங்கை மக்கள் கூட்டம் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்ததென்பதையும் அது திராவிட அடிப்படை இயல்புகளைக் கொண்டுள்ளதென்பதையும் எடுத்துக்காட்டியுள்ளன. சமூகவியல் ரீதியானதும் மொழியியல் ரீதியானதுமான ஒற்றுமைகள் பல இன்றுவரை மத்தியதரை- தக்கிணதென்னிந்திய- ஈழப் பிராந்தியங்களின் தொடர்புகளைப் பற்றிய தெளிவான விளக்கங்களைத் தருகின்றன. இம் முரண்பாடான இலக்கியத் - தொல்லியல் நிலை பற்றிப் பல சிங்கள புத்திஜீவிகள் எடுத்துக்காட்டியுள்ளனர். எனினும் சிங்கள மக்கள் மத்தியில் அவை செல்வாக்குள்ள கருத்தாக மேற்கிளம்பவில்லை. இதற்கு இம்மக்கள் தம் வரலாறு எனக்கொள்ளும் தீபவம்சம், மகாவம்சம் போன்ற நூல்களில் கொண்டிருக்கும் இறுக்கமான ஈடுபாடும்; தென்னிந்தியாவோடு இவர்கள் கொண்டிருக்கும் அதிருப்தியீனமும், முக்கியமாகத் தென்பகுதி அரசியல்வாதிகள் உண்மையான சமாதானத்தை விரும்பி மக்களிடம் அதனைத் தெளிவுபடுத்த விரும்பாமையும் முக்கிய காரணங்களாகும்.

இன்று இலங்கை அரசியலில் பௌத்தமதம் கொண்டுள்ள நெருக்கமான பிணைப்பு மகாவம்சம் இட்டுக் கொடுத்த அடிப்படையாகும். அரசாங்கக் கூட்டங்களிலும், பிரதான நிகழ்சிகளிலும் பௌத்த பிக்குகள் கலந்துகொள்வதும், பிரீத் ஓதுவதும், தானம் பெறுவதும், ஆசீர்வாதம் பெறப்படுவதும் அரசியல் பாரம்பரியத்தில் நீக்கமுடியாத ஓரம்சமாகியுள்ளது. அத்துடன் இலங்கையின் முக்கிய இரு அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரண்டுக்கும் இரு பிரதான பௌத்த பீடங்களாகிய மல்வத்தை பீடம், அஸ்கிரியபீடம் ஆகியவற்றின் ஆதரவுகள் பகிரப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஒரு கிறீஸ்தவ பரம்பரையைச்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


சேர்ந்தவராக இருந்தபோதும் பௌத்த நிகழ்வுகளுக்கும், பௌத்த மேன்மைக்கும் ஆதரவளித்த தூய பௌத்தனாகவே தன்னை இனம் காட்டிக்கொண்டார். இவை பௌத் தத்தின் பிடியை மீறி இலங்கை அரசியலில் தம்மை நிலைநிறுத்த முடியாத அரசியல் தன்மையைத் தெளிவுபடுத்துகின்றன. இதனால் இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் பிக்குகளின் 'மேலான அபிலாசைகளை' வேண்டி நிற்கின் றது. ஆனால் பிக்குகளின் மகாசங் கம், மகாவம்சம் போதித்த வரலாற் றுப் பதிவை இறுகப் பற்றி நிற்கின்றது.

இம்முரண்பட்ட போக்குகளின் ஆணிவேரைப் பார்க்கையில் அது மகாவம்சம் கொண்டுள்ள வரலாற் றுப் பாரம்பரியத்தில் போய் முடிவ தைக் காணலாம். அதில் காணப் படும் தவறான பதிவுகளும் வர லாற்று முரண்பாடுகளும் சிங்கள மக்களின் மனதில் நன்றாகப் பதியவைக்கப்பட்டுள்ளன. அதனால் தான் இராணுத் தளபதியான ரென்ஸில் கொப்பேக்கடுவவின் மரணம் ஒரு துட்டகைமுனுவின் மீள் இறப்பாக சிங்கள மக்களால் துக்கத்தோடு அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் இலங்கையில் சுய அரசியல் இலாபத்திற்கு இலகுவாக மக்களை மனம் மாற்றத்தக்க மார்க் கமாகவும் இலங்கை இனப்பிரச் சினை அரசியல்வாதிகளால் நன்றா கப் பயன்படுத்தப்பட்டது. இது இன்றைய இலங்கையின் நிலைப் பாடாகும்.

இதனால் இந்நிலமை பற்றி சகல தரப்பினரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. இத்தன்மைகளின் பரிமாணங்க ளையும், பரிணமிப்புக்களையும், விளைவுகளையும் சரியாக விளங்கிக் கொள்வதன் மூலம் ஒரு தெளிவான கருத்து நிலையைப் பெறுவது சாத்தியமாகும்.

இதற்கு முதலில் உணர்ச்சி நிலையிலிருந்து மாறி அறிவு நிலை யில் இப்பிரச்சினையை அணுக வேண்டும் என்ற நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

# சொன்னவை சொன்னபடிதான்

"சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் தாயகமும் தனித்துவமும் ஏற்கப்பட்டு சுயாட்சி அமைப்பை உருவாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்."

- நவசமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின -

"இந்த நாட்டில் ஒரு யுத்தத்தை ஆரம்பித்தது பிரபாகரன் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சி அரசும், அதன் தலைவர்களுமே. யுத்தத்தை ஆரம்பித்த அவர்களே யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்தி வருகிறார்கள்."

- தேர்தலுக்கு முன் சந்திரிகா -

"தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அவர்களுக்கென ஒரு தாயகப்பகுதி வேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வில்லை."

- சிறீலங்கா சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசின் சேனநாய -

"ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் நாம் தடைகளைத் தளர்த்தியிருக்கின்ற போதிலும் அதனால் எமக்குப் பலாபலன் கிட்டும் என்று நம்புகிறோம்."

- சிறீலங்கா பாதுகாப்பமைச்சு உயரதிகாரி ஒருவர் -

"ஒரு நாட்டு இராணுவம் எதிரிகளோடு யுத்தம் செய்யலாம். ஆனால் தனது சொந்த நாட்டிலேயே யுத்தம் செய்வது அனுமதிக்கக்கூடியதல்ல. அதிலும் அப்பாவிப் பொதுமக்கள் மீது விமானத் தாக்குதல்களை நடத்துவதையும், ஷெல் தாக்குதல் களை நடத்துவதையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை."

- பத்திரிகையாளர் மத்தியில் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை -

"எமது சமாதான முயற்சிகள் தோல்வியடைய நேரிட்டால், எமது அரசியல் தீர்வு நடவடிக்கைகளுக்கு புலிகள் ஒத்துழைக்காவிட்டால், இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும் வரையில் போராட்டம் தொடரும். அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுதான்."

- படையினர் மத்தியில் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**மண்ணும் இரத்தமும் ஓட்டிய போராட்ட வாழ்வியலின் யதார்த்தம் தோய்ந்த உயிர்ப்பு மிக்க ஈழத்து இலக்கியம் பற்றிய பார்வை இன்று பரவலாக உலகத்தமிழர் மத்தியில் எழுந்துவருகிறது.**

# ஈழத்து இலக்கியம் மீதான எதிர்பார்ப்புக்களும் இயங்கவேண்டிய எழுதுகோல்களும்

உலகத் தமிழ் இலக்கியப்பரப்பில் இன்று ஈழத் தமிழ் இலக்கியம் மீதான ஓர் குத்திட்ட பார்வை உள்ளது. எதிர்பார்ப்பு அதிகமாயுள்ளது. தமிழகத்தவரினால் ஏனோ தானோவென்று கண்டு கொள்ளப்படாமலிருந்த ஈழத்து இலக்கியம் இன்று தோண்டிப் பார்க்கப்படுகின்றது; அக்கறை செலுத்தப்படுகின்றது. தமிழகத்தின் பிரபல்யமான இலக்கியப் பத்திரிகைகள் இன்று ஈழத்துப் படைப்புக்களைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. அண்மையில் வெளிவந்த 'இந்தியா ருடே' இலக்கிய ஆண்டுமலர் ஈழத்துப் படைப்புகளுக்கென்று தனியான சில பக்கங்களை ஒதுக்கியிருந்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது. 'சுபமங்களா' ஆசிரியர் ஈழத்திற்கு வந்துபோனதும் அங்கு ஈழத்துச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டதும் தெரிந்த விடயமே. மேலும் சில தமிழக சஞ்சிகைகள் அடுத்தடுத்து ஈழத்துச் சிறப்பிதழ் என விளம்பரங்கள் செய்து கொள்வதையும் காணக் கூடியதாகவுள்ளது.

இன்று ஈழத்து இலக்கியத்திற்கு இவ்வாறானதோர் சிறப்பு, எதிர்பார்ப்பு எவ்வாறு தோன்றியது என ஆராய்ந்து பார்த்தால் கிடைக்கும் ஒரேயொரு விடை 'போராட்டம்' என்பதே ஆகும். மானத்துடன் உயிர்வாழும் சுதந்திரத்திற்காகப் போராடுகின்ற மண்ணிலிருந்துதான் மகத்தான உண்மை இலக்கியம் தோன்றமுடியும். இதுதான் இன்றுள்ள எதிர்பார்ப்புகளுக்கு காரணம். இங்கு படைக்கப்படும் சாதாரண விடயங்கள்கூட தமிழக இலக்கியக்காரர்களினால் சிறப்பானதாகக் கருதப்படுகின்ற நிலையும் இன்றுள்ளது. காரணம் அந்தப் படைப்பில் எது இல்லாவிடினும் உண்மை இருக்கின்றது என அவர்கள் கருதுகின்றனர்.

சரி, தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற இங்கு ஒரு தசாப்தகாலத்தில் எந்தளவு இலக்கியங்கள் இங்கு தோன்றியுள்ளது? எத்தனை அற்புதமான படைப்புக்கள் உருவாகியுள்ளன? இந்தக் கேள்விகளை எமக்குள் நாமே கேட்டுக்கொள்ளலாம். விடை....? மௌனம்தான். அதே நேரம் தமிழகத்துப் பத்திரிகைகள் இன்று பிரசுரித்துக்கொண்டிருக்கும் படைப்புக்கள் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்ற படைப்பாளிகளுடையவை என்பதும் இங்கு குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். இந்த மண்ணில் வாழும் படைப்பாளிகளுடையவை அதிகமாக அங்கு போய்ச் சேர்வதில்லை. இன்று ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் என தமிழக வாசகர்களால் அறியப்படுகின்றவர்கள் அதிகமானோர் புலம் பெயர்ந்தோரே. இங்கு ஒரு ஆபத்தும் நிகழ வாய்ப்பிருக்கிறது. புலம் பெயர்ந்த இந்தப் படைப்பாளிகளில் சிலர் இங்கு நடைபெறும் போராட்டத்தை மாசுபடுத்தும் விதமாக எழுதிக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு தமிழக இதழ்களுடன் அதிகம் தொடர்புகள் இருப்பது போல் தோன்றுகின்றது. ஈழத்து இலக்கியம் குறித்து அக்கறை கொண்டுள்ள தமிழக இலக்கியகர்த்தாக்களும், சஞ்சிகையாளர்களும் இவ்விடயம் பற்றிய தெளிவுடன் செயற்படுதல் அவசியமானது. புலம் பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களில் பலர் இந்த மண்ணிலிருந்தும், போராட்டத்திலிருந்தும் விலகி நிற்பவர்களாகவே உள்ளனர். சிலர் இந்தப் போராட்டத்தையும் போராடுகின்றவர்களையும் விமர்சிப்பவர்களாக, குறைகூறுபவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் எழுதும் படைப்புக்களில் இந்தச் சாயல்கள் தென்படுவதை அநேகமாக அவதானிக்கலாம். அதேநேரம் புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் அனைவருமே இவ்வாறானவர்கள் என்பதும் கருத்தல்ல.

இந்நிலையில் இம்மண்ணில் வாழும் எழுத்தாளர்கள்தாம் புலம் பெயர்ந்த இத்தவறான எழுத்துக்களை மீறி 'உண்மை' அங்கு பரவ வகை செய்யவேண்டும்.

புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் தங்களது சமகால வாழ்வுநிலை பற்றி எழுதட்டும். இருப்பிழந்து அந்நியப்பட்டு நிற்கும் உணர்வுகளை இலக்கியமாக்கட்டும் தமிழீழத்தின் சமகாலத்தையும், போராட்ட நிகழ்வுகளையும் அங்கிருந்தபடி கற்பனையில் பார்த்து எழுதுவதை நிறுத்தினால் நல்லது. அதனை இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்தான் செய்யவேண்டும். செய்யமுடியும்.

**- விவேக் -**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# வளரும் தூய தமிழ்

தமிழீழத்தில் எல்லாமே தூய தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்துக் கடைகளின் பெயர்களிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இயக்கத்திலும் புதிதாக ஆரம்பிக்கின்ற யாவும் தூய தமிழ் மொழிக்குட்பட்டே ஆரம்பிக்கின்றன. இயக்க சத்தியப் பிரமாணம் தூய தமிழ் மொழியில் சொல்லப்படுகின்றது. 15-8-94 லிருந்து தூய தமிழில் உறுதியுரை சொல்லப்படுகின்றன.

திரு. இளங்குமரன், திரு. தமிழேந்தி, பண்டிதர் பரந்தாமன், பேராசிரியர் சண்முகதாஸ், திரு. சொக்கன் ஆகியோர் இதற்காக உழைக்கின்றனர். இவர்கள் விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பில் செயற்படுகின்றனர்.

# சரித்திரத்தை வென்ற சாட்சிகள்

## மிக நேர்த்தியான- காலத்திற்கு ஏற்ற முன்னேற்பாடு; அழிவை அகற்றிடப் புதிய புறப்பாடு!

**தமிழீழ வைப்பகம்!**

மிகப் பெரிய போராட்டத்திற்கிடையே புதுப்பிக்கப்பட்ட புரட்சி வெடி. எப்படி உங்களால் மட்டும் போரை ஒரு தோளிலும் ஆக்கத்தை மறு தோளிலும் சுமக்க முடிகிறது?

மனிதன் ஒரு துறையைச் சார்ந்திருக்கும் போது மறுதுறையின் தேர்ச்சி தாழ்வுறும்; முழுமை பெறாது என்ற அறிவியல் தத்துவத்தை எப்படி நீங்கள் மட்டும் அழித்து அகற்றினீர்கள்?

போராட்டத்தின் நடுவிலே- சமூகம், சமயம், பொருளாதாரம், பண்பு, மேம்பாடு யாவும் சிறந்து விளங்க விடுதலைப் புலிகளார் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் முன்னேற்பாடுகளையும் மிக நேர்மையாகப் பாராட்டுகிறேன்!

விடுதலைப் புலிகளார் உலகின் மிக நுட்பமான போர்வீரர்கள்; இவர்களின் ஆற்றல் அளவிடற்கரியது என்பதை உலகம் புரிந்துகொள்ளும் காலம் வெகுதூரமில்லை.

வைப்பகம் நாம் பொருளைப் பத்திரப்படுத்தும் இடம் மட்டுமல்ல; நம் சுதந்திரத்தைச் சிறுகச் சிறுக சேமித்து முதலீடு செய்திடும் ஆளுமைச் சான்றாகும்.

நாம் எதிர்நோக்கும் பொருளாதாரக் குறைபாடுகளை நீக்குவதற்கு ஏற்ற அரிய செயல் முதலீடே வைப்பகம்.

சீரிய கணக்கியல் முறை; நேர்மை காத்திடும் மனசாட்சி; பிறர் உதவிக்கு சம்மதம் தெரிவிக்கும் நெறி; பொருளைக் கொண்டு பொருள் சேர்க்கும் திறன் ஆகிய கூறுகளே வைப்பகத்தை வளம்பெறச் செய்யும்.

போராட்ட மக்களால் போராட்ட மக்களுக்காக போராட்ட சூழலிலே போராட்டத்தை முன்னிறுத்தி உலகில் முதலாக உருவாக்கப்பட்ட வைப்பகமாக தமிழீழ வைப்பகம் திகழும்.

தொடருங்கள் தோழர்களே!

வெற்றி நம்மைத் தேடிப் புறப்பட்டுவிட்டதாக சில செய்திகள் கிடைத்துள்ளன.

இனி நம் போராட்டத்தை முடுக்கிடுவோம்; இனி வெற்றி நமதுதான்!

சீ. அருணாசலம்
பகாங், மலேசியா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'சுதந்திரக்கீற்று'



'ஜீவயாகம்' இசை நாடகத்தில்



'யமதர்பார்' நாடகத்தில் வரும் காட்சி

பிரான்சில் தமிழ்ப் பெண்கள் அமைப்பு சுதந்திரக்கீற்று எனும் கலாநிகழ்வொன்றினை 11.09.94 அன்று நடாத்தியது. தமிழ்ப் பெண்கள் அமைப்பின் இக்கலை நிகழ்வு குறிப்பிடத்தக்கதே. சமூக அக்கறையும், விழிப்புணர்வும், விடுதலை அவாவும் கொண்ட கலைப்படைப்புக்களை அது தாங்கியிருந்தது.

சுதந்திரம் வேண்டி நிற்கும் எமது தேசத்தின் விடியலில் இருந்து பரவும் ஒளிக்கீற்று, புலம் பெயர்ந்தோர் வாழ்வின் இருள் துயரம் கிழிபடப் பாயும் துடிப்பு இருந்தது. தமிழீழத்தில் அனைத்துலக மகளிர் தின விழா, தமிழீழ மக்களினது முன்னேற்றச் செயற்பாடுகள் அகப்புற வளர்ச்சிகள் என்ற பல்வேறு பரிணாம வளர்ச்சிப் போக்குகளை 'ஒளிவீச்சு' மூலம் தரிசிக்கக்கூடியதாக இருந்தது. விடுதலைப் போராட்ட வேகத்துடன் வளர்ச்சியுறுகின்ற எங்கள் தமிழீழப் பெண்களுக்கு நிகரானவர்களாக நிற்கவேண்டும் என்ற தாகம் கொள்ளவைக்கும் உயரிய சிந்தனைத் தெறிப்பை ஏற்படுத்தியது இக்கலை நிகழ்வு. பெண் சமுதாயத்தில் ஏற்படும் விரைவான மாற்றத்தைக் காட்டிய சத்திய தரிசனமாக அமைந்தது.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "தாயுமாய் நாயுமானார்" எனும் நாடகம் இறுதி நிகழ்வாக அரங்கேறியது. இதில் கலந்து கொண்டவர்களின் நடிப் பாற்றல் திறன் வளர்ச்சி அடைந்திருப்பதை பார்வையாளர்கள் பலரும் அக்கறையோடு சுட்டிக்காட்டினர். இந்நாடகம் தொட விழைந்த கருப்பொருள் சாதாரணமாக எங்களின் ஒரு வீட்டுக்குள்ளே நடப்பதுதான்; பெண் அடக்குமுறை. இதனால் பலரிடையே இக்கதை தாக்கத்தை ஏற்படுத்தியது. பெண் அடக்குமுறை பல் வேறு வடிவங்களில் இருந்த போதும் இது குடும்ப உறவுகளில் வேரூன்றியே பரவுகிறது. வீச்சுமிக்க வசனங்கள் சாதாரண பேச்சுவழக்கில் வரும்போது சூடேற்றுகின்றன.

சமகால யதார்த்தப் போக்கிடையே சில முரண்பாடுகளைக் கொண்டிருந்த போதும் அந்நாடகம் எழுந்த மாறுகின்ற நடைமுறையை துல்லியமாகப் படம்பிடித்திருக்கிறது. கலைகள் உண்மையைத் தரிசிக்கின்றன. மனிதனின் அகத்தில் ஆழமான பல உணர்வுகளைக் கிளறிவிடுகின்றன. இன்று மனித வாழ்வில் கலைகள் முக்கிய இடத்தை வகிப்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே இத்தகைய கலை நிகழ்வுகளைப் பார்ப்பதில் புதிய அக்கறை எம்மவர்களிடம் இன்னும் பரவலாக ஏற்படவேண்டும்.

புலம்பெயர்ந்த எமது மக்களிடம் இக்கலை நுகர்வு மென்மேலும் வளரவேண்டும். அத்தகைய வளர்ச்சிப் போக்கு சமூக ஆரோக்கியப் பேணலுக்கு உறுதுணையாக விளங்கும். கலையை தரிசிக்கின்ற போது எம்மில் தொற்றிக்கொள்கின்ற மகிழ்ச்சி, கசிவு, அது தருகிற புதுத் தென்பு எப்போதும் எம்மிடை எழவேண்டும்.

இயந்திர வாழ்வியக்கத்துள் - நனவிடைதோயும் வாழ்விடை- ஆற்றில் போட்டு குளத்தில் தேடுகிறவர்களாய் வாழ்க்கையை எங்கோ தேடுகிற எமக்கு உண்மையில் ஒரு வெளிச்சத்தைத் தரவல்லது கலை, இலக்கியங்களே. இந்த எண்ணத்தின்பால் இயங்கிய "சுதந்திரக்கீற்று" நிகழ்வு மென்மேலும் புதிய பல சுடர்களை ஏற்றும் என்று நம்பலாம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


**மிகவும் பலம் பொருந்திய இந்திய இராணுவ அதிகாரிகளையும் படையினரையும் அழித்து எம் நாட்டைவிட்டு விரட்டி உலகையே வியப்பிலாழ்த்திய தலைவர் பிரபாகரன் அவர்களிடம் பயின்ற போராளிகளாகிய எங்களுக்கு, சாவு என்பது சாதாரணமான ஒன்றுதான். எனினும் மிகவும் இக்கட்டான நிலைகளில் எம்மோடு கூடவே இருந்த சக போராளிகளுக்கு ஏற்படும் சாவு எமக்கு வேதனை தராமல் இருப்பதில்லை.**


ஓவியம்: ஜக்குலின்

# பாய்வதற்காகப் பதுங்கிய புலிகள்

**- சுகி -**

அது ஒரு காலம்.

தமிழீழ மண் இந்திய இராணுவத்தால் பரவலாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து, மறைந்து நின்று இராணுவத்தைத் தாக்கிவிட்டு மீண்டும் ஓடி மறைந்து கொண்டு தம்மை மேலும் பலப்படுத்துவதற்காக முயன்றுகொண்டிருந்த காலம். இந்திய இராணுவத்தினரை எம் மண்ணிலிருந்து முற்றாக விரட்டவேண்டும் என்று தீர்மானித்த எம் தலைவர், போராளிகளுக்கான சிறந்த பயிற்சிகளையும், தாக்குதலுக்கான ஆயத்தங்களையும் போர் யுக்திகளையும் பயிற்றுவித்து அவர்களைச் சிறந்த போர் அணியாக உருவாக்குவதற்கு வன்னிப் பகுதியில் பாசறைகளைத் தேர்ந்தெடுத்தார். பயிற்சிக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருந்த காலகட்டத்தில்தான், பெண் போராளிகளின் சில குழுக்களும் அங்கே அழைக்கப்பட்டன.

அங்கே போனதும் எமக்கு இது காடுதானா, அல்லது ஒரு சிறிய கிராமமா என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆங்காங்கே எதிரிக்குத் தெரியாமல் இருப்பதற்காக உருமறைக்கப்பட்ட பல கொட்டில்களும் எந்நேரமும் ஏதோ ஒன்றுக்காக இயங்கிக் கொண்டிருக்கும் போராளிகளுமாக.... இவையெல்லாவற்றையும் பார்க்கும் பொழுது எமக்கு ஓர் புத்தெழுச்சி ஏற்பட்டது. அங்கு போன சில நாட்களுக்குள்ளேயே நாங்களும் ஓர் இடத்தைத் தெரிவு செய்து, அங்கே கொட்டில்கள் அமைத்து, கிணறு வெட்டி, காவலரண்கள் அமைத்து.... எமக்குத் தேவையான சகல வேலைகளையும் செய்துகொண்டிருந்தோம். சில வேளைகளில் பெண் போராளிகளுக்கும் ஆண் போராளிகளுக்கும் இடையில் போட்டிகளும் நடப்பதுண்டு. உதாரணமாக ஒருநாள் கிணறு வெட்டுகின்ற வேலையில், அன்று மூன்று அடிக்கு மேல் வெட்டவேண்டும் என்று இரு தரப்பினருக்கும் கூறப்பட்டது. சொன்னதுதான் தாமதம் கப்டன் அஞ்சனாவும், மேஜர் சஞ்சிகாவும் உடனேயே நான், நீ என்று போட்டியிட்டவாறு கிணற்றுக்குள் இறங்கிவிட்டார்கள். இருவரும் களைத்ததும் மற்ற இருவர் வெட்டினர். மாலை ஐந்து மணியளவில் நாம் வெட்டிய ஆழம் அளந்து பார்க்கப்பட்டது. ஏறத்தாழ மூன்றரை அடிக்கு மேல் இருந்தது. இரு தரப்பிலும் ஒரே அளவுதான் வெட்டப்பட்டிருந்தன. அனைவரும் மகிழ்ச்சியுடன் மீண்டும் தண்ணீர் காணும்வரை வெட்டிக்கொண்டிருந்தோம்.

இதேபோல்தான் படிப்புகளிலும் பயிற்சிகளிலும் கண்ணிகள் வைப்பதிலும் வேறுபல விடயங்களிலும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போட்டிகள் வைக்கப்பட்டு ஒரு வேகத்துடன் நாம் வளர்க்கப்பட்டோம். பெண் போராளிகள் விடயத்தில் தலைவர் மிகுந்த ஊக்கமும், முயற்சியும் கொண்டிருந்தார். இந்திய இராணுவத்தினர் எமது பாசறையைச் சுற்றி சில இடங்களில் தளம் அமைத்திருந்தனர். சித்திரை மாதமளவில் இந்தியப்படை பாசறையை நோக்கி முன்னேறத் தொடங்கிவிட்டது. எல்லையில் உள்ள போராளிகளின் தளத்தைத் தேடி வந்துகொண்டிருந்த பொழுது எதிர்பாரதவிதமாக எம்மவர்கள் இந்திய இராணுவத்தினர் மேல் தாக்குதல் நடத்தினர். இம் மோதலில் சிலர் காயமடைந்தனர். உயிரிழப்புக்களும் ஏற்பட்டன. போராளிகளின் அனைத்து முகாம்களும் உசார்படுத்தப்பட்டு இருந்தன.

அன்று ஒருநாள் இந்தியப்படை எம்மைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்ததாகச் செய்தி கிடைத்தது. எதிரியைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், சுற்றிவளைத்துத் தாக்குவதற்காகவும் பெண்கள் அணி உட்பட சில குழுக்கள் சென்று காவலில் நின்றன. தான் காவல் நின்ற பக்கமாக இராணுவத்தினர் ஓடி வருவதைக் கண்ட கப்டன் போரா உடனே சுட்டார். எதிர்த்தாக்குதல் எதுவுமே செய்யாமல் இராணுவம் திரும்பிவிட்டது. எம்மவர்கள் முன்னேறி சென்று பார்த்து எதிரி ஓடிவிட்டதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

எமது பாதுகாப்புக்கென நாம் புதிய தளங்களை அமைத்தோம். அவற்றில் ஒன்று கப்டன் சதீஸ் அவர்களுடன் நாம் சென்று அமைத்த தளமாகும். இந்தத் தளத்தை அமைப்பதற்கு பெண்கள் குழுவும் சென்றது. அங்கே சென்றதும் கிணறு வெட்டுவதற்கான இடம் தெரிவுசெய்யப்பட்டு, வெட்ட ஆரம்பித்தோம். அங்கே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. வேறு இடம் சென்று (ஏறத்தாழ ஒரு மைல்) அங்கிருந்துதான் நீர் எடுத்துவர வேண்டும். அவ்விடத்திலும் போதியளவு நீர் இல்லை. இருப்பதை எடுத்து அளவாக நீரைப் பிரித்துக் குடித்தோம். சாப்பாடு ரொட்டி மட்டும். அதுவும் அளவுதான். அங்கே குளிக்கமுடியாது. ஒரு வாரத்துக்குப் பின் பழைய தளத்துக்குச் சென்றுதான் குளித்து வருவோம். மாறி மாறி அப்புதிய தளத்தின் எல்லா வேலைகளும் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. கிணற்றில் தண்ணீரும் வந்துவிட்டது. இனிமேல் தண்ணீர்ப் பிரச்சினை இல்லை. மற்றைய வேலைகள் நடந்துகொண்டிருந்தன. எமது பாசறை அருகில், நித்திகைக்குளம் என்ற இடத்தில் இந்தியப்படையின் தளம் அமைக்கப்பட்டிருந்தது. அது பெரிய இடமாக விரிவாக்கப்பட்டிருந்தது. உலங்குவானூர்திகள் வந்து இறங்கும், நிற்கும் இடமாக இருந்தது. திட்டமிடப்பட்ட முறையில் மேஜர் கமல் அவர்களால் ஓர் உலங்குவானூர்தி மீது R.P.G. தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஒரு உலங்குவானூர்தி பலத்த சேதமடைந்தது. உடனேயே எம்மவர்கள் பின்வாங்கிவிட்டனர்.

இந்த இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத இந்தியப் படையினர், நாம் புதிய தளம் அமைத்துக் கொண்டிருந்த இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள வெட்டை ஒன்றில் இறங்கி எம்மைத் தாக்க முயன்றனர். அவ் வெட்டையை நோக்கி உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டு கொண்டிருந்தபோது கப்டன் அஞ்சனா, கப்டன் உஷா, கப்டன் சதீஸ் உட்பட்ட ஒரு குறிப்பிட்ட போராளிகளைக் கொண்ட குழு அங்கு சென்று, தரையில் துருப்புக்களை இறக்குவதற்கு பதிந்துகொண்டிருந்த உலங்குவானூர்தி மீது சுட்டது. உடனே உலங்குவானூர்தி தன் முயற்சியைக் கைவிட்டு மேலெழுந்து சென்றுவிட்டது. இந்த அவமானத்தைத் தாங்கமுடியாத இந்திய இராணுவம் அவ்விடத்தை நோக்கி தாறுமாறாக வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுச் சென்றுவிட்டது. அனைவரும் அதன் பின் முகாம் திரும்பினோம்.

அன்று மாலை ஐந்து மணியளவில் கப்டன் உஷாவும் நானும் பழைய தளத்துக்கு ஓர் வேலையாக வந்து அங்கே இரவு தங்கிவிட்டோம். இழப்புக்களையும் அவமானத்தையும் தாங்கமுடியாத இந்தியப் படை எமது புதியதளம் நோக்கி எறிகணைத் தாக்குதலை நடாத்தியது.

புதிய தளத்தில்...

அன்று இரவு ஒன்பது மணியளவில் காவலில் நின்ற ஆனந்தி அடுத்த போராளியை எழுப்புவதற்காக வந்த வேளையில் எறிகணை கொட்டில் அருகில் விழுந்தது. அனைவரும் எழும்பி பதுங்கு குழியினுள் ஓடினார்கள். உள்ளே போய்ப் பார்த்தபோது இன்னும் மூன்று போரைக் காணவில்லை. சத்தம் போட்டுக் கூப்பிட்டுக் கொண்டு வெளியே ஓடிவந்து பார்த்தார்கள். அங்கே "நாங்கள் காயப்பட்டு விட்டோம். வந்து தூக்குங்கள்" என்று குரல் கேட்டது. அங்கே ஓடிச்சென்றபோது ஆனந்தியும், வேறு இருவரும் காயமடைந்திருந்தனர். உடனே பதுங்குகுழியினுள் கொண்டு சென்று சிகிச்சையளிக்கப்பட்டது. எல்லோரும் சரியா என்று மீண்டும் எண்ணிப் பார்த்தபோது ராதையைக் காணவில்லை. உடனே இருவர் கொட்டிலினுள் ஓடிச்சென்று பார்த்தார்கள். அங்கே ராதை நிமிர்ந்தபடியே படுத்துக் கிடந்தார். உடனே "ராதை... ராதை எழும்பு எழும்பு" என்று உலுப்பினார்கள். "ராதை ஏன் இப்படிக் கிடக்கின்றார்? ஏதோ நடந்துவிட்டது" என்று எல்லோருக்கும் விளங்கிவிட்டது. உடனே பதுங்கு குழியுள் இருந்தவர்களுக்கு ஓடிப்போய்ச் சொன்னார்கள். இதற்கு இடையில் எறிகணைத் தாக்குதலும் நின்றுவிட்டது. சிகிச்சையளிப்பவர் ஓடிச்சென்று ராதையின் கையைத் தூக்கி நாடி பார்த்தார். எதுவுமே இல்லை என்று தலையாட்டினார். எல்லோருமே ராதையைப் பார்த்தபடி மௌனமாக நின்றார்கள். இரண்டு கைக்குண்டுகள் தான் ராதையின் சொத்தாக இருந்தன. அவற்றை அவர் தன் தலைமாட்டில் வைத்துத்தான் வழமையாகப் படுத்து இருப்பார். அன்று அவற்றில் ஒரு குண்டு இரண்டு, மூன்று துண்டுகளாகப் பிளந்து கிடந்தது. இந்தச் சம்பவத்தை அங்கு நின்ற போராளிகள் பின்பு எம்மிடம் கூறினார்கள்.

அடுத்தநாட் காலை பழைய

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


களத்துக்கு ராதை வீரச்சாவடைந்த செய்தி அறிவிக்கப்பட்டது. எவருமே இதை எதிர்பார்க்கவில்லை. இறுதி நிகழ்வுக்கான ஆயத்தங்களைச் செய்யும்படி கூறப்பட்டது. உடனே மனதைத் திடப்படுத்திக்கொண்டு எல்லா ஆயத்தங்களையும் செய்து விட்டு, காத்துக்கொண்டு இருந் தோம். சில மணிகளின் பின் காயப் பட்டவர்களையும் ராதையையும் கொண்டு வந்தார்கள். காயப்பட்ட வர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டுக்கொண்டிருந்தது. ராதையின் அருகில் யாவரும் மௌனமாக நின்றனர். எல்லோர் முகங்களிலும் சோகம். மாலை நான்கு மணியள வில் அடக்கம் செய்வதற்கு ஆயத் தம் செய்யப்பட்டன. சரியாக நான்கு மணிக்கு ராதையின் உட லைத் தூக்கிச்சென்று, அவருக்கான கடைசி மண்ணை அனைவரும் போட்டோம். இறுதியில் அவரது புதைகுழி முழுதாக மூடப்பட்டது.

மீண்டும் களத்துக்கு வந்து காயப்பட்ட ஏனையவர்களைக் கவனித்த பொழுது ஆனந்தியின் உடல் மட்டும் வெளிறியிருந்தது. கண்களும் அதேபோலத்தான். எல்லோரையும் கண்களை வெட்டி வெட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். எந்த ஒரு வார்த்தையையும் பேசினாரில்லை. ஏதோ சொல்ல வாயெடுக்கிறார், இயலவில்லை. காயமடைந்ததில் ஏற்பட்ட நோவி னால் கூடக் கத்தவுமில்லை. பதுங்கு குழியினுள் இறக்கி சிகிச்சை செய்த பொழுது கூட, உடல் அசைந்து நோவேற்படும் போதுகூட சத்தம் போடவில்லை. அனைவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொள்வதை மட்டும் நிறுத்தவில்லை. அனைவருக் கும் சிகிச்சையளிக்கப்பட்டு இரவு எல்லோரும் உறங்கிவிட்டனர். நாமும் உறங்கிவிட்டோம். அடுத்த நாள் காலை காயப்பட்டவர்களின் உடல்கள் பரிசோதிக்கப்படடது. ஆனந்தியின் உடலில் துடிப்பு நின்றுவிட்டது. இரவோடிரவாக எதுவுமே பேசாமல் நித்திரையோடு நித்திரையாக எமைவிட்டுப் பிரிந்து விட்டிருந்தார்.

மிகவும் பலம் பொருந்திய இந்திய இராணுவ அதிகாரிகளையும்

# சிந்தனை செய்யாத உடன்படிக்கை

ஓர் ஆட்டுமந்தை ஒரு காட்டுப் பகுதியில் மேய்ந்துகொண்டிருந்தது. மந்தையில் நூற்றுக் கணக்கான ஆடுகள் இருந்தன.

அந்த ஆடுகளுக்கு ஒரு நாயைக் காவலாக வைத்துவிட்டு இடையன் எங்கோ சென்றிருந்தான்.

சற்றுத் தொலைவிலிருந்து சில ஓநாய்கள் ஆடுகள் மேய்வதைக் கவனித்தன.

ஏதாவது ஒரு தந்திரம் செய்து ஆடுகளை அடித்துத் தின்னவேண்டும் என அவை திட்டமிட்டன.

நாய்க்குத் தெரியாமல் ஒரு ஓநாய் அந்த மந்தையின் ஆடுகளில் மூத்ததாக இருந்த ஓர் ஆட்டை அணுகியது.

"ஆடு அண்ணா வணக்கம். தலைமுறை தலைமுறையாக உங்களுக்கும் ஓநாய்களான எங்களுக்குமிடையே பகைமை உணர்ச்சி நிலவுகின்றது. இது அவ்வளவு விரும்பத்தக்கதே அல்ல. இந்த நிலையை அடியோடு மாற்றி இனி ஆடுகளும், ஓநாய்களும் நட்புறவுடன் அண்ணன் தம்பிகள் போல வாழவேண்டும் என்று ஓநாய்களான நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம். எங்கள் தீர்மானம் முழுமையாக நிறைவேற உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை. நீங்களெல்லாம் எங்களுடன் ஏன் நட்புறவு கொள்ளக்கூடாது?" என ஓநாய் கூறியது.

மூத்த ஆடு யோசித்தது. ஓநாய்களுடன் நட்புறவுகொள்ள நேர்ந்தால் காடுகளில் பயமில்லாமல் போகலாம். ஓநாய்களால் எந்தவித ஆபத்தும் ஏற்படாது. ஆகவே ஓநாய்களுடன் நட்புறவு கொள்வது நல்லதுதான் என அது நினைத்தது.

மூத்த ஆடு மற்ற ஆடுகளையும் சென்று கலந்துகொண்டு யோசனை கேட்டது.

எல்லா ஆடுகளுமே ஓநாய்களின் தீர்மானத்தை வரவேற்றன.

ஆடு ஓநாயிடம் திரும்பிச் சென்று "ஓநாய் நண்பனே உங்கள் இனத்துடன் நட்புறவுகொள்ள நாங்கள் அதிக ஆர்வமும் அக்கறையும் காண்பிக்கின்றோம்" என்று கூறியது.

"மிக்க மகிழ்ச்சி, ஆனால் நம்முடைய நட்புறவுக்கு உங்களுக்குக் காவலாக இருக்கும் நாய் பெரிய இடையூறாக இருக்கின்றதே.

இந்த நாய் இங்கே இருக்குமட்டும் நம்மால் நட்புறவோடு பழகுவது சாத்தியமே இல்லை. அதனால் நீங்கள் எல்லோரும் சேர்ந்து நாயை இந்த இடத்தைவிட்டுத் துரத்திவிடுங்கள்" என ஓநாய் ஆலோசனை கூறியது.

ஆடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நாயுடன் மோதி அதை அங்கிருந்து விரட்டிவிட்டன.

தங்கள் சூழ்ச்சி பலித்தது கண்டு பெருமகிழ்ச்சி அடைந்த ஓநாய்கள் கும்பலாக ஆட்டுமந்தை மீது பாய்ந்து பெரும்பான்மையான ஆடுகளை அடித்துக் கொன்று தின்றுவிட்டன.

உங்கள் எதிரிகள் உங்களிடம் காரணமில்லாமல் சமரசப் பேச்சுப் பேச முன் வருகிறார்கள் என்றால் அதில் ஏதோ சூழ்ச்சி இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து எச்சரிக்கையாகச் செயற்படவேண்டும்.

அத்துடன் யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக நீண்டகாலமாக நட்புறவாகவும், பாதுகாவலர்களாகவும் உள்ளவர்களை விரோதித்துக் கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்வதால் நன்மைகளைவிட தீமைதான் அதிகம்.

- ஈசாப் நீதிக்கதை -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படையினரையும் அழித்து எம் நாட்டைவிட்டு விரட்டி உலகையே வியப்பிலாழ்த்திய தலைவர் பிரபாகரன் அவர்களிடம் பயின்ற போராளிகளாகிய எங்களுக்கு, சாவு என்பது சாதாரணமான ஒன்றுதான். எனினும் மிகவும் இக்கட்டான நிலைகளில் எம்மோடு கூடவே இருந்த சக போராளிகளுக்கு ஏற்படும் சாவு எமக்கு வேதனை தராமல் இருப்பதில்லை. ஆனந்திக்கும் ராதையின் அருகில் புதைகுழி வெட்டி அவளை அடக்கம் செய்கிறோம்.

அடுத்த நாள் இந்திய வானொலிச் செய்தியில் (கப்டன் அஞ்சனா, கப்டன் உஷா, கப்டன் சதீஸ் முதலியோர் வெட்டையில் உலங்குவானூர்தி மீது நடத்திய தாக்குதலில்) அதிகாரி பந்த் என்பவர் காயமடைந்து இறந்ததாகக் கூறப்பட்டதாக எமக்குத் தலைவர் தெரியப்படுத்தினார். எம்மவரின் இழப்பினால் கவலையடைந்திருந்த அனைவருக்கும் இச் செய்தி மகிழ்ச்சியைத் தந்தது.

இந்திய இராணுவம் காட்டிலே இருந்த எமது தளங்கள் சிலவற்றை வேட்டையாடி அழித்துவிட்டது. ஏனைய தளங்கள் யாவும் தயார் நிலைப்படுத்தப்பட்டு இருந்தன. அந்தவேளையில் அத்தியாவசியமான பொருட்கள் எடுத்துக் கொண்டு வருவதற்குக்கூட நீண்ட தூரம் செல்லவேண்டும். மிக அவதானமாகவும், வேகமாகவும் சென்று தேவையான பொருட்களை பல சிரமங்களுக்கு மத்தியில் எடுத்து வருவோம். சில நாட்களில் பொருட்களை எடுத்து வரமுடியாத இக்கட்டான நிலைகூட ஏற்பட்டிருக்கும்.

தாக்குவதற்காக இந்திய இராணுவத்தின் வரவை எதிர்பார்த்துப் பார்த்து காவலரண்களில் காத்துக் கிடந்த நாட்களும் உண்டு. அரண்களிலிருந்து பதினைந்து யார்கள் தள்ளித்தான் உறங்குவோம். சாப்பிடுவது கூட அவ்விடத்தில்தான். குளிப்பு, முழுக்கு என்பவற்றை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இரவும் பகலும் காவற் கடமை தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

## பெண்ணினம் புரட்சிகர சக்தியாக எழுச்சிகொண்டு நிற்கிறது.

**நாம் ஒடுக்கப்பட்டுவரும் ஒரு மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும், எமது வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கி ஒடுக்கி வருகிறோம். இப்படியாக எம்மத்தியில் நிலவி வரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை. பழைமை வாதத்திலும் மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக்காலம் தொட்டே பெண் அடிமைத்துவத்தை நியாயப்படுத்தி வருகின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்ற பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது; அவர்களது வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது.**

**எமது சமூகத்தின் சனத்தொகையின் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல்மயப்படுத்தி போராட்டத்திற்கு அவர்களை அணி திரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழ பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கின்றது.**

தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

கொஞ்ச நாட்களாக அங்கே உணவுக்குக்கூட பற்றாக்குறை ஏற்பட்டது. பொதிகட்டப்பட்ட சோயா இறைச்சிதான் அந்த நாட்களில் காலை, இரவு நேர உணவாகவும் இருக்கும். இப்பொதிகளை மூன்று நான்கு என சட்டைப் பைகளுள்ளும், மேலதிக ரவைக்கூடு வைக்கும் அணியிலுள்ளும் வைத்திருப்போம். நாளடைவில் அதுவே எமக்குச் சுவையான உணவாகப் போய்விட்டது. போட்டி போட்டுக்கொண்டு சமையல் அறையில் போய் சோயா இறைச்சிப் பொதிகளை எடுத்து வருவோம்.

இப்படியாக இருக்கும் போது தான் ஓர் நாள் நாமிருந்த தளத்தை நோக்கி ஒரு எதிரிக்குழு வந்து கொண்டிருந்தது. ஆண்போராளிகளின் காவாலாளி அவர்களைக் கண்டதும், திடீரென திசைப்புறும் வண்ணம் அவர்கள் மேல் சுட்டார். சூட்டுச் சத்தம் கேட்ட நாமும் மேஜர் சஞ்சிகா உட்பட அத் திசையை நோக்கிச் சென்று நிலையெடுத்துச் சுட்டோம். ஆண்போராளிகளும் சுட்டுக்கொண்டு எம்மிடம் சரணடையும்படி எதிரியை நோக்கிக் கத்தினார்கள். இராணுவத்தினரும் எழும்பி ஓடமுடியாமல், விழுந்து கிடந்து சுட்டனர். இதைக் கண்ட லெப். கேணல் நவம் உட்பட சில போராளிகள் சுற்றி நிலையெடுத்துத் தாக்குதல் தொடுத்தனர். சிறிது நேரத்தின் பின் எதிரித் தரப்பிலிருந்து வந்த சூடுகள் நின்றுவிட்டன. எனவே பொறுப்பாளரின் கட்டளைப்படி சுட்டுக்கொண்டு முன்னேறி, அவ்விடத்தை அடைந்து, தேடி இறந்த இராணுவத்தினரின் உடல்கள், ஆயுதங்கள், அங்கும் இங்குமாகச் சிதறுண்டு கிடந்த குண்டுகள், ரவைக்கூடுகள் எல்லாவற்றையும் பொறுக்கி எடுத்துப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தோம். பத்து இராணுவத்தினரின் உடல்கள் எம்மால் கைப்பற்றப்பட்டு புதைக்கப்பட்டன. அன்றைய தாக்குதலை வெற்றிகரமாக முடித்துத் தளத்துக்குத் திரும்பினோம்.

எம் மண்ணில் இந்திய இராணுவத்தினர் தமது அநாகரிகமான நடவடிக்கைகளை ஆரம்பித்த நாள் தொட்டு தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த எங்களுக்கு, நீண்ட நாட்களாகக் காவலரண்களில் காத்துக் கிடந்தவர்களுக்கு இத்தாக்குதல் மன நிறைவைத் தந்தது. புலி பதுங்குவது பாய்வதற்குத்தான் என்பதை அறியாத இவர்களுக்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டாக இருந்திருக்கும்.

புலியின் இயல்பை அவர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாமல் போனதால்தான் எம்மண்ணில் அவர்கள் தோல்வியடைய நேர்ந்தது.

**நன்றி: 'சுதந்திரப் பறவைகள்'**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




திரு. பா. தனபாலன் அவர்கள் தன்னுடைய ஆளுமைகளைப் பல்வேறு இலக்கிய ஆக்கங்கள் மூலமும், ஆசிரிய சேவை மூலமும் வெளிக்காட்டி வருகின்றார். புதிய சமூகப் பார்வை உடைய இவ் இளைஞரின் தேடல்களின் விளைவாக பல கட்டுரைகளும், சிறுகதைகள் மற்றும் ஆக்கங்களும் கடந்த ஏழு வருடங்களாக வெளியாகி வருகின்றன.
இவரது "அறிவியல் சிந்தனை அலைகள்" நூலிலிருந்து...

**"திரைப்படவியல் 20ம் நூற்றாண்டின் புதியதோர் கலைவடிவம்"**

❁❁❁

**"மனித இதயங்களைக் கிழித்து அதில் புதைந்திருக்கும் சிக்கல்களையும் புறழ்வுகளையும் புதிரான உணர்வுகளையும் வெளிப்படுத்த ஒளியும் நிழலும் பாய்ந்த கலை ஊடகமாக திரைப்படத்துறை வளர்ந்துள்ளது"**




திரைப்படவியல் இருபதாம் நூற்றாண்டின் புதியதொரு கலைவடிவமாகும். பொதுவாக இயல், இசை, நாடக அழகியற் கலை வடிவங்களின் பரிணாம வெளிப்பாடாக இத்துறை வளர்ந்த துடன் பல விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளின் துணையுடன் இன்று உலக மக்களை ஈர்க்கும் உன்னத கலை வடிவமாகத் திரைப்படவியல் விளங்குகின்றது.

இதுவரையில் மனிதர்களுக்குக் கிடைத்துள்ள கலை வடிவங்களில் சர்வதேச ரீதியாகப் பொதுமை கொண்ட கலை வடிவமாக உள்ள சினிமாத்துறை வெவ்வேறு நாடுக ளில் பல்வேறு தனித்துவங்களுடன் தயாரிக்கப்பட்டு உலகெங்கணும் காண்பிக்கப்படுகிறது; இரசிக்கப் படுகின்றது. தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சிபெறுகின்ற ஒரு நவீன கலை வடிவமாக இத்துறை உள்ளது.

சர்வதேச ரீதியாகச் சாதனை கள் படைத்துள்ள திரைப்படவியல் உலகக் கருத்துப் பரிமாற்றத்திற்கும், படைப்புத் துறையில் ஈடுபட்டுவரும் கலைஞர்களுக்கும் பரஸ்பரம் தொடர்புகொண்டு உறவாடுவதற்கும் உரிய ஊடகமாக மலர்ந்துள்ளது. இன்றைய மனித வாழ்வின் அனைத் துப் பிரிவுகளையும் மிக நுணுக்க மாகக் கலை வடிவச் சிறப்புடன் வெளியிடும் திரைப்படவியல் உலகின் பெரும்பாலான மக்களை ஈர்த்து வைத்துள்ளது என்பதை மறுக்கமுடியாது.

பல்லுப்போன பாட்டி முதல் படிக்கும் மாணவர்கள் வரை திரைப்படங்களைப் பார்க்க ஆவலுறுகிறார்கள். நவீன திரைப்படங்கள் பெரும்பாலும் பொழுதுபோக் குத் துறையினூடாக அதிக இலாபம் உழைக்கவே திரை யிடப்பட்டாலும் கல்வியியல், அறிவியல், விஞ்ஞான, உயிரி யல் துறை சார்ந்த பல வகை கயான படங்கள் உருவாக்கப் படுகின்றன.

முதன் முதலில் சினிமா வைக் கண்டுபிடித்தவர் எடிசன் (EDISON) ஆவார். இதன் பின் படிப்படியாக மௌனத் திரைப்படங்களும் அதனைத் தொடர்ந்து பேசும் படமும் இதன் வளர்ச்சியாக ஈஸ்மன் என்பவரின் ஆராய்ச்சியின் விளைவாக வண்ண நிறங்களையுடைய கலர்த்திரைப் படங்களும் உருவாக்கப்பட்டன. மௌனப் படங்களாக வந்த திரைப் படங்கள் பல காட்சிகளை உணர்ச்சி வெளிப்பாடாக உணர்த்தி நின்றன.

1928ம் ஆண்டிலே தான் முதன் முதலாக The Jazz Singer என்ற பேசும் திரைப்படம் திரையிடப்பட் டது. இதன் பின் மனித உணர்வுகள் உரையாடல் நிகழ்ச்சிகளினூடாகக் காட்சிப்படுத்தப்பட்டன. சினிமாத் துறை ஆரம்பித்து வளரும் நிலையில் இத்துறையைப் பயன்படுத்திக் காட்டியவர்கள் LUMIERE லுமெ யிரா சகோதரர்களும், MEILIES மெலஸ் என்பவரும் ஆவார்கள். அவர்கள் மனித வாழ்க்கைச் செயற் பாடுகளையும், நேரடி நிகழ்வுக ளையும் தமது படங்களில் காட்டி னார்கள். பல்வேறு பிரச்சினைகளுக் கான தீர்வுகளும் இவர்களுடைய படங்களில் அலசப்பட்டன.

திரைப்படவியலின் வளர்ச்சி மாணவர்களின் கல்வி உலகிலும் பல உயர்ச்சிகளை ஏற்படுத்தியுள் ளது. உலக சுற்றாடல் பற்றிய கருத்து நிலைகளின் வளர்ச்சிக்கு சூழலை அடிப்படையாக் கொண்டு தயாரிக்கப்பட்ட பல திரைப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படங்கள் உதவியுள்ளன. வோல்ட் டிஸ்னி (Walt Disney) விவரணத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் விலங்கு உலகம், பாலைவனங்கள், பனி நிறைந்த தண்டராஸ் பிரதேசங்கள், காடுகள், கடலின் அடிப்பகுதிகள் போன்றவற்றை விரிவாகத் திரைப்படங்களில் உருவாக்கியுள்ளார்கள்.

வெவ்வேறு நாடுகளின் கலாச்சாரம் மக்களுடைய பண்பாட்டு வாழ்க்கை, பௌதீகச் சூழல் மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகள், பயணச் சம்பவங்கள், பயங்கர நிகழ்வுகள் போன்றவற்றைக்கொண்டு பல படங்கள் தயாரிக்கப்படுகின்றன. நமது நாட்டில் ஆங்கிலப் படங்கள் பார்ப்பது வரையறைக்குட்பட்டதாக இருப்பினும் மேற்கூறிய விடயங்கள் மற்றும் அண்டவெளி, தாவர உலகம் பற்றிய திரைப்படங்களை மாணவர்கள் பார்ப்பது நல்லது.

ஆபிரிக்கக் காடுகளில் விலங்குகளின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட "உறடாரி" திரைப்படத்தைப் பார்க்கும் அதிர்ஸ்டம் உங்களுக்குக் கிடைக்கவேண்டும். அதில் இருண்ட கண்டம் என வர்ணிக்கப்படும் ஆபிரிக்காவில் வாழும் அதிசய மிருகங்களின் வாழ்க்கை முறைகள் காட்டப்படுகின்றன.

இன்று பலவாறாக "டைனோசர்கள்" பற்றி எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள். பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இவ் விலங்குகள் பற்றியும் அவற்றின் தனித்துவமான வாழ்க்கை இயல்புகள் அடங்கிய விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் "ஜுராஸிக்பாக்" என்ற திரைப்படம் உருவாக்கப் பட்டுள்ளது. இப்படத்தைப் பார்த்ததனாலேயே பல விஞ்ஞானிகள் டைனோசர்கள் பற்றித் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யத் தூண்டப்பட்டார்கள்.

எகிப்திய நாகரிகத்தை தத்ரூபமாகச் சித்தரிக்கும் "தசபனத" திரைப்படமும் பௌத்த கலாச்சாரத்தை எடுத்துக்காட்டும் "அங்குலிமால" திரைப்படமும் மனிதகுல பண்பாட்டை, கோலங்களை, தனித்துவமான உணர்வுகளைப் பறைசாற்றுபவையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. கொலம்பஸ் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்காவைக் கண்டுபிடித்த அனுபவங்களையும், ரொபின்சன் குரூசோ தனியாக ஒரு தீவில் வாழ்ந்த வாழ்க்கையையும் வெகு சிறப்பாகத் திரைப்படமாக்கியுள்ளார்கள்.

இவ்வாறு உலக வரலாற்றில் நிகழ்ந்த முக்கிய போர்கள் நிகழ்ச்சிகள் பற்றியும் படங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் ஆத்மீக

## 'மண்ணுக்காக'
### வீடியோ திரைப்படம்



**விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய 'மண்ணுக்காக' வீடியோ திரைப்படம் தொடர்பான குறிப்புக்கள்**

**- நம்பியாரூரான் -**

இசை: முரளி
ஒளிப்பதிவு படத்தொகுப்பு: றியோ (நிதர்சனம்)
மூலக்கதை: வல்வையூரான்
கதைவசனம், பாடல்கள், நெறியாள்கை: பொ. கணேசமூர்த்தி

வல்வையூரானின் மூலக்கதையை திரைக்காக அமைத்து இயக்கியுள்ளவர் பொன். கணேசமூர்த்தி. குறும்படங்களைத் தயாரித்து வந்த கலை, பண்பாட்டுக் கழகம் முழுநீளத் திரைப்படம் தயாரிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளதை நிரூபிப்பது இம் 'மண்ணுக்காக'. கமராவைக் கையாளுவதில் நம்மவர் அடைந்துள்ள தேர்ச்சிக்கு இப்படம் நல்லதோர் உதாரணம். தலைப்புக்கள், எழுத்தமைப்பு, காட்சிகள், கடற்பயணம் - எல்லாவற்றிலும் ஒரு மெருகு தெரிகிறது. நடிப்பைப் பொறுத்தவரையில் சிறுமியர் இருவரையும் கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம். தேவர் மிக இயல்பாக நடித்திருக்கிறார். சோகம், பயம், மகிழ்ச்சி, பாசம் எனப் பல உணர்ச்சிகளை வெளியிடுகிறார். கதாநாயகியாக நடிக்கும் பெண் சில காட்சிகளில் தோன்றினாலும் நெஞ்சில் நிற்கிறார். தலையைப் பின்னே சாய்த்து அவர் சிரிக்கும் அழகே அழகு!

சிங்களக் கப்டனாக வரும் கணேசமூர்த்தி அசல் வில்லன். படத்தின் இசையமைப்பைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். "அடுத்து என்ன? அடுத்து என்ன?" என மனம் ஆவற்படுகையில் இசை அந்த உணர்ச்சிக்கேற்ப இழைகிறது. முரளிக்கு நல்ல எதிர்காலம் உண்டு. ஆயுதம் ஏந்தாதவன் போராட்டத்துக்கு என்ன செய்யலாம் என்பது வழமையாக எழும் கேள்வி. அதற்கு விடை தருகிறது 'மண்ணுக்காக'.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


சுதந்திரப் போராட்டம் நடாத்திய மகாத்மா காந்தியின் வரலாற்றைச் சித்தரிக்கும் "காந்தி" திரைப்படம் பலகோடி ரூபா செலவில் தயாரிக் கப்பட்டது. காந்தியடிகளின் வாழ்க்கையை, நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பழகிய விதங் களை உயிர்ப்புடன் இப்படம் எடுத் துக்காட்டுகின்றது. உலகின் பல கோடி மக்கள் இப்படத்தைப் பார்த்து ஆர்ப்பரித்துள்ளார்கள்.

இவ்வகையில் பல ஆண்டுக ளுக்கு முன் தமிழகத்தில் தயாரிக்கப் பட்ட "கப்பல் ஓட்டிய தமிழன்" என்ற படமும் ஒரு குறித்த காலத் தில் நடைபெற்ற இந்திய சுதந்திர வரலாற்று நிகழ்வுகளைச் சிறப்பாக எடுத்து விளக்குகிறது. இதில் வ. உ. சிதம்பரனாரின் வரலாறும் அவரு டன் வாழ்ந்த பாரதியார், சுப்பிர மணிய சிவா போன்றவர்களின் செயற்திறன்களும் தெளிவாகக் காட்டப்படுகின்றன. இதில் பாரதி யார் பாடிய ஓடி விளையாடு பாப்பா என்ற பாடல் உயிர்ப்புடன் எளிமையான காட்சியமைப்பில் எடுத்தாளப்படும் விதம் பார்வையா ளர்களைப் பரவசப்படுத்துகின்றது.

தற்போது சினிமா; பார்ப்பவர்க ளுடைய மனங்களைப் பலவிதங்க ளில் பாதிக்கின்றது. இது நல்ல பாதிப்பாகவும் சிலவேளைகளில் தீய பாதிப்புக்களாகவும் உள்ளன. இன்று நடைமுறை வாழ்வை அப்படியே எடுத்துக்காட்டும் யதார்த்த பூர்வ மான திரைப்படங்கள் வரவேற்கப் படுகின்றன. இத்துறையின் தந்தை யென ரோசலினி (ROSSELLINI) வர்ணிக்கப்படுகிறார்.

இவருடைய ``ROMA", ``OPEN CITY" போன்ற படங்களில் நடை பெறும் காட்சிகள் ரசிகர்களின் நெஞ்சங்களை சுண்டி இழுப்பவை யாகவுள்ளன. இப்படங்களில் வரும் எந்த நடிகரும் நடிகராகத் தோன்ற வில்லை. ஒரு வீட்டின் சுவர்களை அப்புறப்படுத்திவிட்டு அதில் வாழும் குடும்பத்தைப் போலவும் இப்படங்களில் காட்சியமைப்புக்கள் தோன்றுகின்றன. அன்றாட மனித வாழ்க்கையின் உளத் தேவைகள், ஆசை உணர்வுகள் பிரச்சினைகளை விடுவிக்கும் செயல் வடிவங்கள் அழகியல் நோக்கில் இங்கு அரங் கேற்றப்படுகின்றன.

திரைப்படத்துறையின் புதிய வளர்ச்சி, தொழில்நுட்ப விருத்தி யினாலும் உலகில் உடனடியாக நிகழும் விறுவிறுப்பூட்டும், மனித உணர்வுகளைத் தூண்டும் நிகழ்வு களினாலும் படங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. உதாரணமாக 1986ல் கப்பல் ஒன்றில் அனாதைகளாகக் கனடா வந்த தமிழர்களின் கதை யைத் தழுவி ``WEL COME TO CANADA" என்ற படம் தயாரிக்கப் பட்டது.

இப்படத்தை கனேடிய தேசிய படச்சபை தயாரிக்க உலகப் புகழ்பெற்ற இயக்குனர் ஜோன்சிமித் நெறியாள்கை செய்துள்ளார். பல திரைப்பட விழாக்களில் இப்படம் பரிசுகளைப் பெற்றதுடன் மேலைத் தேசத்தவர்களின் மன உணர்வுகளில் பல மாற்றங்களையும் ஏற்படுத்தியுள் ளது. மனித இதயங்களைக் கிழித்து அதில் புதைந்திருக்கும் சிக்கல்களை யும், புறழ்வுகளையும், புதிரான உணர்வுகளையும் வெளிப்படுத்த ஒளியும் நிழலும் பாய்ந்த கலை ஊடகமாக இத்திரைப்படத்துறை வளர்ந்துள்ளது.

நாடக மேடை (Proscenium) என்பதைக் கைவிட்டுப் பார்வையா ளர்களுக்கு அருகே நிகழ்வைக் கொண்டுவர சினிமா உதவுகிறது. சினிமாவில் வரும் பாத்திரங்களின் பார்வை அசைவுக்கு ஏற்ப கண் ணோட்டங்களும், பாத்திரங்களின் வருதல் போதலுக்கான திரைத் திசைகளும் ஒன்றிணைக்கப்படுகின் றன. இவ் ஒன்றிணைப்புக்களில் இருந்தே சினிமா என்ற கலை வடிவம் தோன்றுகின்றது.

சினிமாக் கதைகளின் நகர்வு கமரா இயக்கங்களினூடாகப் (Camera Movements) பதிவு செய்யப் படுகின்றன. இவற்றிற்கெல்லாம் இயக்குனர், பாத்திரங்கள், மற்றும் பார்வையாளர்கள் ஆக மூன்று தரப்பினருக்கும் ஒத்திசைவான கள அமைப்புக்கள் தேர்வுசெய்யப்பட வேண்டும். இத்தேர்வுகள் பல கோணங்களில் பல உத்திகளைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. இத்தகைய சினிமாத்துறை வெகுசன சாதனத்தின் வர்த்தகக்கவர்ச்சி என்பதுடன் தனித்துவமான கலை ஊடகமாக இன்று பிரதி பிம்பங் களை ஏற்படுத்தி வருகின்றது.

திரைப்படவியலில் பல்வேறு துறைச் செயற்பாடுகளில் முக்கியமா னது படத் தொகுப்பாகும். பல்வேறு காட்சிகளாக எடுக்கப்பட்ட படத் தின் கதைக்கு ஏற்ப காட்சியமைப் புக்கள் தொகுக்கப்படுவதே படத் தொகுப்பாகும். இத்துறை சினிமா வுடனேயே பிறந்து விட்டது. பல் வேறு காட்சிகளை வெட்டித் தொகுப்பதன் மூலம் (Cut/Joint) தொடர்ச்சியற்ற இடங்களில் இட - காலரீதியான ஒரு தொடர்ச்சியைக் காணவிளையும் கலைதான் படத் தொகுப்பு ஆகும்.

வெவ்வேறு கள பரிமாணங்கள், கோணங்கள், அசைவுகள், ஒளிப் பின்னணிகள் மூலமாக ஒரு காட்சியானது செயற்படுத்தப்படு கிறது. இவ்வாறான காட்சியமைப் பின் மூலம் இயங்கியல் ரீதியாக சினிமா தோன்றுகின்றது. ஒரு நிகழ்வு காட்சியாக எடுக்கப்படும் போது முதலில் அதன் தனித்துவப் போக்கு உறுதி செய்யப்படுகிறது. பின் வெவ்வேறான கோணங்கள் மூலமாகக் காட்சி எடுக்கப்படும் போது அந்நிகழ்வானது உயிர்ப் படைகிறது. இவ்வாறான பல நிகழ் வுகளின் படிமானங்களே திரைப் படமாகக் கட்டி எழுப்பப்படுகிறது. இதை அழகுபடுத்தப்பட்ட பல உத்திகள், இசை என்கின்ற ஜாலம், திரைக்கதை வசனம், பாடல்கள் போன்றன மேலும் சுவைக்கக்கூடிய கவர்ச்சியான ஊடகமாக்குகின்றன.

ஒரு திரைப்படத்தைப் பார்க் கும் போது அதில் ஏதும் மகத்தான கருத்துக்கள் உள்ளனவா என ஆராயவேண்டும். அம்மகத்தான உருவக்கங்களை படத்தில் பார்க்கும் போது நீங்கள் அடையும் உணர்வு எங்கிருந்து வருகிறது? உங்கள் மனத்தில் மகத்தான எண்ணங் களை உருவாக்க அப்படத்தின் எழுத்தாளரும் இயக்குனரும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எவ்வளவு ஆழமான உணர்வுகளைக் கொண்டிருந்திருப்பார்கள்! கதாபாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் படைக்க எத்தகைய துல்லியமான திறமைகளை அவர்கள் கொண்டுள்ளார்கள். இவை பற்றியெல்லாம் ஒரு படத்தை அல்லது நாடகத்தைப் பார்க்கும் போது சிந்திக்கவேண்டும். இவ்வாறான சிந்தனைகள் நாளை உங்களையும் இயக்குனராக, எழுத்தாளராக மாற்றக்கூடியன.

சினிமாத் துறைக்கான ஈர்ப்புக்களை சரிவரத் தேர்ந்தெடுப்பதில் இயக்குனருக்கு திறமையும் அனுபவமும் உதவுகிறது. நுண் உணர்வு மூலம் தேர்ந்த ஈர்ப்புக்களைச் சரிவர ஒருங்கமைத்தால் சினிமா என்ற கலை வெற்றிபெறும். அந்த வெற்றியின் அடிப்படையில் புதிய தொரு மொழியே உருவாகிறது. அருமையான காட்சி; என்னை அழவைத்தது; என்ன வித்தியாசமான முடிவு! கமராவே கதை பேசியது என்றெல்லாம் இயக்குனரைப் பாராட்டும் புதிய மொழிகளாக இவை அமைந்துவிடுகின்றன.

அமெரிக்காவில் ஹாலிவூட் வட்டாரப் பகுதியில் திரைப்படங்கள் பிரமாண்டமாக, மிக நவீன மின்னனு உபகரணங்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. ஸினிரமா, ஸினிமாஸ் கோப், முப்பரிமாணம் போன்ற பல வகைகளில் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. இன்று எமது தமிழ் சினிமாக்களில் ஸினிமாஸ் கோப் என்கிற பெரிய விம்பங்களைக் கொண்ட காட்சி அமைப்புக்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன.

இங்கு ஸினிரமா என்ற வகையில் திரையிடப்படும் திரையின் அகலம் 64 அடி, உயரம் 23 அடி ஆகும். மூன்று தனித்தனிக் கமராக்கள் மூலம் ஒரே காட்சியை ஒரே சமயம் படமாக்கி, வளைந்த பிரமாண்டமான திரையில் மூன்று தனித்தனிப் படம் காட்டும் இயந்திரங்களின் மூலம் ஒரே சமயத்தில் ஒரே திரையில் காண்பிக்கப்படும். இதற்கு மிகப்பிரமாண்டமான அரங்கு தேவைப்படுகிறது. இக்காட்சிகள் இயற்கைத் தன்மையுடன் படம் பார்க்கிறோம் என்ற உணர்ச்சியின்றி காட்சிகள் நடைபெறும் இடத்திலேயே பார்ப்பவர்கள் இருப்பது போல அமைந்திருக்கும்.

மேற்கூறிய முறையில் எளிமையாகத் தற்போது முப்பரிமாணப் படங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன. இப்படங்களைக் குறித்த வில்லைகளையுடைய மூக்குக் கண்ணாடிகள் அணிந்தே பார்க்கவேண்டும். இவ்வாறான புதிய நுட்ப முறைகளினூடாகத் திரைப்படவியல் இயக்குனர்கள் பல்வேறு தனித்துவமான சிறப்புகள் கொண்ட படங்களை இன்று தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு புகழ்பெற்ற பல இயக்குனர்கள் சினிமாத் துறையிலும் பொது வாழ்விலும் உயர்ந்தவர்களாகக் கணிக்கப்படுகிறார்கள். இந்தியக் கலாச்சார வாழ்வின் தலைமைத் தெய்வம் என்று சிறப்பிக்கப்படும் சத்தியஜித்திராய் பல படங்களை கலாதரிசனமாக இயக்கி உலகப் புகழ்பெற்றவர். 37 வருடங்கள் திரைப்படத்துறை வாழ்வில் எண்ணற்ற விருதுகளைப் பெற்றவர். 1955ம் ஆண்டு தனது மனைவியின் நகைகளை அடகு வைத்து "பாதர் பாஞ்சாலி" என்ற படத்தை முதலில் வெளியிட்டார்.

இப்படம் இந்திய கிராமிய வாழ்க்கையைச் சித்தரிக்கும் உன்னத கலைப்படைப்பாக உருவானது. இந்திய திரைப்படவியல் கலைஞர்கள் சர்வதேசத் தரத்தைவிட உயர்ந்தவர்கள் என்பதை சத்தியஜித்திராய் மெய்ப்பித்தார். இப்படத்திற்கு அதி சிறந்த மனித ஆவண விருது கென்னஸில் நடைபெற்ற ஐரோப்பிய விழாவில் வழங்கப்பட்டது. இவருக்கு ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் கெளரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது. தொடர்ந்து இவர் தயாரித்த 25க்கும் மேற்பட்ட படங்கள் பல பரிசுகளைப் பெற்றதுடன் அழியாத கலைவடிவங்களாக உலகையே பரவசப்படுத்துகின்றன.

கலைஞர்கள் மனித நேயத்தின் பால் விசுவாசம் கொண்டவர்கள். மனிதனை அடிமைப்படுத்துகின்ற கருத்துக்களை எதிர்ப்பதிலும், அவனது உணர்வுகளை மதித்து அவற்றையே கலை நுணுக்கங்களினூடாகப் புதிய படைப்புக்களை உருவாக்குகிறார்கள். இவ்வியல்பு சினிமாத்துறைக்கும் பொருந்தும். ஆனாலும் இன்று வியாபார நோக்கம் கொண்ட மனிதனின் பிறழ்வான உணர்வுகளைத் தூண்டக்கூடிய படங்கள் பெருவாரியாகத் திரையிடப்படுகின்றன. இவற்றினால் தீய சமூக விளைவுகளும் ஏற்படலாம் எனப் பலர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

எனவே சினிமா என்ற கலை நுணுக்கப் பயன்பாடு பல வழிகளில் ஆராயப்படவேண்டி உள்ளது. உலகில் நாம் வாழுகின்ற காலகட்டத்தை வரலாற்று ரீதியாக உணரும் உணர்வெழுச்சிகளாகக் கலைப் படைப்புக்கள் திகழ வேண்டும். அப்போதுதான் நாம் படைக்கப் போகின்ற புதிய வரலாறுகள் மனித சாதனைகளாக மலரும்.

## அட்டைப்படம்



**இனி...**

"ம்... தொலைஞ்சுது. இண்டைக்கும் வயித்தில அடிக்கப் போறாங்கள். இவங்களால மனிசர் படுகிற பாடு... அந்தா புள்ளியாய் தெரியுது என்னமோ..."

"அது இஞ்ச வராதப்பா..."

"ஓம்.. அது அங்காலதான் போகுது. இதுக்குள்ள இனி நினைச்சும் பாக்கமாட்டாங்கள்... காங்கேசன்துறை துறைமுகத்திலையும், மன்னாரிலையும் எங்கட கடற்புலியள் கொடுத்த அடியில... இனி நிமிரவே மாட்டாங்கள்."

துள்ளித் துள்ளி சிறு மீன் குஞ்சுகள் கரை மோதட்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஒரு நாடோடியின் பாடல்



பூக்கள் மலர்வதை
பட்சிகள் பாடுவதை
ஒரு சூரிய உதயத்தை
உயிர்ப்புள்ள தாய்மொழியின்
தெருப்பாடலை....
இந்த நாடோடிக்கு
இதெல்லாம் ஏது?

உலகமகா யுத்தங்களின் போதும்
தாக்குறாத
புறாக்கூடு போன்ற
வதிவிடத்துக்குள்
நிலவுக்கு முற்றமும் இல்லாமல்
நானும் அவளுமாய்
குழந்தைகள் பெற்றோம்
குழந்தைகள்
என்னைப் போலவும்
என்னவளைப் போலவும்.

அப்பாடி!
மின்னல் கீற்றென
கொள்ளை கொள்ளுகிற
சிரிப்பைக் கொட்டுகிறார்கள்
இந்தச் சிரிப்பை
இந்த முகங்களை
இந்த மின்னல் கீற்றின் தெறிப்பை
யார் கொள்ளுவார்கள்?

அவர்கள்
பூவில் தோய்ந்து வரும் காற்றை
சிறகடித்துப் பறந்து வருகிற
பட்சியின் துடிப்பை இழந்து
தவிப்பதை
கச்சேரி நடுவில்
நாதமிழந்த முழவென
சுருதி பேதமுறுவதை
கறுப்புப் பன்றி என
அழைக்கப்படுவதை
அவர்களின்
கடிதங்கள் சேருகிற
முகவரியில்லாமல்
தேசாந்திரமாய்த் திரிவதை....

நிலமும் இல்லாது
வேலியும் இல்லாது
ஆழவேரோடவும்
முட்டறக் கிளைகள்
விட்டெறியவும்
கனவு காணும் வாழ்க்கை இது.

பூக்களைப் பிய்த்தும்
பட்சிகளை வேட்டையாடியும்
ஒரு சூரிய உதயத்தை தடுத்தும்
உயிர்ப்புள்ள தாய் மொழியின்
பாடலைக் கொன்றும்....

எங்களில் யார்?...
எங்களில் யார்??..
எப்போது எழுவார்கள்
எப்படி
எங்களுக்குள் ஒரு மானுட சங்கீதம்
எழும்.

விலங்கை உடைத்தெழுந்து
ஊற்றின் மூலத்தை
இருப்பின் உன்னதத்தைப்
பாடுவோம்!

அப்பொழுது எங்களுக்குள்
யாவும் மலரும்
அப்பொழுது எங்களுக்குள்
யாவும் உயிர்க்கும்

- சுபா -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆபிரிக்கக் கவிதைகள்

தமிழில் சோ. பத்மநாதன்

தென் ஆபிரிக்காவின் புறநகர்ப் பகுதியான Soweton நிறவெறிக்குப் பேர் போனது. 1976 ஜூலையில் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்திய கறுப்பின மக்கள் மீது பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால், பெருந்தொகையினர் கொலையுண்டனர். சம்பவத்தில் கொலையுண்ட சிறுமி பற்றிய கவிதை இது. கடுங்காவல் தண்டனை, வீட்டுக்காவல் எல்லாம் அனுபவித்த கவிஞர் டெனிஸ் புருற்றஸ் இப்பொழுது அமெரிக்காவில் ஆங்கிலப் பேராசிரியராய் இருக்கிறார்.

## ஒரு சிறுமியின் கதை

முன்பு-
பின்னிவிட்ட கூந்தல்!
மற்றையோரைப் பார்த்து
வானை நோக்கி உயர்த்திய
பொத்திய கைகள்!
எட்டு வயதான
சிறுமியென்று சொன்னார்கள்!

பின்பு-
ஒரு சிவப்புக் கலவை
சிதறிய மாமிசத் துண்டங்கள்,
காற்றில் படபடக்கும் கந்தைத் துணி!
பூப்போட்ட சட்டையணிந்த
முன்னைநாள்
சிறுமியென்று சொன்னார்கள்!

ஏ. என். சி. குமாலோ தென் ஆபிரிக்காவில் பிறந்தவர். இப்பொழுது ஆப்ரிக்காவில் வாழ்கிறார். ஆபிரிக்க தேசிய கொங்கிரஸின் ராணுவப் பிரிவில் உறுப்பினராக இருக்கிறார். தமது சகாக்களும் தொழிற் சங்கத் தலைவர்களுமான மூவர் தூக்கிலிடப் பட்டபொழுது குமாலோ பாடிய கவிதை இது.

## வஞ்சினப் பாட்டு

மினி!
வாட்ட சாட்டமான,
வலிய,
புன்னகை சிந்தும் மினி!
அவனைப் போலவே
உயிரை நேசித்த



கயிங்கா, மிக்காபா!
மூவருடைய விலைமதிப்பில்லா உயிர்கள்
பறிக்கப்பட்டு விட்டன!

அலுகோசின் சுருக்கு
கழுத்தைக் கடிக்க
எங்கள் தோழர்கள் வீழ்ந்துபட்டனர்
வேர்வூடின் பிறிற்றோறியாவில்!

உயிர் நழுவுவதைக் கண்டிருக்கிறீர்களா?
ஷாப்வில் மணலில்
என் அன்னை
செத்ததைக் கண்டிருக்கிறேன்!

விசாரணை நடக்கும் அறையில்
என் சகோதரன் அலறுவதும்,
யன்னல் ஊடாக,
நூறு அடி கீழே,
கொன்கிறீற்றில்,
அவன் உடல் மோதுவதும்,
கேட்கிறது!

அடிபடும் மனிதனுடைய
முகத்தைக் கண்டிருக்கிறீர்களா?
சிறைக்கூடத்தில்
அச்சத்தம் கேட்கும்போது
உங்கள் இதயம் வேகமாக அடிக்கும்!

ஆனால்,
அதைவிட மோசம்
பெருமூச்சு,
இருமல்,
கீச்சிடல். இவற்றுடன்
அல்லது ஏதுமன்றி
ஆவி நழுவுவது!

மினியும் தோழர்களும்
அந்த ரகசிய
தூக்குமேடையில்
எப்படி இறந்தார்கள்?
- கேட்பீர்கள்
சொல்கிறேன்:

பாடிக்கொண்டு!
பெரிய, உறுதிபடைத்த மினி
அன்று சிரிக்கவில்லை!
(உதட்டில் ஒரு புன்னகை தவழ்ந்திருக்கலாம்!)
ஆனால்
எதிரியை நோக்கும்போது
கண்களில் கனல்!
நிமிர்ந்த தலைகளோடு
ஒன்றாய். ஒற்றுமையாய்
மினி புனைந்த பாடலைப் பாடிக்கொண்டு
"கவனம் வேர்வூட்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கவனம் வேர்வூட்
கறுப்பன் உன்றன்
கணக்கைத் தீர்ப்பான்!"
மக்கள் அந்தப் பாட்டைத் தொடர்கிறார்கள்
மினியோடு சேர்ந்து
"கவனம் வேர்வூட்" பாடுகிறார்கள்!

முன்னணி அகழியில்
சாவைச் சந்திக்கும்போது
மூன்று வீரர்களும்
எதிரியின் முகத்தில் அடித்தாற்போல்
கூவுகிறார்கள்
"பழிக்குப்பழி!"
மக்கள் அதை எதிரொலிக்கிறார்கள்
"எங்கள் வீரர்களின் உயிருக்கு உயிர்!"

பிறிற்றோறிய காற்றில்
பெறுமதி மிக்க
அக்கடைசி மூச்சுக்கள்
கலக்கும் போது
நாம் சூளுரைக்கிறோம்
"பழிக்குப் பழி!"



தென்னாபிரிக்க கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவரான ப்றாம் பிஷர் நினைவாக எழுதப்பட்டது இக்கவிதை. நிறவெறி அரசால் ஆயுட்காலத் தண்டனை விதிக்கப்பட்ட பிஷர் 1976இல் சிறையிலேயே உயிர் துறந்தார். கவிதையை எழுதிய ஹியூ லெவின் தென்ஆபிரிக்காவில் ஏழாண்டு சிறைவாசம் அனுபவித்த பின் லண்டன் போய் அங்கு பத்திரிகையாளராக இருக்கிறார்.

## இன்னொரு நாள்

மற்றெந்த நாளையும் போலத்தான்
அன்றும்
திறப்பு
காலை உணவு, கழுவுதல்,
தேய்த்தல், துப்பரவாக்கல்,
முழுக்கு, 4 மணிக்கு இரவுணவு
பூட்டு
மறுநாள் காலை கதவு திறகும் வரை
எந்நாளும், ஒவ்வொரு நாளும்
14 மணிநேர 'லொக் அப்'
ஒவ்வோர் இரவும்
காலையில்
பதினொரு சோளப் பொத்தி பறித்தோம்
பத்து எமக்கு
ஒன்று காவல் காக்கும் போவருக்கு
தோல் உரிப்பதில் அரைமணி கழிந்தது
நாமே பயிரிட்ட சோளத்தை
சமையற் கட்டுக்கு
இரவுச் சாப்பாட்டுக்கு
அனுப்புவதில் ஓர் உற்சாகம்!
இருபத்தொரு தக்காளிச் செடிகளையும்
பேணுவதில்
அவை பசுமையாக எழுவதைப் பார்ப்பதில்
ஓர் ஆனந்தம்!
அன்றும்
மற்றெந்த நாளையும் போலத்தான்
தோட்டம், பகலுணவு
லொக் அப்
கழுவுதல் தேய்த்தல், துப்பரவாக்கல்
முழுக்கு, 4 மணிக்கு இரவுணவு
ஆனால் இரவுணவுக்கு முன்
எதிர்பாராமல்
அவன் அழைக்கப்பட்டான்
நான் சொன்னேன்;
"நல்லதோ
பொல்லாததோ
இருக்கவேண்டும்!"
ஆக,
எங்களோடு சாப்பிட அவன் இல்லை!
அவனுடைய சோளப் பொத்தியை
சிறைக்கூடத்திற்கு எடுத்துச் சென்றோம்.
நல்லதோ
பொல்லாததோ
போய் வந்தபின் சாப்பிடட்டும்.
அன்றும்
மற்றெந்த நாளையும் போலத்தான்
இரவுணவு லொக் அப்
தனிமை
14 மணி நேரம்
நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது
அவன் விருந்தினரைச் சந்திக்கும் அறையில்..
மரச்சட்டங்கள்
4 அங்குல பேர்ஸ்பெக்ஸ்
ஒலிப்பதிவு தெளிவாக நடைபெற
சவுண்ட் போட்!
பக்கத்தில் ஒரு போவர்
மறுபுறத்தில் வந்தவர்களோடு ஒரு போவர்!
அதற்குப் பெயர் விருந்தினர் அறை
அவனுடைய சகோதரன்
பேர்ஸ்பெக்ஸ் ஊடாக, பேசினான்;
"இன்று காலை உன் மகன் இறந்து போனான்"
பேர்ஸ்பெக்ஸ் ஊடாக
மரக்கூட்டுக்கள்,
அரசின் பாதுகாப்புக்குப் பங்கமின்றி,
அவன் சொன்னான்;
"உன் மகன் இன்று காலை இறந்து போனான்"
"அவன் தன்கூட்டுக்குத் தனியே
திரும்பிய போது
அவனுடைய இரவு உணவு
குளிர்ந்து போயிருந்தது"
அடுத்த 14 மணிநேரம்
லொக் அப்
மற்றெந்த நாளையும் போல!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## தமிழீழத்தில்

# கரும்புலிகள் நாள்








**"காற்றினுக்கும்
வேர்க்கும் -
அவர்
மூச்சழியும் போது
பூமரமும் வேகும் -
அவர் போய்
வெடிக்கும் போது."**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



முகம் தெரிந்தும் தெரியாமலும் விடுதலைக்கு தங்கள் மூச்சைக் காற்றுடன் கலக்கவிட்ட கரும்புலிகள் பற்றி எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் குறிப்பிடுகையில்,

"கரும்புலிகள் வித்தியாசமானவர்கள்; அபூர்வமான பிறவிகள்; இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்" என்கிறார்.

அத்தகைய ஆழ் நேசிப்பு உடைய அதிமானுடர்கள் எங்கள் பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

விடுதலையின் உச்ச எல்லைகளைத் தொட்டு பிரபஞ்சத்தின் ஓர் அதிர்வாய், வீசும் காற்றாய், ஒளியாய், நெருப்பாய், மின்னலாய் கோலம் கொண்டவர்களின் நினைவைச் சுமந்து நின்றது தேசம்.

"போயிற்று வருகிறோம்" என்று கையசைத்துச் சென்ற இறுதிக் கணங்களில் அந்த வீரர்களை முத்தமிட்ட காற்று அந்த மண்ணின் முற்றங்களில் அனலைச் சுமந்தபடி திரியும்.

உள் நிகழும் சுவாசத்தினுள்ளும் உயிர் மூச்சாய்க் கலந்து நிற்கும். அந்த வீரர்களின் நினைவுகள் தமிழீழமெங்கும் எழுச்சிக் கோலம் பூண்டது.

மண்ணின் உயிர்நாதமான அந்த வீரர்களின் பெயர்களை மக்கள் உச்சரித்துக் கொண்டார்கள். வாத்தியங்கள் முழங்கி பாட்டிசைத்தார்கள்.

'தாயக பூமியின் காதலர் நாமெனத்' தம்முயிர்ப் பூக்களைச் சூட்டியவர்களை நினைந்து நின்ற போது எடுக்கப்பட்ட சில நிழற்படங்களின் தொகுப்பு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எமக்கென்ற இசைமரபொன்றையும், தனித்துவத்தையும் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

- கண்ணன் -



# இசையமைப்பாளர் கண்ணனுடன் ஒரு நேர்முகம்

**நேர்காணல்: கருணாகரன்**

தமிழுலகில் விதந்துரைக்கப்படும் இசையமைப்பாளராகிய உங்கள் இசையூற்றின் தோற்றுவாய் பற்றி வெளிச்சத்திற்கு விரிவாகக் கூறுங்கள்?

☆☆ சிறுவயதிலிருந்தே எனக்கு இசையுடன் பரிச்சயம் இருந்தது. தந்தையார் முத்துக்குமாரு (அளவெட்டி சக்கரபாணி) பரம்பரையினர் சங்கீத ஈடுபாடும், அதில் ஓரளவு தேர்ச்சியும் கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்களின் தொழில்முறைகள் வேறு. இருந்தாலும் தொழிலில் ஈடுபட்டளவுக்கு இசையிலும் நாட்டம் இருந்தது. நாடகம், வாய்ப்பாட்டிசை தவிர வாத்தியக் கருவிகளைக் கையாள்வதிலும் நல்ல தேர்ச்சி அவர்களுக்கு இருந்தது. இதனால் எங்கள் ஊரிலிருந்த மக்கள் இவர்களிடம் நிறைய விருப்பம் கொண்டிருந்தனர். தந்தையார் முத்துக்குமாரு தபேலா, ஹாமோனியம் போன்ற இசைக் கருவிகளை வாசித்து விக்கினேஸ்வரன் என்பவருடன் இணைந்து நாடகங்களில் பங்கேற்றதும் இன்னும் என் நினைவில் இருக்கின்றன. ஆனால் பின்னர் தந்தை முத்துக்குமாரு திருமணமாகி யாழ்ப்பாணத்திற்கு வந்து தன்னுடைய தொழிலுடன் இசைமுயற்சிகளிலும் அக்கறையுடன் ஈடுபட்டார். இந்தப் பின்னணிதான் சிறுவயதிலேயே எனக்கு இசையுடன் உறவை ஏற்படுத்தியது என்று நினைக்கின்றேன். தந்தையாரின் இசைப் பயிற்சிகள்தான் எனது ஆர்வத்திற்கும் பயில்வுக்கும் ஊக்கமாக இருந்தன. இதனால் நான் சிறுவயதிலேயே இசைக்கருவிகளைக் கையாளக்கூடியவனாக இருந்தேன். என்றாலும் எனது பள்ளிப்படிப்புக்குப் பிறகுதான் இசைபற்றிய மேல் அறிவுக்காகவும், தேர்ச்சிக்காகவும் படிக்கமுடிந்தது. அப்பொழுது சுயமாகத் தொழிலொன்று வேண்டுமென்பதற்காக வானொலி திருத்துபவராக வேலைசெய்தேன். அந்தத் தொழிலுடனேயே இசை ஆர்வத்தின் நிமித்தமாக கர்நாடக இசையையும், பல இசைக் கருவிகளையும் கையாளக் கற்றேன். கர்நாடக சங்கீதத்தில் ஆரம்ப குருவாக சங்கீத பூஷணம் சண்முகரத்தினத்திடமும் பிறகு சங்கீத பூஷணம் இராஜலிங்கம் (புங்குடுதீவு) அவர்களிடமும் படித்தேன். இவ்வேளையில் இந்திய இசைக்கலைஞர்கள், நாடகக்காரர்கள் இங்கு வருவார்கள். வந்து மாதக்கணக்கில் தங்கி நின்று தங்களுடைய நிகழ்ச்சிகளை நடாத்துவார்கள். அப்போதெல்லாம் அந்த நிகழ்ச்சிகளை வெறுமனே ரசிகனாக மட்டும் நின்று பார்க்காமல் இசை ஆர்வத்துடன், அதில் படிப்பவனாக நின்று பார்த்தேன். அவர்களின் திறமைகளில் நான் பல நுணுக்கங்களைக் கண்டுகொண்டேன். எனது தந்தையாருக்கு இந்தக் கலைஞர்களுடனிருந்த உறவினால் நான் அவர்களிடம் அறிமுகமாகிக் கொண்டது இன்னும் வசதியாகப் போய்விட்டது. இந்தச் சந்தர்ப்பங்களே எனது இசை வளர்ச்சியை சாதகமாக்கிக் கொள்ள வாய்த்தன. இன்றைக்கு நீங்கள் பார்க்கிற மாதிரி அன்று யாழ்ப்பாணத்தில் எந்த இசைக் குழுவோ, இசையில் முழுமையாக ஈடுபடுபவர்களையோ காணமுடியாது. அன்றைய யாழ்ப்பாணத்துச் சூழல் முழுமையாக இசையில் ஈடுபடுபவரை உரிய மதிப்புடன் நோக்கவுமில்லை. ஆனால், இதற்கெல்லாம் முகங்கொடுத்துக் கொண்டுதான் முழு ஆர்வத்தோடும், நம்பிக்கையோடும் தொடர்ந்து இசைபயின்று வந்தேன். என்னுடைய மூன்றாவது குருவாக தமிழ்நாடு சிதம்பரம் வீணை கிருஷ்ணமூர்த்தி ஐயர், அவரைத் தொடர்ந்து அரியாலை பாலசிங்கம் அண்ணர் ஆகியவர்களிடம் குருகுல முறைப்படி பயின்றேன். இவைதான் என்னுடைய இசை அக்கறைக்கான அடிப்படைகள். மற்றப்படி அந்த வேளையில் இங்கே நான் முன்னர் சொன்னது போன்று எந்த இசைக் கல்லூரிகளோ, நிறுவனங்களோ, மற்றும் நுண்கலை தொடர்பான எந்தப் பயில் நிறுவனமோ இருக்கவில்லை. இதனால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் எதையும் அப்போது என்னால் பெறமுடியவில்லை. என்றாலும் அன்று நான்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





மகன் சத்தியனுடன்...

தேடியதை, நான் ஆவலுற்றதைப் பெறமுடிந்தது என்ற திருப்தி இப்போதுண்டு. இதன் பிறகு இசையில் மேலும்படிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. வடஇந்திய ஹிந்துஸ்தானி இசையில் எனக்கு நிறைய ஆர்வம். இதனால் ஹிந்துஸ்தானி இசைக்கல்லூரிக்கு விண்ணப்பித்தேன். இந்த விண்ணப்பத்திற்கு முன்சிபாரிசை சிங்கள இசைக்கலைஞர்களே தந்திருந்தார்கள். எல்லாம் சரியென்றிருந்த வேளையில் துரதிஸ்டவசமாக என்னுடைய தந்தையார் காலமாகிவிட்டார். தந்தையின் இறப்புக்குப் பின் ஏற்பட்ட பொருளாதாரக் கஷ்டம் ஹிந்துஸ்தானிய இசையைப் படிக்க முடியாமல் முடக்கிவிட்டது. இது இன்றளவும் நீங்காத மனக்குறையாகத்தான் உள்ளது.

✪✪ உங்கள் நெஞ்சில் இன்றும் பசுமையாக நினைவிருக்கும் "கண்ணன் கோஷ்டி" யின் சாதனைகள் பற்றி அறியத்தாருங்கள்.

✫✫ 1960 ஆம் ஆண்டளவில் இந்தியக் கலைஞர்கள் இங்கு வருவதற்கான தடையை இலங்கை அரசு விதித்தது. இதனால் எங்களின் கலையை வெளிப்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. கலை ஆர்வமுள்ள பலர் நல்ல முயற்சிகளில் ஈடுபட்டார்கள். நானும் ஒரு இசைக் குழுவை ஆரம்பிக்க நினைத்தேன். அப்போது இங்கேயிருந்த இசையின் வெற்றிடத்தையும் ரசிக மனங்களை நிரப்புவதற்காகவும் எனது ஆவலின் தூண்டுதலினாலும் இந்தக் குழுவை ஆரம்பித்தேன். குழுவுக்குப் பெயர் என்றெதுவுமில்லை. ஆனால் பிறகு இந்த இசைக்குழுவையே "கண்ணன் கோஷ்டி" என்று மக்கள் இயல்பாக அழைக்கத் தொடங்கினர். அந்தப் பெயரே நிலைத்தும் விட்டது. கண்ணன் கோஷ்டியின் நினைவுகள் என்று சொல்லும் பொழுது பாடகர் ஆர். சிறீகிருஷ்ணமூர்த்தியைப் பாடகராகக் கொண்டு வயலின் ஆர். ராதாகிருஷ்ணன், மிருதங்கம் சிவபாதம் போன்றவர்களோடு எங்கள் குழுவை ஆரம்பித்தோம். இது மக்களிடம் மதிப்பாகவும் நல்ல விருப்பமுடனும் நோக்கப்பட்டது. இந்தக் 'கோஷ்டி' மூலமாக இன்றைய பல திறமைமிக்க கலைஞர்கள் அறிமுகமாகவும் தங்கள் திறனை வெளிப்படுத்தவும் முடிந்தது. பின் அடுத்தடுத்த வருடங்களில் பிரபலமாகத் தொடங்கிய எங்கள் குழு வடபகுதியைப் பொறுத்தளவில் நல்ல திறமையுள்ள குழுவாகப் பரிணமித்தது. இன்றைக்குள்ள இசைக் குழுக்கள் எங்கள் குழுவில் சேர்ந்திருந்தவர்களாலேயே பின்னர் தோன்றின. எங்கள் கோஷ்டி 60களில் இங்கு நிகழ்த்தப்பட்ட நாடகங்களுக்கும் பின்னணி இசை வழங்கியது. (அப்போது நவீன நாடகங்களும், அதற்குரிய இசையுணர்வும் இருக்கவில்லை. இந்திய சினிமாப்பாணி நாடகங்களும் இசையுமே இருந்தன) பின்னர் 1967 என நினைக்கின்றேன். 'தினகரன்' பத்திரிகை நடாத்திய 'தினகரன் விழா' வில் எங்கள் கோஷ்டி போட்டிகளில் பங்குகொண்டு முதல் பரிசைப் பெற்றது. இது எங்கள் குழுவுக்கு இலங்கை முழுவதிலும் அறிமுகத்தையும் பிரபல்யத்தையும் தந்தது. இதில் முக்கியமாக வர்த்தக ரீதியாக இசைத்தொழிலை நடாத்தலாம் என்பதைப் பற்றி 'வர்த்தக பவனி' யில் கலந்துகொண்டதன் மூலம் அறிந்துகொண்டோம். பிறகு 1969ல் சித்திரை மாதத்தில் நாங்கள் இன்னொரு கட்ட வளர்ச்சியைப் பெற்றோம். இலங்கை வானொலியின் தமிழ்ப்பகுதி அந்த வருடச் சித்திரைப் புத்தாண்டு சிறப்பு இசை நிகழ்ச்சிக்கு எங்களை அழைத்து 'நவரங்ககலா' மண்டபத்தில் ஒரு மெல்லிசை விழாவை நடாத்தியது. இது முற்றிலும் எமக்குப் புதிய அனுபவத்தையும், திருப்தியையும் தந்தது. வழமையாக தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களையே பாடி வந்த நாம் அந்த விழாவில் எங்களால் உருவாக்கப்பட்ட மெல்லிசைப் பாடல்களை மட்டுமே வழங்கினோம். இது முழு அளவில் வெற்றியையும் மேலும் மேலும் நம்பிக்கையையும் தந்தது. இங்கே தான் பிற்காலத்தில் என்னுடைய திரையிசைக்கு வழிகாட்டியாகவும் நண்பராகவும் இருந்த சிங்களத் திரைப்பட இசைக்கலைஞர் எம். கே. றொக்சாமி அறிமுகமானார். இவருடைய மெல்லிசை நிகழ்ச்சியும் அந்த நிகழ்வில் இடம்பெற்றது.

✪✪ உங்களைப் பிரபல்யப்படுத்திய கொழும்புக்கால இசை முயற்சிகள் பற்றி எடுத்துச் சொல்லுங்கள்.

✫✫ கொழும்புக்கால இசை முயற்சிகள் முன்னர் கூறிய இலங்கை வானொலியின் சித்திரைப் புத்தாண்டு நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகின்றன. இலங்கை முழுவதற்கும் அப்பொழுது நாங்கள் மட்டும்தான் ஒரேயொரு இசைக்குழு. தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் எல்லோரிடையேயும் எங்கள் குழுவே அரங்கிசையை வழங்கிக்கொண்டிருந்தது. இவ்வாறு நிகழ்ச்சிகளை நாம் நடாத்திக்கொண்டிருந்த பொழுது தர நிர்ணயம் காரணமாக இலங்கை வானொலி 'இசையமைப்பாளராக' என்னை நியமித்தது. எமது குழுவினுடைய பாடல்களும் நிகழ்ச்சிகளும் வானொலியில் ஒலிக்கத்தொடங்கின. இக்காலகட்டத்தில்தான் கொழும்பில் நாம் 'பொப்பிசைப் பாடல்கள்' என்ற இசை வடிவத்தை அறிமுகப்படுத்தினோம். இந்த இசை நிகழ்ச்சிகளில் பிரபல சிங்கள இசைக் கலைஞர் எம். எஸ். பெர்னாண்டோ உட்பட பல கலைஞர்கள் எம்மோடு இணைந்து பணியாற்றினார்கள். 'பொப்பிசைப் புயல்' என்ற பொப்பிசை மேடை நிகழ்ச்சியையும் கொழும்பில் நடாத்தினோம். இதற்குப் பிறகு மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, சிங்களப் பிரதேசங்களிலும் எங்கள் இசை நிகழ்ச்சிகள் பரவத்தொடங்கின.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பின்னர் ஆக்கவியல் இசை (Creative Music) எனப் புதிய புதிய வெவ்வேறான வாத்தியக் கருவிகளின் மூலம் நவீன இசைவடிவங்களை உருவாக்கினேன். கூட்டுவாத்திய இசை (Orchestral Music) முறையையும் பரீட்சார்த்தமாக மேடைகளில் செய்தோம். இது எமது மக்களுக்குப் புதிய ரசனையாக இருந்து நல்ல மதிப்பைப் பெற்றுத் தந்தது. அப்பொழுது எங்களுடன் இணைந்து பல சிங்கள முன்னணி இசைக்கலைஞர்கள் பங்குபற்றினார்கள். இவற்றுக்குப் பிறகு தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகிகள் எல். ஆர். ஈஸ்வரி, வாணி ஜெயராம் ஆகியோர் இங்கே வந்தபொழுது அவர்களின் நிகழ்ச்சிகளுக்கு நாம் இசை வழங்கினோம். தொடர்ந்து 'அமுதும் தேனும்' என்ற பெயரில் புதிய முறையிலான இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் மேற்கத்தைய ட்ரம்ஸ், கீழைத்தேய தவில்- நாதஸ்வரம் என்பவற்றை இணைத்து ஒரு கூட்டு இசையை உருவாக்கினோம். மங்கள இசை கருவியாகவே வழக்கத்திலிருந்த தவில்- நாதஸ்வர இசைக்கருவிகளை நாம் வேறு பயனுக்கும் கொண்டு வந்தோம்.

✪✪ நாடக, திரைப்பட, இசை நிகழ்வுகள் அவற்றின் தன்மைபற்றிக் கூறுங்கள்.

☆☆ 70களின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில நாடகமுறை புதிய வளர்ச்சியும், பரிமாணமும் பெறத் தொடங்கியது. தாஸியஸ், பாலேந்திரா, குழந்தை ம. சண்முகலிங்கம், மௌனகுரு, நா. சுந்தரலிங்கம் இவர்களுடன் அப்போது மாணவனாக இருந்த சிதம்பரநாதன் போன்றோரின் புதிய வடிவ நாடகங்களுக்கு புது இசை வடிவமும் தேவையாகவிருந்தது. இங்குதான் நாம் நாடகத்துடன் முழுமையாக இசையில் ஒன்றிணையக்கூடியதான சாத்தியப்பாடு காணத்தொடங்கியது என நினைக்கிறேன். இந்த முன் முயற்சிகளில் பாலேந்திரா நினைவுகூரத்தக்கவர். நாடகத்துக்கான இசை நல்லபடியாக அமையத்தொடங்கியது. இதெல்லாம் எனக்குப் புதிய அனுபவமாகவும், நிரம்ப அறிவையும், இவற்றில் நான் பயிற்சி பெறக் கூடியதாகவும் இருந்தன. இதில் முக்கியமாக பாலேந்திராவின் தயாரிப்பிலான 'பேர்லோட் பிறெஃட்'டின் 'யுகதர்மம்' நாடகத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இது இலங்கை முழுவதும் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்தில் என்னுடைய இசையின் தன்மை பற்றி பல்வேறு நிலையிலிருந்தும் நல்ல விமர்சனங்கள் கிடைத்தன. அதோடு பாலேந்திராவின் முயற்சியால் 'அவைக்காற்றுக்கழகம்' 81ம் ஆண்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய 'கானசாகரம்' என்ற தலைப்பில் கவிதைகளுக்கு நாம் இசைவடிவம் கொடுத்து மெல்லிசையாகப் பாடிய நிகழ்வும் குறிப்பிடத்தக்கது. தாஸியஸின் 'பொறுத்தது போதும்' மஹாகவியின் 'கோடை', 'புதியதொரு வீடு' மௌனகுருவின் 'சங்காரம்' குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'மண் சுமந்த மேனியர்' 1, 2 எனத் தொடர்ந்து சிறுவர் நாடகங்கள், பிறகு 'மாற்றம்', 'பள்ளி எழுந்திடுவீர்', ' உயிர்த்த மனிதர் கூத்து', 'எந்தையும் தாயும்', 'அன்னையிட்ட தீ', 'யார்க்கெடுத்துரைப்பேன்' எனப் பல நாடகங்களுக்கு இசை அமைத்துள்ளேன். இந்த முயற்சிகள் இன்னும் தொடர்கிறது. திரைப்படத்துடனான இசை முயற்சிகள் என்று சொன்னால், முதன்முதல் 'கோமாளிகள்' என்ற திரைப்படத்திற்கு இசை அமைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதில் பெருமளவுக்கு என்னுடன் சிங்கள இசைக் கலைஞர்கள் பங்குபற்றினார்கள். திரைப்படத்துக்கான இசை என்பது எனக்குப் புதியதாக இருந்ததால் இதில் என் நண்பராகவும், என் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருந்த எம். கே. றொக்சாமி பெருமளவுக்கு உதவினார். அதைந்தொடர்ந்து லிபேர்ட்டி பிலிம்ஸின் 'தெய்வம் தந்த வீடு' படத்துக்கான இசையை அமைத்தேன். அந்தப் படத்தில் நாதஸ்வர இசைக் கலைஞர் என். கே. பத்மநாதனின் நாதஸ்வர இசையையும் பயன்படுத்தினேன். இந்தப் படத்தில் இசையமைப்புடன் இசைக் கலைஞனாகப் பாத்திரமேற்றும் நடித்தேன். அதற்குப் பிறகு தேவன் பிலிம்ஸின் 'எனக்கென்றொரு உலகம்' என்ற படத்துக்கான பாடல் ஒலிப்பதிவு நடந்தது. ஆனால் படம் வெளிவராததால் பாடல்களும் வெளியாகவில்லை. திரைப்படத்துக்கான இசையை நான் உருவாக்கும் பொழுதெல்லாம் முன் அனுபவமாக நான் நாடகத்திற் பயின்ற இசையும், அந்த அனுபவங்களும் பெரிதும் உதவின.



இலங்கை வந்திருந்த இளையராஜாவுடன்

ஈழத்து தமிழ் வாழ்க்கை குன்றி அங்கு வெறுமை பரவிக் கிடக்கும் என்ற என் கற்பனைக்கு மாறாக, தமிழ்விழாக்கள் கோலாகலமாக நடைபெறுகின்றன. கர்நாடக ராகங்களை அடிப்படையாகக் கொண்ட மெல்லிசைகளில் மனதைத் தொடும் கவிதைவரிகளை பெண்கள் அற்புதமாகப் பாடுகிறார்கள். இளைஞர்கள் அற்புதமாகப் பாடுகிறார்கள். இப்பாடல்களுக்கு இசை அமைத்தவர் மனதை அள்ளும் மெட்டுக்களை புனைவதில் வல்லவர் என்பதில் சந்தேகமேயில்லை.

-சுந்தர ராமசாமி-
'சுபமங்களா, நவம்பர் 93'

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




தமிழீழத் தேசியத் தலைவரின் தேசிய விருதைப் பெறுதல்

✪✪ இன்று இங்குமட்டுமல்ல தமிழுலகம் எங்கும் பேசப்படும், விதந்துரைக்கப்படும் தங்களால் உருவாக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் பாடல்கள் பற்றிய தங்கள் எண்ணக் கருத்தை எடுத்துச் சொல்லுங்கள்.

✩✩ விடுதலைப் போராட்டப் பாடல்களுக்கு நான் தரும் வடிவம் ஏற்கனவே நான் கையாண்ட இசை வடிவங்களோ அன்றி ஹிந்துஸ்தானிய இசை வடிவங்களோ அல்ல. இந்தப் பாடல்கள் கர்நாடக சங்கீதத்தின் ராகங்களை அடிப்படையாகக்கொண்டு, மேற்கத்தைய இசையின் கூறுகளைக் கலந்து உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்தப் பாடல்களின் இசையுடன் இணையும் கவிதைகளின் தன்மை, சொற்களின் அமைவு, சொற்கள் உணர்த்தும் பொருள் என்பவற்றுக்கேற்ப அந்த உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் இசை வடிவத்தை நுட்பமாகச் சித்தரிக்கின்றேன். இது ஒரு புதிய வடிவம் என்றுகூடச் சொல்லலாம். இதில் பலதரப்பட்ட ரசங்களையும் பயன்படுத்துகின்றேன். அத்தோடு இந்தப் பாடல்களுக்கு அளிக்கப்படும் பின்னணி இசைகூட அப்பாடல்களை நுகர்வோர் (கேட்போர்) மனதில் மேலும் மேலும் பாடலின் பொருளை, அதன் உணர்வைப் பிரதிபலிப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. எனவேதான் பாடலின் தன்மை, அது உணர்த்தும் உணர்வு, சூழல் என்பவற்றைக் கொண்டே இசையும் மெட்டும் இவற்றுடனிணைந்த முன்னிசை, இடையிசை என்பவையும் உருவாக்கப்படுகின்றன. சில பாடல்களில் இசையை ஒரு சத்தத்தினூடாகவும் பாடலின் கருத்தையும் அதன் உணர்வையும் . வெளிப்படுத்த முயன்றுள்ளேன். சில பாடல்களில் சத்தமின்றி நிசப்தம் நிலவும் சில கணங்களையும் அமைத்துள்ளேன். இந்த நிசப்தமும் ஒரு இசைதான். அது அமையும் சூழல், தன்மையைப் பொறுத்து அதன் உன்னதம் பெருகுகிறது. பாடலில் நிகழும் இந்த நிசப்தம் கேட்பவரின் மனதில் பல உணர்வுகளைக் கிளர்த்தும். இது ஆற்றல் மிக்கது. இவ்வாறு பல அம்சங்களின் சேர்க்கையில் உருவாகியுள்ள இந்தப் பாடல்கள் ஏனைய பாடல் வடிவங்களிலிருந்து வேறுபடுகிறது. இந்தப் பாடல்களை உருவாக்கி ஒலிப்பதிவு செய்யும் இன்றைய போர்ச்சூழ்நிலையில் பல வசதியீனங்களையும், இடர்ப்பாடுகளையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது. முக்கியமாக குறிப்பிட்ட ஒரு சில வாத்தியக் கருவிகளைக் கொண்டே எல்லாப் பாடல்களையும் உருவாக்கவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. மற்றது, கலைஞர்களின் பற்றாக்குறை. குறிப்பிட்ட சில கலைஞர்களைக் கொண்டே சில வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தியே எல்லாப் பாடல்களையும் உருவாக்குகின்றோம். எனினும் முடிந்தவரையில் பாடல்களை வித்தியாசப்படுத்திக் காட்டமுனைந்துள்ளேன். இந்தப் பாடல்களைக் கேட்கும் பொழுது பாடலின் பின்னணியில் ஒலிக்கும் ஒலியலைகள் எவையென்றாலும் அவை அப்பாடலை கேட்பவர் மனதில் பொருள் கொள்ளும்படியே அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடல்களை ஆழ்ந்து கேட்பவரால் உணரமுடியும்.

இன்னுமொரு வித்தியாசம் பிரதானமானது. இங்கே பாடல்களைப் பாடுபவர்கள் தொழில் முறையிலான அனுபவங்களோ, பயிற்சியோ பெற்ற கலைஞர்கள் அல்ல. பாடல்களை ஒலிப்பதிவு செய்யும் போது இந்தப் பாடகர்கள் பாடல் வரிகளின் பொருளை; அதனுடன் இணைந்து வரும் இசையின் தன்மையை, என இரண்டையும் புரிந்துகொண்டு பாடவேண்டும். எனவே கவிதை வரிகளில் உள்ள பொருள், அது உணர்த்தவேண்டிய விசயம், இசையின் படிமம் என்பவற்றைப் பாடகர்ளுக்குச் சொல்லிக் கொடுத்தும், பயிற்றுவித்தும் மீள அவர்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்கும் உணர்வைப் பெறவேண்டியுள்ளது. இந்தக் கூட்டிசை முயற்சிகள் நாளை அவர்களுடைய தனி முயற்சிகளுக்கும், எதிர்காலத்துக்கும் நல்ல பயன்தருமென நினைக்கின்றேன்.

✪✪ தமிழீழத்தில் இசைத்துறை இனிவரும் காலங்களில் எப்படி இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகின்றீர்கள்?

✩✩ தமிழீழ இசை என்னும் பொழுது நமது இசையின் அடிப்படையாக இருந்துவரும் கர்நாடக இசை அதன் தொடர்ச்சியான ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கட்டும். ஆனால் கர்நாடக இசையின் புதிய நுட்பங்களைக் கொண்டு நாடகத்துக்கான இசை, மெல்லிசை போன்ற துறைகள் வருங்காலத்தில் புதிய பரிமாணங்களைக் காணவேண்டும். இதனுடைய பொறுப்பு தேர்ச்சிமிக்க; இசையில் நுட்பமான அக்கறையுள்ள கலைஞர்களிடம் தான் உண்டு. இந்தப் பொறுப்பை, இதன் வரலாற்றுக் கடமையை புரிந்துகொண்டு செயற்படவேண்டும். இதைச் சாதாரண விடயமாகக்கொண்டு தள்ளிவிடக்கூடாது. இவர்கள் வருங்காலத்தில் புதிய ஆக்கங்களை உருவாக்குவதில் முன்னின்று உழைக்கவேண்டும். எமக்கென்ற இசைமரபொன்றையும், தனித்துவத்தையும் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

நன்றி: வெளிச்சம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


நாட்டுப்பற்றாளர் திரு. து. நித்தியானந்தன் (நித்தி அண்ணர்)

# வார்த்தைகள் வலுவிழந்துபோன ஒரு ஆற்றமுடியாத துயரம்

## "நித்தி"யின் சில நினைவுக் குறிப்புகள்

நித்தி அண்ணர் காலமாகி விட்டார்; இல்லை; அவர் 'காலம்' ஆகிவிட்டார்!

அப்படியென்ன இவரின் இழப்பில் மட்டும் இத்தனை துயரம்?

நித்தியண்ணர் நிர்மலமான நெடுவானம். பால்மணிக்கதிர் பரப்பிய பச்சை வயலில் தலைதடவி விளையாடிய பூங்காற்று. வைகாசி விசாகத்து நிறை நிலா. இவருடன் பழகிய நினைவுகளைத் தூக்கித் தூர வீசினாலும் மீண்டும் அவை காலடியில் வந்து கைகட்டி நிற்கும். இன்று இவர் இல்லாமற் போய்விட்டார் என்று எண்ணும் போதிலெல்லாம் இமையோரம் திரைகட்டி கண்களில் நீர் துளிர்க்கும். பழகிய நாட்கள் ஒவ்வொன்றும் சருகாகிச் சொரியாது இளவேனிற் காலத்து அரச மரம் போல புதிதாக பச்சையிலை பரப்பி நிற்கும்.

எல்லோருக்கும் நல்லவனாகவும் தோள்தரும் துணைவனாகவும் என்றும் சிரித்தபடி எப்படி ஒருவனால் இருக்கமுடியும்? பயிற்சி தரவல்ல பாட்டு வாத்தியாரும் போய்விட்டார். அவர்தான் நித்தியண்ணர்.

எமது விடுதலைப் போராட்டத்திற்கு "நித்தி"யின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையையும், வழிகாட்டலையும் நெஞ்சார நேசித்த இவரின் பிரிவு பெரிய துயரம்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்துக்கு நித்தி அண்ணரின் மறைவு நிரப்பமுடியாத இடைவெளி.

தமிழகத்திலிருந்து மூன்றாண்டுகளுக்கு முன்னர் வருகை தந்த இனமான எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா அவர்களின் விடுதலைப் பாடல்களை தமிழீழமெங்கும் துல்லியமாக ஒலிக்கச் செய்ததில் நித்தி அண்ணர் காட்டிய ஆர்வமும், ஒத்துழைப்பும் அளப்பரியது. யாழ்ப்பாண முற்றவெளியில் தொடங்கி தென்தமிழீழத்து அக்கரைப்பற்று வரையும் தமிழீழம் எங்கணும் தன் சீரற்ற உடல் நிலையையும் கருத்திலெடுக்காது மருத்துவ வசதியற்ற காட்டுவழியெல்லாம் எங்களுடன் பயணம் செய்து, தன் ஒலித்துறை நிபுணத்துவத்தால் செல்லப்பாவின் தேனிசைக்கு வளம் சேர்த்தார்.

வரலாற்று விழாக்களான, நாங்கள் நடாத்திய முத்தமிழ்விழா, தமிழிசை விழா, அரங்கேற்ற விழா, பண்பாட்டு விழா அனைத்துக்கும் தன் சக்திக்கு மேலாகப் பணியாற்றி விழாக்களின் வெற்றிக்குத் துணையானார்.

எம்மால் வெளியிடப்பட்ட பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள் அனைத்துக்கும் இவரே ஒலிப்பதிவாளராகப் பணிபுரிந்தார். இன்று உலகமெங்கணும் எமது விடுதலைப் பாடல்கள் உயர்வானவை என்று பேசப்படுவதாயின் அதற்கு மூல காரணமானவர்களில் நித்தியண்ணரும் முக்கியமானவர் என்பது மறைக்கமுடியாத உண்மையாகும்.

இப்படி எத்தனை எத்தனை....

இனி நித்தியண்ணர் இல்லையென்பது உறுதியாகிவிட்டது. "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்று தொடங்கி "வெற்றி பெற்றுத் தந்துவிட்டு நீருறங்குகின்றீர்" என்பது வரை சரித்திரம் படைத்து, சாகாத பாடல்களாகிவிட்ட நூற்றுக்கணக்கான பாடல்கள் காற்றில் கலந்து எங்கள் காதுகளில் விழும்வரை நித்தியண்ணர் நித்தியமானவர்.

**- புதுவை இரத்தினதுரை -**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழின் மாண்பு

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர் தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

உலகத்திலேயுள்ள ஒவ்வொரு மொழியும் ஏதோ வகையில் ஒரு குடும்பத்தைச் சார்ந்ததாக அமைகின்றது. இந்தோ- ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தன வாக ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலியம், ஜெர்மன் போன்ற மொழிகள் அமைகின்றன. ஆபிரிக்காவிலுள்ள மொழிகள் பன்ரூ (Bantu) மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. கொரியன், மொங்கோலியன் போன்ற மொழிகள் அல்ற்றய்க் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தன. இந்த வகையில் தமிழ், திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு, தோட, இருளா போன்ற மொழிகளும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தனவே. இக்குடும்பத்தின் மூத்த மொழியாகத் தமிழ் மொழி அமைகின்றது. திராவிட மொழிகள் எல்லாவற்றுள்ளும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கியப் பாரம்பரியத்தையுடைய ஒரே மொழி எம்முடைய தமிழ் மொழியாகும்.

இன்று உலகிலேயுள்ள சில மொழிகளே நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தை உடையனவாயுள்ளன. இவற்றுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். இவ்வாறு நீண்ட இலக்கியப் பாரம்பரியம் மட்டுமன்றி, மிகச் சிறந்த பழமைவாய்ந்த இலக்கியங்களையும் தோற்றுவித்த மொழி தமிழ் மொழியாகும். திருக்குறள் என்னும் இலக்கியம் பல பிற மொழிகளிலே மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. மிகப் பழமைவாய்ந்த பைபிளும், திருக்குரானும் ஏராள மான பிறமொழிகளிலே பெயர்க்கப் பட்டுள்ளன. இந்த வகையிலே எம்முடைய தமிழ்த் திருக்குறள் உலகிலே மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. ஆனால், பைபிளும், திருக்குரானும் சமயநூல்கள்; அவை இலக்கியங்களல்ல. எனவே, ஓர் பழமைவாய்ந்த இலக்கிய நூல் பெருந்தொகையான பிறமொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டதென்றால், அப்பெருமை திருக்குறளையே சாரும். இதனாலேதான், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடினார். "போப் ஒரு தமிழ் மாணவன்" என்று தன் கல்லறையிலே பொறிக்கும்படி பணித்த டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் தமிழ் இலக்கியங்களை மேலைத் தேயவர்களுக்குத் தெரிவிக்கச் செய்ய முயன்ற போது திருக்குறளையே முதன்முதலாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பின்னர்தான் திருவாசகத்தை ஆங்கில மொழியிலே மொழி பெயர்த்தார்.

> **ஓர் பழமைவாய்ந்த இலக்கிய நூல் பெருந்தொகையான பிறமொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டதென்றால், அப்பெருமை திருக்குறளையே சாரும்.**

கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலே பண்டைக் காலத்திலேயே சிறந்த இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. தமிழ் மொழியிலும் பண்டைக்காலத்திலேயே தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் இயற்றப்பட்டது. இவ்விலக்கண நூல் பண்டைத் தமிழ்மொழிக்கு மட்டுமன்றி, பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்கும் இலக்கணம் கூறியது.

கிரேக்க மொழியிலே அமைந்த வீரயுகப் பாடல்கள் போலத் தமிழ் மொழியிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வீரயுகப் பாடல்கள் எனச் சொல்லத் தகுந்த புறப்பாடல்களும், அகப்பாடல்களும் தோன்றின. போர்க்காலச் சூழ்நிலையிலே எத்தகைய பாடல்கள் தோன்றக்கூடும் என்பதற்குத் தமிழ் மொழியிலே அன்றும் இன்றும் எழுந்த பாடல்கள் சான்றாகின்றன.

தமிழ் மொழியிலே எழுந்த பக்திப் பாடல்கள் அன்பும் கனிவும் உள்ள பாடல்கள். இவை தமிழ் மொழிக்குச் சிறப்புச் செய்வன. பிறமதத்தைச் சார்ந்த தவத்திரு தனிநாயக அடிகளார் 'பத்தியின் மொழி தமிழ்' என்று தமிழ்மொழியினையும் இப் பாசுரங்களையும் அறிமுகஞ் செய்தார்.

மேலை நாட்டவர்கள் ஒரு காலத்திலே கிழக்கு நாட்டவர்களுடைய மொழி, பண்பாடு, வரலாறு முதலியனவற்றை 'ஒறியன்றல்' (Oriental) என்றொரு பெரும்பகுதிக்குள் அடக்கியே ஆய்வுசெய்தனர். இவற்றுள் இந்தியா தனியாக ஆராயப்படவேண்டியதெனக் கால வோட்டத்திலே உணர்ந்துகொண்டனர். இதனால் 'இந்தியாவியல்' என்ற பகுதி உண்டாகி ஆய்வுகள் நடந்தன. காலஞ்செல்ல, தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு, இலக்கியம் ஆகியன தனியாக ஆராயப்பட வேண்டியதென உணர்ந்தனர். இதன் பலனாகவே 1964 இல் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தோன்றியது. இதன் விளைவாக 1966இல் கோலாலம்பூரிலும், 1968இல் சென்னையிலும், 1970இல் பாரிசிலும், 1974இல் யாழ்ப்பாணத்திலும், 1981இல் மதுரையிலும், 1985இல் மொரிசியசிலும், 1987இல் கோலாலம்பூரிலும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றன. எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சாவூரிலே அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலே நடைபெறவுள்ளது. இவ்வாராய்ச்சி மாநாடுகளின் பெறுபேறாக உலகின் பலநாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலே தமிழ்மொழி கற்பிக்கப்படுகின்றது. தமிழியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வேகமாக வளர்ந்துவரும் தகவல் யுகத்துக்கு முகங்கொடுக்கவும், அடுத்த நூற்றாண்டிலே காலடி வைக்கவும் தமிழ்மொழி இப்பொழுது தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அரங்கில் காட்சியமைப்பு

## - ஒரு நோக்கு -

மு. இராதாகிருஷ்ணன்

பார்வையாளர்களின் கண்கள் கூர்மையடைகின்றன. அரங்கில் முதன்மையான அந்த நடிகன் அந்த கதாபாத்திரமாக மாறி தன் கலையை தன்னைக் கொண்டே வெளிப்படுத்துகின்றான். ஆம். அது ஒரு அரங்க இயக்கம். அது ஒரு கட்புலக்கலை. ஆயினும் தன் உள, உடல் இயக்கத்தைக் கொண்டு பலவித படிமங்களை வெளிப்படுத்தும். நடிகனும் பார்வையாளனும் இருந்துவிட்டால் அங்கு அந்த அரங்க இயக்கம், நாடகம் நிச்சயமாக நிகழ்த்தப்படமுடியும். ஆயினும் நடிகனை பாத்திர நிலைப் படுத்துவதற்கும் பாத்திரத்தின் கால கட்டம், சூழல் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கும் ஒப்பனை, வேட உடுப்புக்கள் என்பவற்றுடன் காட்சி அமைப்பு, ஒலி, ஒளி, இசை போன்ற பல்வேறு மூலகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே தான் அரங்கக்கலை என்பது ஒரு பண்பாட்டு வெளிப்பாட்டின் அழகியல் அம்சம் எனக் குறிப்பிடப் படுகின்றது.

இவ்வாறாக நோக்கும் பார்வையாளனின் கருத்தை கவரும் சிறந்த ஒரு அழகியல் அம்சமாகவும் பாத்திரத்தின் தன்மையினை வரையறுக்கும் ஊடகமாகவும் அரங்கக் காட்சி அமைப்பு என்பதனைக் குறிப்பிடலாம். மேலும் இது ஒரு நாடகத்தின் இயக்கத்திற்கான பின்னணி மூலமாக மட்டும் அமையாது, அரங்கத்தில் நடிகனின் நிகழ்த்தலுக்கு உதவுகின்ற அடிப்படையான ஒரு காட்சிக் கலையை சிருஷ்டிப்பதாகவும் பார்வையாளர்களின் புலன்களை நாடக நிகழ்வுடன் ஒன்றிணைக்கும் திறன் கொண்டதாகவும் வெளியினை வரையறுப்பதாகவும் உள்ளது. அத்துடன் நாடக கதாபாத்திரத்தின் மனநிலையை நன்கு உணர்த்தக்கூடியதாகவும் சூழலை சிருஷ்டிக்கின்ற அரங்கச் செயற்பாடாகவும் இருக்கின்றது.

பொதுவாக ஒரு நாடகம் யதார்த்த வாழ்வினைப் புலப்படுத்தும் யதார்த்தபூர்வமான நடிப்பு முறையினைக் கொண்ட நாடகமாகவோ, அல்லது உடல் மொழி என்ற வகையில் நிகழ்த்தப்படுகின்ற உடல் சார்ந்த வெளிப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொண்ட கருத்துருவ நாடகமாகவோ அமையலாம். இத்தகைய நாடகத்தின் தன்மைக்கு ஏற்பவே காட்சி அமைப்புக்களும் யதார்த்தபூர்வமான இயற்பண்பு சார்ந்தவையாகவோ அல்லது சிந்தனையை தூண்டக்கூடிய கருத்துருவ காட்சி நிலைகளாகவோ அமைகின்றன; பயன்படுத்தப் படுகின்றன.

இத்தகைய இருவகையான நாடக நிகழ்வுகளிலும் காட்சியமைப்பானது ஒரு பிரதான இணைச் செயற்பாடாக அமைகின்றது.

கொடிய வனத்தின் நடுவில் இளவரசன் ஒருவன் வேட்டையாட வருவதாக நாடகம் ஒன்றில் ஒரு நிலை வருவதாக இருந்தால் கொடிய வனத்தைப் பின்னணியாக சீனறிகளாகவோ அல்லது மரம் போன்ற பொருட்களாகவோ உருவாக்காது விட்டால் பார்வையாளர் அந்தக் காட்சியுடன் இணைந்து ஒன்றிச் செல்லவும், கதாபாத்திரத்தின் மனநிலையை புரிந்துகொள்ளவும் மாட்டாதவர்களாக போகக் கூடும். இதனாலேயே காட்சியமைப்பு ஒரு நாடகத்தின் இன்றியமையாத அம்சமாயிற்று எனக் கூறலாம்.

காட்சியமைப்பில் பல்வேறு தேவைகளுக்கும் பலவிதமான பொருட்கள், வர்ணங்கள், துணிகள், சீனறிகள் அல்லது நிலக்காட்சிப் படங்கள் என்பவை பயன்படுத்தப் படுகின்றன. இவை ஒவ்வொன்றும் நாடகப் பாத்திரத்தின் மன நிலைக்கு இசைவானதாகவும், பார்வையாளனிடம் அதே மன நிலையை உருவாக்குபவையாகவும் அமைகின்றன. உதாரணமாக கோபம், அவலம் போன்ற மன நிலை வெளிப்பாட்டின் போது சிவப்பு, கறுப்பு, கபிலம் போன்ற வர்ணங்களின் பயன்பாடு கூடுதலாகவும் மகிழ்ச்சி, சிறப்பு போன்ற விடயங்களில் பசுமையான வர்ணங்களும் எழுச்சி, வீரம் போன்ற உணர்வுகள் கொப்பளிக்கின்ற இடங்களில் மஞ்சள், சிவப்பு வர்ணங்களும் பயன்படுத்துவதன் மூலம் அவ்வுணர்வுகளை கதாபாத்திரத்தின் மூலம் சிறப்பாக வெளிக்கொணர முடிவதுடன் பார்வையாளர்கள் அதனை அடையக்கூடியதாகவும் அமைகின்றது.

அரங்க வரலாற்றினை நோக்கினால் அங்கு காட்சி அமைப்பு என்பது ஆரம்பத்தில் 'உள்ளக அரங்கு'களின் வளர்ச்சியுடன் தொடர்புபட்டதாகவே உள்ளது. உள்ளக அரங்குகளின் தோற்றத்தின் பின்னரே அது சிறந்த முறையில் வளர்ச்சி அடைந்தது என்பர்.

மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பின் ஏற்பட்ட அரங்க வளர்ச்சி மேடையில் காட்சி அமைப்புக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது எனலாம். 18ம் நூற்றாண்டில் இருந்து அரங்கில் காட்சியமைப்பின் மூலம் பொய்த்தோற்றத்தைக் காட்டும் பண்பு பிரதானமாகியது. இதற்கு அக்காலத்தில் காணப்பட்ட மனோரதிய நாடகங்களுக்குப் பின் உருவான சரித்திர யதார்த்தவாதம் பெரும் பங்கினை வகித்தது. இந்நாடகங்களில் சரித்திரப் பின்னணியில் அச்சரித்திரகாலக் காட்சிகளை மேடையில் பெருமளவில் பயன் படுத்தினர். மாடமாளிகைகள், கோபுரங்கள், கோட்டைகள் என்பனவும் அரசவைக் காட்சிகளும் மாயத் தோற்றங்களாக மேடையில் சிருஷ்டிக்கப்பட்டன.

பிற்காலத்தில் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு ஏற்ப இவை அசையக்கூடியதாகவும் திடீர் என தோன்றக்கூடியவையாகவும் பல விதங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இன்றும் இத்தகைய மாயக் காட்சிகள் மேடைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய மாயக்



**இன்று அரங்க நிகழ்வானது வெறும் பொழுதுபோக்கு அம்சமாகவோ அல்லது அனுபவத்தை வழங்குகின்ற அம்சமாகவோ இருந்த நிலையில் இருந்து மாறி மூன்றாம் உலக நாடுகளின் உணர்வுப் பரிமாற்ற ஊடகமாகவும் பண்பாட்டு பரிமாற்றத்திற்குரிய ஒரு போர்க்கருவியாகவும்**

காட்சிகளை உருவாக்குவதில் தமிழ் நாட்டில் மனோகர் பிரபலமானவராகவே உள்ளார்.

இவ்வாறாக நோக்கும் போது காட்சி அமைப்புக்கள் நாடகத்தின் பாத்திரப் பண்புகளை வெளிப்படுத்தவும் பாத்திரத்தின் சூழலை, கதைக் காலகட்டத்தை நிர்ணயிக்கின்ற ஊடகமாகவும் இருப்பதை அவதானிக்கலாம். அத்துடன் குறித்த ஒரு பாத்திரத்தின் சமூக, பொருளாதார அந்தஸ்தை வெளிப்படுத்துவதுடன் அப்பாத்திரத்தின் தொழில், அதன் மனநிலை போன்றவற்றையும் வெளிப்படுத்துகின்றது. இத்தகைய காரணங்களினாலும் ஓரளவு சினிமாவின் தாக்கத்தினாலும் காட்சியமைப்புக்கள் பெரும் எடுப்பிலானதாகவும் இயன்றளவு தொழில் நுட்பம் புகுத்தப்பட்டதாகவும் “மாயத்தன்மை” பொருந்தியதாகவும் மாற்றமுறத் தொடங்கியது.

கடந்த இரு நூற்றாண்டுகளாக அரங்கியல் முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் காட்சியமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இயற்பியல், நடப்பியல், குறியீட்டியல், வெளிப்பாட்டியல், ஆக்கவியல், மிகை நடப்பியல், அருபம் போன்ற பல்வேறு இயக்கங்களினால் வழி நடத்தப்பட்ட அரங்கவியல், அவ்வியக்கப் பண்புகளினால் காட்சியமைப்புக்களிலும் மாற்றங்களைப் பெற்றுக்கொண்டன.

நாடகங்களில் இயற்பியல் பண்பு மேலோங்கத் தொடங்க காட்சியமைப்புக்களும் யதார்த்தமானதாக பார்வையாளரின் கற்பனைக்கு எட்டாத ஒன்றாக, வாய் பிளக்கக்கூடியதாக இல்லாமல் நடைமுறை வாழ்வில் பார்த்தளித்த தோற்றங்களால் நிரப்பப்பட்டன. மக்களின் வாழ்வியல் மேடையில் புலப்பட்டது. ஒரு கடற்கரைக் கிராமத்தில் நடக்கும் கதையாக நாடகம் இருந்தால் பின்னணியில் கடற்கரைச் சூழல் சீனறிகளால் காட்டப்பட மேடையில் குடிசை முப்பரிமாண முறையில் உருவாக்கப்பட்டு அதன் முன்றலில் நாடகப் பாத்திரங்கள் இயங்குவர். யதார்த்தவாத மோடிகளில் இத்தகைய முறையிலேயே காட்சி அமைப்புக் காணப்படுகின்றது.

ஆயினும் இயற்பண்பு சாராத யதார்த்த விரோதமோடி நாடகங்களில் காட்சியமைப்பு, வேறுபட்ட தன்மை கொண்டதாக உள்ளது. அங்கு கருத்துருவப் பண்பே காட்சிப்படுத்தலில்; காட்சியமைப்பில் முக்கிய இடம் வகிக்கின்றது. அத்துடன் அவ்வவ் இயக்கப்பண்புகள் வெளிப்படுத்தும் கருத்துருவங்களாகவும் அவை அமைகின்றன.

இன்று நவீன நாடகங்கள் என்றழைக்கப்படுகின்ற இவ் யதார்த்த விரோத நாடகங்களில் காட்சியமைப்பு என்பதன் முக்கியத்துவம் சற்றுக் குறைந்து நடிகர்களின் பொறிமுறையிலான அசைவியக்கம் காட்சியமைப்பாகப் பரிமளிக்கின்றது. கருத்துருவக் காட்சிகளாக ஆங்காங்கே சில பொருட்கள் மேடையிலே வைக்கப்பட கதாபாத்திரங்களின் உறைநிலை, நடிகர்களின் பிணைந்த அல்லது இணைந்த

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உறைநிலை அசைவு என்பன ஓவியப்படிமங்கள் போல் தோற்றமளித்து காட்சியமைப்பை சிருஷ்டிக்கின்றன. இதன் மூலமும் வெறுமனே பார்வையாளராக இருந்து பொழுதைப் போக்குவதாக இல்லாது சிந்தனையைக் கிளறி ஓர் அனுபவத்தைப் பெற வைப்பதாக அமைகின்றது. இன்று எமது மண்ணில் இத்தகைய நாடகங்கள் பல நிகழ்த்தபடுகின்றதைக் காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பீட மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட "பொய்க்கால்" நாடகத்தில் இத்தகைய ஓவியக் காட்சி நிலைகள் பல காணப்பட்டன. அன்னியோன்னியமாய் வாழ்ந்த முன்னைய யாழ்ப்பாண மக்கள் இணைந்து ஒருவனைத் தூக்கும் காட்சி கணநேர உறைநிலையில் சிறந்த ஒரு ஓவியக்காட்சி நிலையாகவே அமைந்தது.

இதே நாடகத்தில் மேற்கத்தேயர் வருகையின் பின்னர் பசுமையான யாழப்பாண சீனறி வீழ்த்தப்பட்ட பின்னணியில் காசுக்காக அலையும் சமுதாயம் வெளிப்படும் காட்சியும் மிகச்சிறந்த ஒரு ஓவியக்காட்சி நிலையாகப் பலராலும் குறிப்பிடப்பட்டது. அத்துடன் காசுக்காக அலையும் அச்சமுதாயத்தின் மொத்த ஆளுகைக்குள்ளும் மேடை வந்த பின்னர் அது ஒரு பழைய சாமான்கள் போடப்படுகின்ற ஒரு அறை அல்லது எலிவளை போன்ற காட்சியமைப்பு எமது சிந்தனையில் தோன்றுவதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

இதேபோன்று அண்மைக் காலத்தில் மேடையேற்றப்பட்ட "உயிர்த்த மனிதர் கூத்து" என்ற அரங்க நிகழ்விலும் காட்சியமைப்பு என்பது நாடக நடிகர்களின் உடலியக்கத்தினால் உருவகப்படுத்தப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. இத்தகைய நடிகர்களினால் அவர்களது அசைவியக்கத்தினால் சிருஷ்டிக்கப் படுகின்ற ஓவியக்காட்சி நிலைகள் புதிய ஒரு பரிமாணத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. இதற்குப் பலவிதமான முகமூடிகள், வேட உடைகள், அணிகலன்கள் என்பனவும் துணையாக அமைந்திருக்கின்றன.

இன்று அரங்க நிகழ்வானது வெறும் பொழுதுபோக்கு அம்சமாகவோ அல்லது அனுபவத்தை வழங்குகின்ற அம்சமாகவோ இருந்த நிலையில் இருந்து மாறி மூன்றாம் உலக நாடுகளின் உணர்வுப் பரிமாற்ற ஊடகமாகவும் பண்பாட்டு பரிமாற்றத்திற்குரிய ஒரு போர்க் கருவியாகவும் பயன்படுத்தப்படும் இவ்வேளையில், அத்தகைய மாற்றங்களுக்கு இயைந்து கொடுக்கக்கூடிய வகையில் காட்சி அமைப்பு என்பதும் மாறி வருவதைக் காணலாம்.

# ஒட்டுமில்லாமல் உறவுமில்லாமல் மனிசரேண்டு....

பாரிசின் புறநகர்ப் பகுதி அது. மூர்க்கத்தனமாக அவசரப்படுகின்ற வாகனங்களினதும், மனிதர்களினதும் நெரிசல் குறைவான இடம். பழப்பாய் விரிந்து கிடக்கின்ற வெளிகளில் இப்போதுதான் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தனித்தனியாக முளைக்கின்ற வீடுகள்.

அண்மையில் ஒருமுறை சென்ற பொழுது நண்பனின் தாயும் தந்தையும் அங்கு வந்திருந்தனர். தும்பைப் பூப்போல பழுத்த நரைமுடி. வெள்ளை வேட்டியும் போர்த்திய சால்வையுமாக பேரப்பிள்ளையுடன் குலாவிக்கொண்டிருந்தார் நண்பனின் தந்தை.

இலங்கையில் அரச உத்தியோகத்தில் இருந்து ஓய்வுபெற்றவர். "எப்படி ஐயா நாடு பிடிச்சிருக்கா?" என வாயைக் கிண்டினேன்.

"என்ன வாழ்க்கை தம்பி இது... எந்நேரமும் வீட்டுக்குள்ளேயே லோங்சைப் போடு எண்டு பெடியன் சொல்லுறான். வயசு போன நேரத்தில ஆறுதலா கதைக்கக்கூட ஆள் இல்லை. ஒரு பிள்ளை அவுஸ்திரேலியாவில.... ஒருத்தன் லண்டனில... ஒருத்தன் இங்க... காணிவேண்டி வீடு கட்டிக்கொண்டு. பிள்ளையளைப் பார்க்க ஆசைப்பட்டம். எல்லா இடமும் போய் எல்லாரையும் பார்த்தாச்சு. எல்லாரும் தங்களோடை இருக்கச் சொல்லுகினம். எனக்கு இதெல்லாம் ஒத்துவாறது மாதிரி இல்லை. ஆரைப்பார்த்தாலும் காசு, காசு எண்டு பறக்கிறாங்கள். மனிசரோட மனிசன் ஒட்டுறவு இல்லாமல்..."

"அப்ப என்ன செய்யப் போறியள் ஐயா?"

"இதென்ன கேள்வி தம்பி... ஏன் எங்களுக்கெண்டொரு நாடு இருக்குதுதானே... அந்த வாழ்க்கையின்ர சுகங்கள் உங்களுக்குத் தெரியாதடா மோனை... ஷெல் அடிச்சாலும், குண்டு போட்டாலும் அந்த நேரம் விழுந்து நிலத்தில படுத்திட்டு, எழும்பி அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு.... கூழோ, கஞ்சியோ இன சனத்தோட, எல்லோருக்கும் ஒண்டுதான் எண்டு நினைச்சுக்கொண்டு... வாழவேணும். இது ஒரு உப்புச் சப்பு இல்லாமல்.... ஒவ்வொரு நாளும்.... சாகிற வயதில மனுசர் சந்தோசமாய் இருக்கோணும். உங்களுக்கு இப்ப தெரியாது தம்பி.... நாங்கள் அடுத்த மாதம் ஊருக்குத் திரும்பிப் போறம்..."

பெரியவரிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டு, திரும்பியபோது, நான் தொலைத்த பத்து வருடங்களை நினைத்துப் பார்த்தேன். நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று நெருடிக்கொண்டிருந்தது.

- அபிநயன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# சுட்டமண்



என் வாழ்வும்
ஏதோவொன்று கழிவதாகக்
கழியும்

நாட்களை மாதம் தின்னுதலுமாக
மாதங்களை வருடம் தின்னுதலுமாக
என் வாழ்வை காலம் தின்னும்.

புலம்பெயர் வாழ்வின்
அவலத்தை சொல்லி மாளாது.

இங்கே மாறுதல்
இயற்கையை மேவி நடக்கும்.

பாலை மரத்தில் ஏறி
பழம் சாப்பிடுதலும்
காலை அழகை கண்ணில்
கனவுடன் ரசித்தலும்
சோலை மரங்களிடையே
சொகுசாகக் கதைத்தலும்
நாளை இங்கிருந்தால்
நிச்சயமாக கிடைக்காது.

அன்னை சோறூட்டக் காட்டிய
ஔவை கூனிய அழகு நிலா
என்னைப் போல இங்கு
ஏதிலியாக இருக்காது.
முன்னர் போன்ற அழகு
முக்காலில் ஒன்றும் இல்லை.
அண்ணர் அமெரிக்கன்
கால் பதிந்த விந்தையைக்
காட்டி விண்ணாணம் செய்கிறது.

வல்லிபுரத்தார் கோவிலருகே
வாகாய்ச் சாய்ந்திருந்து
துள்ளிவரும் கடலலையைச்
சுகமாக உள்வாங்கி
வெள்ளை மணற்பரப்பில் மண்
வீடு கட்டி கலைந்ததுவும்
சொல்லிச் சொல்லியே
சோகம் எனைச் சோதிக்கும்.

ஓட்டிச்செல்ல "ஒபெல் ஒமேகா"வும்
கூட்டிச்செல்ல பெண்ணவளும்
இங்கே எளிதாகக் கிடைக்கலாம்.

கைகட்டி வாய்பொத்தி
கண்ணீர் சொரிந்து
இட்ட வேலையைத் தலையாலே
செய்து முடிக்க நானொன்றும்
நட்டமரமல்ல.

செத்த பின்னர் சிறு
சிதை அடுக்கி
உற்றவர் உறவினர்
ஊருலகம் காவிச்சென்று
முத்தமிட்டுப் பெற்றவள்
பிரிவுத் துயரம் தாளாது
கத்திக் கத்தி அழும்
எனது சாவீடு
சத்தியமாய்ச் சாவகச்சேரியில்
சரிவர வேணுமென்று
எத்தனை தரம் எழுதியிருப்பேன்?

எல்லாம் நடப்பதாக
என் காலமும் ஏதோவொன்று
கழிவதாகக் கழியும்.

இதுவும் சுட்டமண்தானோ!
ஏனோ தெரியாது
இன்று வரை என்னோடு
ஒட்டவேயில்லை.

ந. முரளிதரன்
சுவிஸ்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஒரு கலைஞனின் பதிவு



# கோடுகள்

## சும்மாயிருப்பதில்லை

தமிழ்நாட்டுக் கலைஞர்களில் பலர் தமிழீழப் போராட்டம் குறித்து அக்கறை கொண்டவர்களாகவும் உணர்வுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அந்த வகையில் தமிழீழ மக்களின் துன்பத்தில் கலங்கிய ஓவியர் புகழேந்தியின் உணர்வுகளின் உரசல்களாக இவ் ஓவியங்கள் அமைகின்றன.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வளர்ச்சிப் பாதையில் நவீன ஓவியக்கலை

ஈழத்தின் நவீன ஓவியக்கலை வளர்ச்சியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவரும் அறுபதுகளின் ஆரம்பத்திலும் தொடர்ந்தும் ஓவியக்கலையின் புதிய நுட்பங்களை ஆக்குவதிலும், அறிவதிலும் ஆவலாயிருந்து வரும் திரு. மாற்கு அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

உற்சாகமாக உரையாடிய அவரிடம்,

**உங்களது ஓவிய வாழ்க்கையின் ஆரம்பத்தில் நீங்கள் எந்த வகையான ஓவியங்களை வரைவதில் ஆர்வம் காட்டினீர்கள் என்று கேட்டபோது,**

ஆரம்பத்தில் மரபுரீதியான பாரம்பரிய பாணியிலேயே ஓவியங்களை வரைந்தேன். எனினும் எனது உணர்வுகளை வெளிக்காட்ட நவீன ஓவியங்களே வாய்ப்பாக அமைந்தன. உலகில் நவீன ஓவியங்களின்பாலிருந்த மதிப்பும் என்னை அந்தப் பாணியிலமைந்த ஓவியங்களை வரையத் தூண்டியது என்றும் கூறலாம்.

**நவீன ஓவியங்கள், பாரம்பரிய ஓவிய மரபிலிருந்து வேறுபட்டு நிற்கும் நிலையில், நவீன ஓவியக் கலையின் நோக்கம் என்ன என்றபோது,**

இந்த வினா எல்லோரும் கேட்கும் வினா. காலத்தின் மாறுதலிலிருந்து தோன்றியதே இம் மரபு. ஒருவாறு பார்த்தால் ஆதிகால ஓவியங்களும் ஒரு வகையில் இன்றைய இப் புதிய மரபை ஒத்திருப்பதைக் காணலாம். சாதாரணமாக ஒருவன் ஒரு காட்சியைப் பார்ப்பதற்கும், ஒரு கலைஞன் அதே காட்சியைப் பார்ப்பதற்கும் வித்தியாசமிருக்கிறது. ஒரு காட்சியை உளரீதியாகப் பார்க்கவேண்டும். இவ்வாறு அகப்பார்வைக்கு நவீன ஓவியக்கலை வழி வகுக்கின்றது. இது நவீன ஓவியக்கலையின் நோக்கம். ஆனால் பாரம்பரிய ஓவியக்கலை உள்ளபடியே கூறும் என்றார் மாற்கு.

**பாரம்பரிய ஓவியக்கலையில் ஓர் வெளிப்படைத் தன்மை தெரியும். நவீன ஓவியக்கலையில் அவ்வாறு காணமுடிய வில்லையே, எல்லோராலும் இம் மரபைப் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறதே எனக் கேட்டோம்.**

நவீன ஓவியக்கலையை புரிந்துகொள்ள முடியாதிருக் கின்றது என்று கூறினால் அது என்றுமே புரிந்துகொள்ள முடியாததாகத்தானிருக்கும். நவீன ஓவிய மரபின் வளர்ச்சியும் ஏற்பட்டிருக்காது. வளர்ச்சி ஒன்றைக்காண வேண்டுமானால் ஓவியத் துறையோ, அந்தக் கலைத்துறையோ புதுமை படைக்கவேண்டும். புதிதாகச் செய்வதற்கு மரபுரீதியாக இடந்தருவதில்லை. மரத்தைப் பார்த்து மரத்தைப் போல் வரைவதும், மாட்டைப் பார்த்து



"1983 ஜூலையில் ஈழத்தில் நடைபெற்ற தமிழருக்கெதிரான இனப்படுகொலை என்னைப் பெரிதும் பாதித்தது. அந்தப் படுகொலைச் சம்பவங்கள் ஆறாத ரணமாக என் உள்ளத்தைப் பிசைந்தன. என் இனத்திற்கு நேர்ந்த இப்பெரும் கொடுமையை என் ஓவியத்தின் மூலம் உலகுக்கு உணர்த்த வேண்டும் என்று எண்ணினேன். அதன்படி செய்தேன். இதுவே, உலக நாடுகளில் நடைபெறும், இதுபோன்ற மனித குலத்திற்கு எதிரான செயல்களை- ஏகாதிபத்தியங்களின் கொடூரங்களை - தேசிய இனவிடுதலைக் கெதிரான போராட்டங்களை - என் ஓவியங்களில் பதிவுசெய்து உலகுக்குக் காட்டத்தூண்டியது. அவ்வாறே செய்துகொண்டிருக்கின்றேன். இதுதான் ஒரு படைப்பாளனின் சமூகப் பொறுப்பு என்று திடமாக நம்புகின்றேன்.

ஈழ வரிசை ஓவியங்கள் தஞ்சை, மதுரை மாவட்டங்களில் பல இடங்களில் கண்காட்சியாக 1986, 87, 88, 89 ஆம் ஆண்டுகளில் வைக்கப்பட்டன.

நான் தமிழீழ விடுதலையையும் தலைவர் பிரபாகரனையும் உயிரிலும் மேலாக நேசிக்கின்றேன்."

- கு. புகழேந்தி-
ஓவியத்தில் முதுகலைப் பட்டம் (M.F.A)
தமிழ்நாடு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாடுபோல் கீறுவதும் புதுமையல்ல. மாட்டின் தன்மையை உணர்வை ஓவியத்தில் காட்டவேண்டும் எனப் பதிலளித்தார் அவர்..

**மரபுரீதியான ஓவியங்களும், உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன தானே என்ற போது,**

பார்ப்பவனுக்கு அந்த உணர்வு மட்டும்தான் தெரியுமென்பதால் தான் உணர்வுகளை அவை முழுதாக வெளிப்படுத்துவது போல் தெரிகின்றது எனத் தெரிவித்தார் மாற்கு.

எல்லாவற்றையும் விரிவாகக் காட்டமுடியாது. எங்களுக்குத் தேவையானது முக்கியப்படுத்தப்பட வேண்டும். இந்த வகையில் குறியீட்டு வடிவங்கள் நவீன ஓவிய மரபில் முக்கிய இடம் பெறுகின்றன. பிரதி பண்ணப்படுவது கலையாக நான் கருதவில்லை. கலை ஆக்கப் படவேண்டும் எனத் தெரிவித்தார். மரபுரீதியான ஓவியங்கள், அழகுணர்ச்சியுடையவைதான். ஆனால் அவற்றை ஆக்கப்படைப்பாகக் கருதமாட்டேன் என்றும் கூறினார்.

**மரபுரீதியான ஓவியங்கள் ஒரே ஒரு காட்சியை ஒரு கோணத்தில் காட்டும் போது நவீன, ஓவியங்களை நோக்குவோரின் பார்வைக் கோணங்கள் வேறுபட இடமுண்டு. இந்த நிலையில் ஆக்குவோரின் கருத்தை, நோக்குவோன் உணர இடமுண்டா எனக் கேட்டபோது,**

ஒவ்வொருவருக்கும் பார்வை வேறு, பொருள் ஒன்று. இதில் பிழையில்லை. இதுதான் சுவையை இன்னும் கூட்டும் எனக் கருதுகிறேன். ஒருவனுக்கு அது எதுவாகத் தோன்றுகிறதோ அதுதான் அவனது பார்வை. ஆக்குவோனின் கருத்தைத் தான் பார்ப்பவனும் பெறவேண்டுமில்லை. பார்ப்பவன் அதில் வேறு வகையில் தேடலை மேற்கொள்ளலாம் எனக் கூறினார் மாற்கு.

**ஒரு சம்பவம், இடம், மரபு ரீதியில் காட்டப்படும் போது, வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகையில், நவீன மரபில், இந்த வகையில் காட்டமுடியுமா என வினாவியபோது,**

முடியும். பிகாஸோவின் 'குவார்னிகா' எனும் ஓவியம் யுத்தம் சம்பந்தமானது. இன்று அதனை அறியாத ஓவியன் இருக்கமுடியாது. அவ்வளவு தத்ரூபமாக நவீன மரபில் காட்டப்பட்டிருக்கின்றது. அங்கு குறியீடுகள்தான் இடம்பெறுகிறது. இது எவ்வாறு இன்றும் தெளிவாக உணர்த்துகிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும் எனப் பதிலளித்தார்.

> **ஒரு காட்சியை உளரீதியாகப் பார்க்கவேண்டும். இவ்வாறு அகப்பார்வைக்கு நவீன ஓவியக்கலை வழி வகுக்கின்றது. இது நவீன ஓவியக்கலையின் நோக்கம்.**

**வரலாற்று ரீதியாக நவீன மரபின் ஆரம்பம் எப்படியிருந்தது எனக் கேட்டோம்.**

சேஸான் தொடர்ந்து பிக்காசோர பிறேக் என நவீன மரபை வளர்த்தார்கள். 18ம் நூற்றாண்டளவிலேயே பழைய மரபுகள் உடைக்கப்பட்டு புதிய மரபு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. வான்கோ போன்றவர்கள் உணர்ச்சியை நவீன மரபில் தந்தார்கள் எனக் கூறினார்.

**நவீன ஓவிய மரபு எங்களுடைய பிரதேசத்தில் பெற்றிருக்கும் வளர்ச்சியைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டபோது,**

வளர்ச்சி, மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. இளம் ஓவியர்கள் சிறப்பாக வரைகிறார்கள். இங்கு வெளிவரும் சஞ்சிகைகளில் கூட இந்த மாற்றம் தெரிகிறது. ரமணி, தயா, கோபாலி, ராஜன், ஜாக்குலீன், வாசுகி, கொன்ஸ்ரன்ரைன், பக்சி, அருந்ததி என இளைய தலைமுறை குறிப்பிடவேண்டியவர்களாக மிளிர்கின்றனர் என்றார். இன்றைய நிலையில் இன்னும் வளரும் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

**ஒரு ஓவியத்தை ஆக்கும் போது உங்களது மன உந்துதல், வெளிப்பாடு எப்படியிருக்கும் என்ற போது,**

நான் முன்னரே குறிப்பிட்டது போல் எனது பார்வையையே நான் ஓவியமாக்குகின்றேன். கூடுதலாக அவல உணர்ச்சி, இன்றைய நிலையில் மக்களின் உணர்வுகள் என்னுள் கூடுதலாக வெளிப்படுகின்றன. சாதாரண காகிதத்தில் கூட கலைப் படைப்பை உருவாக்கமுடியும் எனப் பதில் தந்தார்.

**நவீன ஓவிய மரபில் சிற்பங்களும் அடங்குமா என வினாவிய போது,**

சிற்பங்களும் நவீன மரபில் உருவாக்கப்படுகின்றன. சாதாரணமாகக் கிடைக்கும் பொருட்களில் நவீன மரபில் சிற்பங்களைச் சித்தரிக்கமுடியும் என அழகிய கலைப்படைப்புக்களையும் காண்பித்தார் மாற்கு.

**எப்படி இந்த நவீன மரபினை மக்களுக்கு கொண்டு செல்லமுடியும் என்றதற்கு,**

நாளாவட்டத்தில் மக்கள் இவற்றை நிச்சயம் உணர்ந்து கிரகிப்பார்கள். இன்று சஞ்சிகைகளில் வெளிவருவது போல், ஓவியக் கண்காட்சிகளினூடாகவும், இந்த மரபை மக்களுக்கு புரியவைக்க முடியும்.

இதேவேளை மரபுரீதியான ஓவியப்படைப்புக்களை ஒதுக்க வேண்டுமென்பது பொருந்தாது. எமது பாரம்பரியத்தை அழியவிடாத நேரம் புதுமைகளையும் படைக்க வேண்டும் என்பதே என் அவாவாகும் என்று தொடர்ந்தார்.

**உங்களுடைய படைப்புக்களுக்கு எந்தளவில் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது?**

யாழ்ப்பாணத்திலும் வெளியிலும் எனது படைப்புக்கள் சென்றிருக்கின்றன. 1957 இல் இளம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஓவியர்கள் என்ற தலைப்பில் எனது ஓவியமொன்று ஒப்சேவர் ஓவியங்களில் இடம்பெற்றது. அதே ஆண்டு கலாபவனத்தில் நடந்த இலங்கை பூராவுமான ஓவியப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றேன். முதலாமிடம் எனது விரிவுரையாளருக்குக் கிடைத்தது. வெளிநாடுகளிலும் எனது ஓவியங்கள் பாராட்டைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டிலும் எனது ஓவியங்கள் பாராட்டைப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலும் எனது ஓவியங்கள், சந்தானம், ஆதிமூலம் ஆகியோர் மூலம் பாராட்டைப் பெற்றுள்ளன என்றார் மாற்கு.

நவீன ஓவியங்களிலும் வெவ்வேறு பாணி பின்பற்றப்படுவதைப் பற்றிக் கேட்டோம்,

இது வளர்ச்சிக்கே வழிகோலும். ஒவ்வொருவரின் தனித்தன்மையும் பாதிப்புறாது. மற்றவரின் பாதிப்பில்லாத பட்சத்தில், சிறந்த ஆக்கங்களை எதிர்பார்க்கமுடியும். ஒரு ஓவியனை இனங்காண இது உதவும் எனப் பதில் அளித்தார்.

இங்கு உங்களது படைப்புக்களைப் பற்றி எழும் விமர்சனங்களைப் பற்றிக் கேட்டபொழுது,

ஒர் பயனற்ற வேலை. இது மொடேண் ஆட் அல்ல. மோடன் ஆர்ட் என்றோரும் உண்டு. இதனால் எனக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை. இந்த விமர்சனம் என்னை வளரச் செய்திருக்கிறது. இன்னும் நன்றாகச் செய்யவேண்டும் என்ற ஊக்கத்தைத் தந்திருக்கிறது எனத் தெரிவித்தார் மாற்கு.

இறுதியாக நவீன, ஓவிய மரபின் வளர்ச்சிக்கு உங்களது ஆலோசனைகள் என்ன என்றோம்.

இங்கு, மக்களிடம் இந்த மரபு கொண்டு செல்லப்படவேண்டும். கண்காட்சிகள் நடத்தப்படவேண்டும். நவீன மரபின், உள்ளார்ந்த தன்மையை, உணர்வு வெளிப்பாட்டை இளையோர் கற்க முயல வேண்டும் எனத் தெரிவித்தார் அல்போன்ஸஸ் மாற்கு. அவரது உணர்வைப் புரிந்தவாறு, மாற்குவிடமிருந்து விடை பெற்றோம்.

# களத்துக்கு பூத்தவனே திலீபா!

திலீபா..
நீ செத்து விட்டதாக
எவன் சொன்னது?

எங்கள் குருதியில்
அணுக்களாய் சேர்ந்து
மூச்சுக்காற்றாய்
இன்றும் நீ வாழ்கிறாய்...

மரணத்தை அழைத்து
மடியினில் அமர்த்தி
கொஞ்சம் கொஞ்சமாய்
உன் உடலையே
தின்னக் கொடுத்தாய்!

உண்ணா விரதமென்பதின்
அர்த்தத்தை
காந்தியின் கல்லறைக்குமல்லவா
சொல்லிக்கொடுத்தாய்!

தமிழீழ தாகம் தீர்க்க
பசி வேள்வியி லொரு
யாகம் தொடங்கினாய்!

சுதந்திர சோலை யமைக்க
போர்க்களத்தில்
குருதிப் பூவா யல்லவா
விதையாக மாறினாய்!

ஆயுதப் படைகளை எதிர்த்து
பட்டினிப் போர்தொடங்கி
அகிம்சை
அம்புகளை வீசினாய்!

இருட்டு மண்ணில்
வெளிச்சம் பிறக்க
உன் சிதைக்கு
நீயே யல்லவா
நெருப்பை மூட்டினாய்!

தமிழன் கோட்டையில்
புலிக்கொடி பறந்திட
யுத்த களத்தில்
நீயும்
சாம்பலாய் உதிர்ந்தாய்!

மெழுகாய்
உன்னை உருக்கி
தீப் பிழம்பா யல்லவா
எழுந்து வெடித்தாய்!

பட்டினி கிடந்து
பசியினை சுவைத்து
காற்றுக்கே
உணவாய் உயிரைக்கொடுத்தாய்!

ஈழம் பிறக்க
தாய் மண்ணுக்குள்
உன் உடலையல்லவா
கருவாய் புதைத்தாய்!

புலியாய் பிறந்து
வரலாற்று பக்கங்களில்
நீ வாழ்ந்ததாய் பொறித்தாய்!

சரித்திர சுவடுகளில்
புலிகளின்
துப்பாக்கிக் குண்டுகளாயல்லவா
இன்றும் நீ வாழ்கின்றாய்!

சுதந்திரக் காற்றை
சுவாசிக்க எண்ணி
வீரியப் புயலாய்
அன்று நீ மறைந்தாய்!

ஆயிரமாயிரம்
புலிகளையல்லவா
விருட்சமாய்
இன்று நீ முகிழ்ந்தாய்!

பசியையே
பற்றவைத்து
அதில் தீயாய் நீயே எரிந்தாய்!

இன்றோ
யாழ்கோட்டையிலும்
பூநகரியிலும்
புலிக்கொடியாயல்லவா
சிவந்து நீ பறக்கிறாய்!

திலீபா
அன்றும் நீ வாழ்ந்தாய்!

எங்கள்
குருதியிலும்
மூச்சிலும்
இன்றும் நீ வாழ்கிறாய்!

வவுனியான், தமிழ்நாடு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தாத்தாவும் பேரனும்

செம்பியன் செல்வன்



**“நாங்கள் கள்ளக்காணியில் இருக்கிறமாம். காட்டை ‘எங்குறோக்’ பண்ணுறமாம். அது சட்டவிரோதமாம். அவன் ஜி.ஏ. சிங்களவன். அதால சொல்லுறான்.**

வெளியே எழுந்த பேரிரச்ச லைக் கேட்டு, வீட்டின் பின்னே தோட்டக்காணியில் மிள காய்ச் செடிகளிடையே நின்றிருந்த சின்னராசு தெருக் கடப்பையை நோக்கி ஓடி வந்தான். தூரத்தே வாகனவரிசை போல வேகமாக பலவிதமான வாகனங்கள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அவனின் இளநெஞ்சம் ஏனோ படபடத்தது. முன்பும் இப்படித்தான் ‘லாண்றோவர்’, ‘ஜீப்’ வாகனங்கள் வந்து போன அன்று வீட்டில் தாத்தா, அப்பா, அம்மா, அண்ணன் எல்லோரும் இறுகிய முகங்களுடன் குசுகுசுத்துக்கொண்டு இரவுச் சாப்பாடுமில்லாமல் படுக்கையில் புரண்டு புரண்டு திரும்பிப் படுத்தது ஞாபகத்தில் கூர் தீட்டியது.

“பாவம்பா.... முருகேசண்ணை !.... எவ்வளவு பாடுபட்டு காட்டைய ழிச்சு அதுவும் ஆட்கள் போகப் பயப்படுற இடத்தை இப்ப பொன் கொழிக்கிற புலவு ஆக்கி கொஞ்ச நாளாச் சந்தோசமாத் திரிஞ்சார்.... அதுவும் கடவுளுக்கே பொறுக் கேல்ல....”

“ கடவுள் என்னப்பா கடவுள். முருகேசண்ணை பயப்படாம காட் டுக்குள்ள போய் கமம் செய்ததால தான பின்னால எத்தனையோ பேர் போனவை?”

“முந்தி வெறும் கரடிக்காடு... தேனெடுக்க இராப்பகலெண்டு பாராம அலையும் தேனெடுக்கப் போறவை எத்தனை பேர் கரடிக ளால காயப்பட்டு வந்தினம்... உயிரை இழந்தினம்... அப்படியாப் பட்ட இடத்தில துணிஞ்சு குடிசை போட்டவன் முருகேசு...”

“அப்படிப்பட்டவனையுமெல்லோ எழும்பெண்டு நிக்கிறார் ஜி.ஏ.யும் டி.எல்லோவும்...”

“முருகேசண்ணையை மட்டுமே எழும்பச் சொல்லினம். அவருக்குப் பின்னால வந்து குடியேறிய பூக் கண்டு, செல்லத்துரை, காளியண் ணன் எண்டு அங்க வாழுற நூறு குடும்பங்களையும் எழும்பச் சொல்லி நிக்கிறார் ஜி.ஏ...”

“பாவம் அதுகள் வாழ எங்கு போகும்”

“எங்கட சொந்த நிலத்தில இருந்து போகட்டாம்”

“எங்க போறது... போய்க் குடியிருக்கிறது... வீடு கட்டிறது... இவன் இப்படி துரத்தத் துரத்த ஓடினா நாங்கள் எல்லோரும் கடலில தான் போய் வீடு கட்ட வேணும்....”

“அதுக்கும் விடுவாங்களே... கடல் எல்லையும் எங்கட பரப்புத் தான் என்பான்கள். மீன் கூடப் பிடிக்க விடமாட்டாங்கள். நாங்கள் எல்லாம் பட்டினியால சாகவேண்டி யதுதான்”

“ஏனாமப்பா இப்படித் துரத்து றாங்கள்...”

“நாங்கள் கள்ளக்காணியில் இருக்கிறமாம். காட்டை ‘எங்குறோக்’ பண்ணுறமாம். அது சட்டவிரோத மாம். அவன் ஜி.ஏ. சிங்களவன். அதால சொல்லுறான். ஆனாப் பாரன் அவன் டி.எல்லோவை சுத்த தமிழன். அவனுமெல்ல அவங்க ளோடை சேர்ந்துகொண்டு ஆமாம் போடுறான்.... லோப் பேசுறான்.... உப்புடியாப்பட்ட இவங்களாலதான் எங்கட இனமே நாசமாகப் போகுது...., இந்தப் புலவில கற்பூசனி, கத்தரி, வெண்டி, வெள்ளரி, பூசனி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எண்டு பற்றை பற்றிப் பரந்து கிடக்கு.... தோட்டக்காணியில வெங்காயம் போட்டிருக்கிறாங்கள்.... எல்லாத்தையும் விட்டுட்டுப்போ எண்டால் சும்மாவே? அவங்களை வெட்டிப்போட்டுத்தான் போகமனம் வரும்...."

"அப்ப இந்த இடத்தை என்னப்பா செய்வாங்க..."

"என்ன செய்வாங்கள்.... தங்கட சிங்கள இனத்தை குடியேத்துவாங்கள்...."

அப்படியே நடந்தது. அதன்பின் அந்தக் கிராமத்தின் நிம்மதியே போனது. ஆத்மாவே அழிந்தது.

அதுபோல் ஏதாவது மீண்டும் நடக்கப் போகுதோ?

அவன் 'கடப்பை' குறுக்கு மேல் தடியில் ஏறி உட்கார்ந்து, இரு கால் பாதங்களையும் அடுத்த கீழ் தடியில் வாகாகப் பதித்து, இரு கைகளாலும் தானிருக்கும் தடியினைப் பற்றிக் கொண்டு வாகனங்கள் வரும் திசையையே நோக்கிக்கொண்டிருந்தான்.

அவன் இதுவரை பார்க்காத வாகனங்கள்.

தாமே கிளப்பிய செம்மண் புழுதித்திரை மறைவில் ஓடி ஒளிவது போல் 'ஆமர்ட் கார்கள்...' அந்தப் புழுதி அடங்குவதற்குள் தாமும் சென்றுவிட வேண்டும் என்பது போல கவச வாகனங்கள் அவற்றைப் பின்தொடர்ந்து டாங்கிகள்...

இவை படை எடுப்பிற்கா... பயப்படுத்துவதற்கா?

அவை அவனைக் கடந்து போகப் போக மனதிற்குள் எண்ணினான்.

ஒன்று... இரண்டு... மூன்று...

நான்கு எண்ணுவதற்குள் அவனைக் கடந்த 'டாங்கி'யின் சுடுகுழல் அவனை நோக்கித் திரும்ப....

அவன் 'ஐயோ!' என்று அலறிய வாறு கடப்பையின்றும் உள்பக்கமாகக் கீழே குதித்தான். இரும்புத் தொப்பியும் காக்கிச் சட்டையும் முறுக்கு மீசையுமாக நின்ற சிங்களச் சிப்பாயின் ஏளனச் சிரிப்பு அவன் காதில் விழ திரும்பிப் பார்த்தான். அது ஆச்சரியத்தை அளித்தது.

டாங்கியின் சில்லுகளின் 'ரயர்' களுக்குப் பதிலாக இருபக்க இரும்புச் சக்கரங்களையும் இரும்புச் சங்கிலி பிணைத்து உருண்டு கொண்டிருந்தது. அதனால் அது சென்ற பாதையில் குண்டும் குழியும் தோன்றி எதையோ மறைமுகமாக உணர்த்திக் கொண்டிருந்தன.

அவனின் குரலைக் கேட்டு அம்மா ஓடி வந்தாள்.

"சிங்கள ஆமி போறான்.... அவனையே வேடிக்கை பாத்தனீ! என்னென்ன அனத்தமெல்லாம் நடக்கப்போகுதோ கடவுளே!... போடா வீட்டுக்குள்ளே! என்று அதட்டியவள்... ஐயோ! கடவுளே... வெளியே போன ஆம்பிளையளைக் காணேல்லியே" என்றபடி அலறத் தொடங்கினாள்.

அவன் அம்மாவுக்குத் தெரியாமல் கடப்பையில் ஏறி தலையை வெளியே நீட்டி அவர்கள் வழக்கமாக வருகிற திசையைப் பார்த்தான்.

தூரத்தே பற்றை மறைவுகளிலிருந்து தலைக்கறுப்புகள் வெளிப்படுவது தெரிந்தது. கொஞ்சம் பொறுமையாக இருந்தான்.

கரையோர பற்றை மறைவிலிருந்து முதல் வெளிப்பட்டவர் தாத்தா தான். அவரைத் தொடர்ந்து அப்பா... அண்ணா...

"அம்மா... அம்மா... அங்கை பார்... எல்லோரும் வருகினம்!.."

என்று உற்சாகமாகக் கத்திக் கொண்டு வெளியே பாதையில் குதித்து அவர்களை நோக்கி ஓட முனைந்தவனை அம்மா இழுத்துப் பிடித்தாள்.

"பார்!.. அவங்களே பதுங்கிப் பதுங்கி வரேக்க... இவன்ர துடியாத் தனத்தை!" என்று அம்மா அவனை அதட்டினாள்.

"ஆமி ரவுணுக்குள்ள வந்து 'காம்' போட்டிருக்கிறான். இனி இங்கை வசிக்கிறவை பாடு கஷ்டம் தான்.தமிழற்றை பாடு பெரிய கரைச்சலாகத்தான் இருக்கப் போகுது. பெண் புரசுகளை வைச்சுக் காப்பாத்துறதும் பொருள் பண்டங்களைப் பேணுறதும் தான் எங்கட வேலையா இருக்கப் போகுது." என்று சொல்லிக் கொண்டு தாத்தா வருவது கண்ணில் தெரிந்தது.

அவனுக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது.

தாத்தாவும் பயப்படுவார் என்பது அவனால் கற்பனைகூட செய்யமுடியாததொன்று.

"எல்லோரும் கடப்பையடியில் என்ன பாக்கிறியள்" என்று அண்ணி அப்போதுதான் அடுப்பை விட்டு வந்தாள்.

"எல்லோருக்கும் தெருவில என்ன புதினம் கிடக்கு? போங்க எல்லோரும் வீட்டுக்க... இனி முந்தி மாதிரி கண்டபடி ஆரும் வெளிய போற சங்கதியை வைச்சிருக்கக் கூடாது..." அப்பா கண்டிப்பது போல் பேசினார்.

அவனுக்கு மேலும் ஆச்சரியமாகப் போய்விட்டது.

அப்பா, தாத்தாவுக்கு முன் வாயையே திறக்கமாட்டாரே!

எல்லோரும் உள்ளே போனார்கள்.

2

வீட்டின் முன்னே, காட்டு மரமென எட்டுத் திக்கும் கிளை விரித்து நிழலூட்டிக் கொண்டிருந்த மரத்தின் கீழ், தனது 'மிலிற்றரி கன்வாஸ்' கட்டிலில் தாத்தா அமர்ந்து தனது பழைய 'லீ அன்ட் பீல்ட்ஸ்' றைபிள் துப்பாக்கியைக் கழற்றிச் சுத்தம் செய்வதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறான்.

"என்ன இண்டைக்கு வேட்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டைக்கு வெளிக்கிடப்போறாரோ"

தாத்தாவின் முகமும் சுத்தம் செய்யும் விரல்களும் துப்பாக்கியைக் கையாளும் இலாவகமும்... அவனுக்குப் பார்க்கத் திகட்டாதவை.

விரல்கள் எவ்வளவு உறுதியாக கொஞ்சமேனும் தளர்ச்சியோ.... நடுக்கமோ அற்று இயங்குகின்றன. மேனியில் சுருக்கங்கள் விழுந்திருந்தாலும் அவரின் கட்டுடலில் தொய்வு காணப்படுவதில்லை. சுறுசுறுப்பில் எறும்பின் வேகம், ஆர்வம். அவனுக்குத் தாத்தா ஒரு அதிசயம்; அற்புதம். முறுக்கேறிய கை, கால் தசைநார்களை வரிந்து கட்டிய முறுக்கேறிய கயிறுகளாக

**ஆங்கிலேயன் போனபோது பிரிக்கப்படவேண்டிய தமிழ், சிங்கள இராச்சியங்களை இணைத்து வைத்துவிட்டுப் போனதால் இன்று தமிழர் அனுபவிக்கும் அநர்த்தங்கள் பல.**

நரம்புகள் புடைத்தும்... கூன் விழாத முதுகு. ஆலிலைக்கு குறி சுட்டது போன்ற மடிப்புகளுடன் உள்ளங்கிய நீண்ட கைகள். நெடிதுயர்ந்த தோற்றம். முறுக்கிவிடப்பட்ட வெள்ளையும் கறுப்பும் பழுப்பும் கலந்த மீசை. மீசைக்கு நிழல் கொடுப்பது போலவோ, போட்டிக்கு அழைப்பது போலவோ விளங்கும் தடித்த புருவம்.... இரு காது மடல்களிலும் ஆற்றங்கரை நாணற்புல் போல குத்தென வளர்ந்திருக்கும் நரை மயிர்க் கூட்டம். கரணை கரணையாக விளங்கும் தொடை, கால்களின் ஆடு தசைகள்.... நிலத்தை உறுதியாகப் பற்றி நிற்கும் அகன்ற பாதங்கள்... பரந்த மார்பு... விரிந்த தோள்கள்...

அடேயப்பா! இப்படியும் ஒரு ஆண் மகனா? இளமையில் எப்படி இருந்திருப்பார்?

இன்றும் அதிகாலையில் நான்கு மணிக்கு முன்பாக எழுந்து விடுகிறார். இரவு முழுவதும் எரிந்து கொண்டிருக்கும் 'ஹரிக்கேன்' விளக்கைத் தூண்டி விடுகிறார். பின்பக்கமாகக் கிணற்றடிக்குப் போகிறார். முகம் கழுவித் துடைத்து திருநீறிட்டு அடுப்படிக்குச் செல்கிறார். அடுப்பை மூட்டி 'கேத்திலை' ஏற்றி விறகினைச் சீராக அடுப்பில் அடுக்கிறார். காய்ந்த காட்டு விறகு.. 'சடசட'த்து மெழுகுதிரி எரிவது போல சீராக எரிய தேநீர் சில நிமிடங்களில் தயாராகிறது. இங்கிலீசுக்காரன் காலத்தைய குண்டுக் கோப்பை ஒன்று அவரிடம் உண்டு. குண்டு போல கனக்கும். அரை லீற்றர் தேநீர் கொள்ளும் கோப்பையின் சூடு தாங்காமல் தனது மேல் துண்டில் அதனை ஏந்திச் சொட்டுச் சொட்டாக சுவைத்து அருந்திக் குடிக்கிறார். முகத்தை தனது மேல் துண்டால் ஒரு முறை அழித்துத் துடைத்துவிட்டு, அறையின் மூலையில் சாத்திவைக்கப்பட்டிருந்த கோடரியைக் கையில் எடுக்கிறார். கோடாலி பேய்க்கனம். எத்தனையோ தரம் அதனைத் தூக்கி விறகு பிளக்க இவன் முயன்ற போதெல்லாம் இவன் மூச்சுத் திணறியதே தவிர விறகு ஒரு சிராய் கூட கிட்டியதில்லை. ஆனால் அவரோ அநாயாசமாக மேலுயர்த்தித் தூக்கி கீழிறக்குவார்.

'டக்... டக்... டமார்... டக்.. டக்... பளார்' என்ற சப்தம் சீராக இடைவிடாமல் எழத் தொடங்கும். ஏதோவொரு சப்த லயத்தில் அந்த அதிகாலைப் பொழுதில்... எழுந்த வீட்டை ஆனந்தமயமான தூக்கத்திலாழ்த்தும். உள்ளே இளந்தாரியான பிள்ளைகளும் பெண்களும் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பர். இந்தச் சப்தம் எழாத நாட்களில் அவர்களது விடிகாலைத் தூக்கம் பறிபோய் விடுவது பற்றி அவர்களுக்கே ஒன்றும் புரிபடுவதில்லை.

விடிந்து பார்த்தால் முற்றத்தில் கருங்காலிக் கட்டைகளும் முதிரை, வீரை, சூரை, பாலைக் குற்றிகள் எல்லாம் மறைந்து குவியலாக விறகு கிடக்கும். 'மொக்கு' கட்டைகளின் எச்சங்கள் கூடக் காணப்படமாட்டா. அந்த விறகுக் குவியல் காலை பத்துமணிக்கிடையில் அப்பாதை வழியே செல்லும் மடு யாத்திரிகள், நகர வாகனங்களால் நல்ல விலைக்கு வாங்கிச் செல்லப் பட்டுவிடும். நாளாந்த கைச்செலவுக்கு பிரச்சினை விடியுமுன்னரே தீர்ந்துவிடும்...

ஆறாக வியர்வை பெருக.... அவர் திண்ணையில் சாறத்தை வழித்து தொடைகளின் மீது மேலேற்றி, இரு கால்களுக்கிடையே தொங்கவிட்டவாறு அமர்ந்திருப்பார். பக்கத்தில் கோடாலி பரசுராமனின் மழுவென கூர்ப்பகுதி பளபளக்கும். காலைச் சூரியனின் கதிர்கள் அவர் வியர்வை மேனியில் விழுந்து மின்னும். காலை படுக்கையால் எழும்பி வரும் குடும்பத்தவர்களுக்கு நாளாந்தக் காட்சி. அவனோ அவரைப் பார்த்து மெய்மறந்து நிற்பான். உடலிலும் உள்ளத்திலும் புத்துணர்ச்சி அலைகள் பொங்கி அடிக்கும். தாத்தா பிரமாண்டமான விசுவரூபம் எடுத்த மாமனிதனாக வானோங்கி எழுந்து நிற்பார்.

அவனைக் கண்டதும் வாரி அணைப்பார். நேற்றுத் தோய்த்துக் காயப்போட்ட வேட்டி, துவாய் என்பவற்றைத் திரட்டுவார். அவன் ஓடிப்போய் தனது துணிமணிகளை எடுத்து வருவான். இருவரும் குளத்தை நாடிப் போவார்கள். போகும் வழியெல்லாம் எத்தனையோ விதமான கதைகள்.... தனது போர்க்கால அனுபவங்கள்.... நாடுகள்.... நாட்டுக் கதைகள்... புராண இதிகாசங்கள்.... என்று எத்தனை எத்தனையோ....

குளம் பரந்து காட்டையே வெற்றிகொள்வதென நீரலை எறிந்து காணப்படும். ஒன்றுக்குப் பத்தாக கரையோரம் முழுவதும் நீர் முழுவதையும் குடித்துவிடுகிறோம் என்பது போல் மருதமரங்களின் வேர்களும்.... கிளைகளும் நீரை முத்தமிட்டபடி மௌனம் காத்து நிற்கும். தாத்தாவும் பேரனும் நீரில் இறங்குவார்கள். தாத்தா நீச்சல் புலி... பேரனுக்கு பக்கவாட்டு நீச்சல்.... மல்லாந்த நீச்சல்... நீருக்கடியில் நீச்சல்... என்றும் நீண்ட

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நேரம் எப்படி நீருக்கடியில் மூச் செடுத்து நிற்பது என்றெல்லாம் பயிற்சி கொடுப்பார். இருவரும் குளத்தைவிட்டு வெளியே வரும் போது வயிறு 'கபகப' வென எரியும். வீட்டிற்கு விரைவார்கள்.

அம்மாவும் அண்ணியும் அடுப் படியில் இவர்களுக்காகக் காத்திருப் பார்கள். அப்பாவும் அண்ணாவும் எப்பவோ வயலுக்குப் போயிருப் பார்கள். இவர்கள் இருவரும் சாப்பிடக் குந்துவார்கள்.

காலையில் வசதி போல புட்டோ, தோசையோ, கஞ்சியோ, களியோ, பயறோ காணப்படும். ஆனால் பெரும் அவியல்தான். தாத்தா சாப்பிடுவதே ஒரு கலையா கத்தானிருக்கும். ஒவ்வொன்றையும் சுவைத்துச் சுவைத்து ஆறுதலாக வயிறார உண்பார். அவன் சாப்பிடு வது அவருக்கு திருப்தி தராது. அருமைப் பேரனல்லவா?

"நான் மத்திய கிழக்கில் இருக்கேக்க அங்க உன்ர வயதுப் பொடியள் என்ன சாப்பிடுவாங்கள் தெரியுமே... ஒவ்வொருத்தனுக்கும் ஒவ்வொரு முழு ஆட்டுக்குட்டி வேணும். அப்படியே றோஸ்ட் பண்ணிச் சாப்பிடுவாங்கள். நீ என்னடா எண்டால் சும்மா வெறும் வாயை கொறிக்கிறது போல.... இப்படிச் சாப்பிட்டால் எங்கட வயதுவரை எப்படி இருப்பியள்?"

தன் மகனில் கூட இவ்வளவு கரிசனை காட்டியதில்லை. பேரனில் உயிரையே வைத்திருந்தார். போன வருடம் மனைவி செத்ததிலிருந்து பேரன்தான் அவரின் துணை; நண்பன்; பொழுதுபோக்கு....

சாப்பிட்டபின் பேரனைப் பாடசாலைக்குக் கூட்டிக்கொண்டு போவார். திரும்பும்போது வீட்டிற் குத் தேவையான சாமான் சக்கட் டுக்களை வாங்கி வருவார். தவறா மல் தினசரி வாங்கத் தவறுவ தில்லை. பேரன் வரும்வரை தினசரி யும் 'கன்வாஸ்' கட்டிலுமாக இருப்பார்.

அவன் அம்மா மடியில் வளர்ந்ததைவிட அவர் மடியில்

## முதல் பெண் கடற் கரும்புலி

**கடற்புலிகளின் சிறப்புப் பிரிவினர் காங்கேசன்துறை துறைமுகத்தில் முகாமிட்டிருந்த கடற்படையினரின் மிதக்கும் கட்டளை முகாம் என வர்ணிக்கப்படும் தாய்க்கப்பலை தாக்கியழித்தனர். கடற்படையின் போர் நடவடிக்கைகளுக்கு முக்கிய பங்கு வகித்த இக்கப்பல் கடலில் தீப்பற்றி மூழ்கியது. இதற்குப் பாதுகாப்பாக நின்ற டோராப் படகினையும் நிர்மூலமாக்கினர். முதற் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி இம் மகத்தான சாதனையைப் படைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.**

வளர்ந்த நாட்கள் தான் அனேகம். அவன் இரவுப் பாடங்களை படித்து முடிக்கும் வரை குட்டி போட்ட பூனை போல அலைவார். வீட்டின் அலார மேசை எட்டடித்தால் போதும் பேரனைச் சாப்பிட அழைக்கப் போய்விடுவார். சாப்பாடு முடிந்ததும் முற்றத்துக் கன்வாஸ் கட்டிலில் இருவரும் போய் அமருவார்கள்.

பேச்சுவாக்கில் எவ்வளவோ விசயங்கள் வந்துவிடும்.

ஆங்கிலேயன் இலங்கைக்கு வந்தது, அவன் இராணுவத்தில் தான் வீட்டுக்குச் சொல்லாமல் போய்ச் சேர்ந்துகொண்டது... உலகம் பூராவும் சுற்றியது... நைஜீரியா, கானா, லிபியா, எகிப்து, ஈரான், பஹ்ரான், சிங்கப்பூர், கொரியா.... என இராணுவத்தில் அலைந்தது.... இறுதியாக இலங்கைக்கு வந்தபோது இரண்டாம் உலகமகா யுத்தம் உச்சநிலையிலிருந்தது... தாங்கள் திருகோணமலையில் இருந்தபோது ஜப்பானிய போர் விமானங்கள் துறைமுகத்தின் மீது குண்டு வீசியது... இதனால் மிதக்கும் துறைமுகம் (FLOATING DOCK) ஒன்று அப்படியே துறைமுகத்திற்கு அண்மையில் தாழ்ந்து போனது... ஆங்கிலேயன் போனபோது தேவை யில்லாமல் இந்தியாவை பாகிஸ் தான்... இந்தியா எனப்பிரித்தவன்... பிரிக்கப்படவேண்டிய தமிழ், சிங்கள இராச்சியங்களை இணைத்து வைத்துவிட்டுப் போனதால் இன்று தமிழர் அனுபவிக்கும் அநர்த்தங்கள் எல்லாவற்றையும் கதைபோல் கூறுவார்.

தமது பட்டாலியன் ஒருமுறை சகாராப் பாலைவனத்தில் எதிரிக ளால் சூழப்பட்டபோது தாம் எப்படி அவர்களிடமிருந்து மீண்டு தப்பி வந்தோம் போன்ற இராணுவ அனுபவங்களைக் கூறும்போது அவனது மனக் கண்ணிலே போர்க் களமே விரியும்.

ரைபிள்கள், ஷொட்கன்கள், ரிவோல்வர்கள், ரிப்பீட்டர்கள், டாங்கிகள், நாசகாரிகள், போர்க் கப்பல்கள், எம்டன் நீர்மூழ்கிக் கப்பல் போன்ற சொற்கள் அவனுக் குப் புரியாவிட்டாலும் அவை என்ன என்பது அவனுக்குத் தெரிய வந்தது.... உமர்முக்தார், கரிபால்டி, நெப்போலியன் வரலாறு....

சுபத்திரை வயிற்று அபிமன்யு வாக அவன்.

கிருஷ்ண பரமாத்தாவாக தாத்தா.

இரண்டாம் உலகமகாயுத்தம் முடிவடைந்து வெள்ளைக்காரன் தனது படையைக் கலைத்தபோது அவருக்கு வயது எக்கச்சக்கமாக ஏறியிருந்தது. கையில் கொஞ்சம் பணம்... பொருட்களுடன் தனது கிராமத்தை நோக்கி வந்தபோது அவர் பெற்றோர்கள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. வயது கூடியிருந்ததால் இவருக்கு ஏற்ற பெண் எடுப்பது கஷ்டமாக இருந்தது. பலர் பட்டாளத்துக் காரன், உலகம் முழுதும் சுற்றியவன் என்னென்ன திருவிளையாடல்களை நடத்திவிட்டு வந்திருக்கிறானோ என்று பெண்கொடுக்க மறுத்தனர். எல்லாவற்றையும் மீறி அவரை முடித்த பாட்டிமீது அவருக்குப் பெரும் பாசம், மதிப்பு. இறுதிவரை ஊரே மெச்சக்கூடியவிதமாக வாழ்ந்து மறைந்தும் போனாள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இவனுடைய அம்மா ஒரே மகள். செல்வமகள். எல்லாச் சொத்தையும் அவளுக்கே கொடுத்துவிட்டு அவர்களுடன் வாழ்ந்து வந்தார்.

அப்பா இள வயதிலேயே தாய், தந்தையை இழந்தவர். பிழைப்புக்காக வந்தவருக்கு இடம் கொடுத்த தாத்தா இறுதியில் தனது மருமகனாக்கிக் கொண்டார். அப்பா நல்ல உழைப்பாளி.

ஆழ்ந்த கவனத்துடன் தனது லீ அன்ட் பீல்ட்ஸ் ரைபிளை சுத்தம் செய்துகொண்டிருந்த தாத்தா தலை நிமிர்ந்தார். தன்னையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த பேரனைப் பார்த்துச் சிரித்தார்.

"என்னடா அப்படிப் பார்க்கிறாய்?"

"அப்பு வேட்டைக்கு நானும் வரட்டே"

"ஓம் குஞ்சு கனநாளாப் போச்சு... இண்டைக்கு நல்ல நிலவு. பகலில நல்ல கோடை வெயில்... தாகத்துக்கு நீர் குடிக்க மிருகங்கள் வெட்டைக்கு வரும்."

"அதுகள் வெட்டைக்கு வந்தா எங்களுக்கு நல்ல வேட்டை" என்ற பேரனை உற்றுப் பார்த்தார். இவன் எங்கையோ போப்போறான்; பெருமிதம் கண்ணில் தெரிந்தது.

தாத்தாவின் வேட்டை ஆசை, அவனுக்கு நன்றாகப் புரியும். இறைச்சி என்றால் அவர் ஒருவருக்கே தனிய ஒரு கிலோ வேண்டும். கடைலை வாங்கிக் கட்டுப்படியாகாது. அவரிடம் பிரித்தானியத் தயாரிப்பான 'ருவெல் போர்' துப்பாக்கி ஒன்றும் லீ அன்ட் பீல்ட்ஸ் துப்பாக்கி ஒன்றும் இருந்தது. வேட்டைக்கு மணியானது.

நிலவு காலங்களில் இரவு வேளையில் ஐந்து பற்றி டோர்ச் விளக்கோடும் இராணுவப் பணியின் போது தன்னிடம் தங்கிவிட்ட பெரிய 'வாட்டர்கானு'டனும் புறப்பட்டால், விடிகாலையில் பருத்த பன்றியோ, மானோ, மரையோ, ஏதோவொன்றை இழுத்து வருவார். அன்று கிராமம் முழுவதும் கதை பரவி, இறைச்சிக்காக வந்து சூழ்ந்துவிடும். அவனும் அவரது வரவுக்காக ஆவலுடன் காத்திருப்பான். அவர் கொண்டு வரும் சூட்டு ஈரலுக்காக வேட்டையாடிய மிருகத்தின் உடலைக் கிழித்து குடலை அப்புறப்படுத்தி விட்டு ஈரலைப் பக்குவமாகப் பிரித்தெடுப்பார். காட்டுவிறகினை எரியூட்டி அதில் ஈரலைப் பக்குவமாக வாட்டியெடுப்பார். பேரனின் நினைவாகவே இந்த வேலைகள் நிகழும். கற்தேக்கிலையில் வாட்டிய ஈரலை சுருட்டிக்கட்டி எடுத்து வருவார். காடு அவருக்கு அத்துப்படி. எந்த மூலையில் என்ன இருக்கிறது... போகும் வழி என்ன? என்று மனம் சிந்திக்கும் முன்னரே கால் நடைபோடத் தொடங்கும். பாலை பழுக்கத் தொடங்கிய காலத்தில் பன்றிகள் கொழுப்பு வைத்திருக்கும். அந்த பன்றியினை சிறு துண்டுகளாக வெட்டி பாத்திரத்திலிட்டு காட்டு விறகைக் கொழுத்தி விடுவார். பன்றியின் கொழுப்பிலேயே இறைச்சி பொரியலாகி... கருக்கல் வடிவம் எடுக்கும். ஆறுமாதமானாலும் பழுதடையாமல் பயன்படுத்தாலாம். தேன்வதைகள், பாலை, சூரை, கிளாத்திப் பழங்கள், விளாம்பழம், காட்டு மாம்பழம், அபூர்வமாகக் கிட்டும் காட்டு வாழைக்குலை.... என வந்து சேரும்.

அவன் அவற்றை ஆர்வமாகச் சாப்பிடுவதை ஒரு தாயின் வாத்சல்யத்தோடு பார்த்து நிற்பார். அவனும் வெட்டை வெளியில் ஏரி நீரில் வளரும் மருதமாமென வயதுக்கு மீறிய வளர்ச்சியுடன்... அண்ணனுக்கும் அவனுக்குமிடையில் வயதுவித்தியாசம் அதிகம். ஆதலால் அவனுக்குச் செல்லம் அதிகம். அண்ணிக்குக் குழந்தைகள் இல்லாதபடியால் அவளுக்கும் அவன்தான் குழந்தை. அவளுக்கு இரண்டு கருக் கலைந்து போயிருக்கிறது. அவளது ஏக்கங்களும், இழப்புக்களும், தவிப்புக்களும் அவனாலேயே தீர்க்கப்பட்டுக்கொண்டிருந்தன.

"என்ன அப்பூ! நானும் வரவேணுமெண்டு கேக்கிறன். நீ பதில் சொல்லாம இருக்கிறாய்...?"

"இந்தமுறை வேண்டாம்.... அடுத்தமுறை கட்டாயம் கூட்டிக் கொண்டு போறன்..."

அவனது முகம் களை இழந்தது.

## 3

தாத்தா தனது வேட்டைத் துப்பாக்கியுடன் காட்டின் நடுப்பகுதிக்கு வந்துவிட்டார். ஆனால் மிருகங்கள் ஒன்றுகூடச் சந்திக்கவில்லை. இந்த மிருகங்கள் எங்கே போய் ஒழிந்துகொண்டன? தூரத்தில் பற்றை மறைவில் தனது இருப்பை எடுத்துக்கொண்டார். முன்னிலவு கொஞ்சம் கொஞ்சமாக மங்கத் தொடங்கியது.

இதுவென்ன ஏமாற்றம்?

அப்போது, தூரத்தே குளத்திற்கு அப்பால்... ஏதோ சலசலப்புச் சத்தம் கேட்டது. தாத்தா உசாரானார். 'ரோச்சை'சைக் கையிலெடுத்தார். பளீரென்று ஒளிக்கற்றைகள் பாய்ந்தன. யாரது?

அவர் திடுக்கிட்டார்.

"வா வெளியே" அவர் இடத்தை நோக்கி ஒளிக் கற்றைகள் வந்து விழுந்தன. அவர் எழுந்தார். அவரை நோக்கிச் சிலர் வந்து கொண்டிருந்தார்கள்.

அன்று வேட்டையிலிருந்து வீடு திரும்பிய தாத்தா வெறும் கையுடன் வந்ததைக் கண்டு அவன் ஆச்சரியம் கொண்டான். அதேவேளையில் தாத்தா உற்சாகம் மிகக்கொண்டவராக இருப்பதையும் அவதானித்தான்.

## 4



நள்ளிரவில் தெருவில் வாகனம் ஒன்று ஒலிபரப்பிக்கொண்டு போனது.

"நாளை சரியாக எட்டு மணிக்கு ஐம்பது வயதுக்குட்பட்ட சகல ஆண், பெண், பத்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் அனைவரும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


காட்டு வைரவர் கோயிலடி முன்னுக்கு கூடவேண்டும். எவரும் வீட்டிலிருக்கக்கூடாது. அப்படி இருப்பவர்கள் இராணுவத் தண்டனைக்கு ஆளாக நேரிடும்...."

அடுத்தநாள் வைரவர் கோயிலடியில் பெருங்கூட்டம். வீட்டில் இருந்த குஞ்சு குருமான்களை வயோதிபர்களிடம் ஒப்படைத்து விட்டு வந்திருந்து அதுகளைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு பெண்களும், வேலை வெட்டியை விட்டிட்டு வந்து என்னத்துக்காக இப்படிக் கூட்டி வைச்சிருக்கிறாங்கள் என்று ஆண்களும் யோசித்துக் கொண்டு இருந்தனர். நாலைந்து கவச வாகனங்கள் அவர்களைச் சூழ்ந்து நின்றன. திடீரென்று நாலாபுறமும் இருந்து இராணுவ வீரர்கள் அவர்களை நோக்கி ஓடிவந்தனர். அக்கூட்டத்தினிடையே அவர்கள் யாரையோ தேடினர்.

காலைச் சாப்பாடும் இல்லாமல், தாகத்துக்குத் தண்ணீரும் இல்லாமல், உச்சிச் சூரியனின் கத்தரிவெயில் தாக்கத்தால் பலர் மயங்கி விழுந்தனர். சில ஆண்களையும் இளம் பெண்களையும் வாகனத்தில் ஏற்றினர். இவனின் அண்ணாவையும் ஏற்றினர். வாகனங்கள் சென்றபின் இவர்களை வீடு திரும்ப அனுமதித்தனர்.

அன்று அம்மாவின் அழுத குரல் இந்தப் பிரதேசத்தையே நிறைத்தது.

## 5

திடீர் திடீரென கவச வாகனங்கள் சில வீட்டு வாசல்களில் நிற்பதும், வீட்டிலிருந்து இளவயதுக் காரர்களை ஏற்றிச் செல்வதும் வழக்கமாகிவிட்டது.

தாத்தா தனது பழைய மிலிற்றரி அடையாள அட்டையை பழைய பெட்டி, பெட்டகங்களைக் குடைந்து கண்டுபிடித்தார். பழைய பூட்ஸ், காற்சட்டைகளை மீண்டும் அணிந்தார்.

வீட்டில் எல்லோரும் மறிக்க மறிக்க இராணுவ முகாம் நோக்கி நடந்தார். திரும்பி வரும்பொழுது இவனின் அண்ணாவுடன் வந்தார்.

ஆனால் அவர் முகம் சிந்தனை வயப்பட்டிருந்தது. அம்மா கன நாட்களுக்குப் பின் அன்றுதான் சாப்பிட வந்தாள்.

"இனி இரவில ஆம்பிளையள்... முக்கியமாக இளந்தாரியள் தங்கக்கூடாது.... இரவில்தான் இந்தக் கைது நடக்குது. பகலில குறைவு.... ஆமி வராத இடமாகப் போக வேணும்"

என்று கிராமத்தில் முடிவெடுத்தார்கள்.

அன்று தாத்தா அண்ணனையும் அப்பாவையும் அழைத்துக் கொண்டு காட்டில் நுழைந்தார். இருவருக்கும் ஆமி வராத பாது காப்பான ஒரு இடத்தைக் காட்டினார். ஒரு காலத்தில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் 'கோச்' ஓடியபோது கட்டிவிடப்பட்ட குதிரை லாயம். இன்று சிதைவுக்குள்ளானாலும் பாடுபட்டால் பயன்படுத்தலாம். எல்லா ஒழுங்குகளையும் செய்துகொடுத்துவிட்டு தாத்தா திரும்பினார்.

## 6

வயல்களில் கதிர்கள் சாய்ந்திருந்தன.

கதிரறுக்க வேண்டிய காலம். ஆனால் அறுவடை செய்ய ஆட்களில்லை. தலைமறைவும் பயமும் வயலில் வேலை செய்வதைத்

# இடமில்லாப் பூர்வீகங்கள்

**இன்று உலகின் பெரும்பான்மை இடம் அதன் சொந்தக்காரர்களிடம் இல்லை. வந்தேறு குடிகளிடம்தான் இருக்கின்றது.**

**திராவிடரின் பூர்விகமான இந்தியா, ஆரியர் வந்தேறு குடிகளானமையால் இன்று அங்கு திராவிடர் சிறுபான்மை இனம். ஆட்சி அதிகாரம் ஆரிய ஆக்கிரமிப்பாளர்களிடம்.**

**இலங்கையில் திராவிடரின் பாரம்பரிய நிலத்தில் இன்று அவர்கள் சிறுபான்மையினம். தமது நிலத்துக்குத் தாமே சொந்தங் கொண்டாட முடியாத நிலை.**

**அமெரிக்காவின் சொந்தக்காரர்களான செவ்விந்தியர்களுக்கு அது இப்போதும் இரவல் நாடு.**

**தென்னாபிரிக்காவின் பூர்வீக நீக்ரோக்கள் தமது நிலத்தில் இருக்க, வந்தேறு குடிகளான வெள்ளையரிடம் அனுமதி கேட்கவேண்டும்.**

**அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் இன்று பழங்குடிகள்... ஆக்கிரமிப்பு வெள்ளையர் புதுக்குடிகளாம்... இப்படி இன்றைய உலகெங்கும்... பூர்வீகவாசிகள் பழங்குடிகளாம். அவர்களது வளர்ச்சி பற்றி அவர்களது தாயகம் பற்றித் தீர்மனிப்பது வந்தேறு குடிகளான ஐரோப்பியரும், ஆரியருமாம்...**

**தாருங்கள் என்று இரந்த இந்தப் பழங்குடிகள் எங்கள் நிலத்தில் நாம் இருப்போம் செய்வதைச் செய்யுங்கள் எனத் துணிந்துவிட்டன. அவற்றில் ஈழத்தின் தமிழினமும் அடங்கும். ஆபிரிக்க நீக்கிரோக்களும் - அமெரிக்க செவ்விந்தியர்களும் அடங்குவர்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தடைசெய்தன. சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு கொண்டாட்டமான கொண்டாட்டம். இரவு வேளையில் தமிழர்களின் வயல்களில் திருட்டுத் தனமாக அறுவடை செய்யத் தொடங்கினர். 'ஆமி' அவர்களுக்குத் துணையாயிருந்தது.

ஒரு நாள் பிற்பகல் வேளை.

"அண்ணை... உங்கடை வயலில அறுவடை செய்யிறாங்கள்...!" என்று ஓடி வந்தான் முருகேசு.

"என்ன ஆரடா அவன்.... இண்டைக்கு அவங்களை ஒருகை பாக்கிறம், குட்டக் குட்டக் குனியிறவன் மடையன்..." என்றவாறு அண்ணனும் அப்பாவும் கையிலகப் பட்ட வெட்டுக் கத்தியையும் கொடுவாக் கத்தியையும் எடுத்துக் கொண்டு வயலை நோக்கி ஓடினர். அப்போது வீட்டில் தாத்தா இருக்கவில்லை. இவன் தாத்தாவைத் தேடி ஓடினான்.

## 7

அண்ணனுக்கும் அப்பாவுக்கும் பின்னால் ஒரு கூட்டமே ஓடிக் கொண்டிருந்தது.

சிங்களக் காடையர்கள் அறு வடை செய்துகொண்டிருந்தனர். எந்தத் துணிச்சலில்...? வயலைப் பார்க்கும் போது பற்றி எரிந்தது. முக்கால்வாசி வயல் அறுவடையாகி விட்டன.

"டேய்! ஆரடா... எங்கட வயலில இறங்கினவன்!"

என்று அப்பா கத்தினார். அவர்கள் அலட்சியமாக அறுவடை செய்துகொண்டிருந்தனர்.

"டேய்!..." என்று சப்தமிட்டுக் கொண்டு இறங்கிய மறு விநாடி வயல் வரப்பு மறைவில் இருந்து 'டுமீல்... டுமீல்..' என்று வெடிச் சத்தத்துடன் இராணுவம் எழுந்தது. பின்னால் வந்த கூட்டம் கலைந்து கதறி ஓடியது.

அப்பாவும் அண்ணாவும் வயலுக்கு செந்நீர் பாய்ச்சிக்கொண் டிருந்தனர்.

## 8

தாத்தாவும் அவனும், அம்மா வும் அண்ணியும் ஓடி வந்து பார்த்தபொழுது வயல் எரிந்து கொண்டிருந்தது. அதன் நடுவில் அவர்கள் கருகிக்கொண்டிருந்தனர்.

அண்ணி மயக்கம் போட்டு விழுந்தாள்.

அம்மா அலறினாள். "அப்பா... என்ர இந்தக் குஞ்சையாவது காப்பாத்துங்க.... எங்கட நிலத்தி லிருந்து எங்களை எழுப்பப் பாக்கும் இவங்களோட எங்களுக்கு என்ன உறவு... எங்கட மண்ணை... உடை மையை... உயிரைப் பறிக்கும் இந்த ராஷுஸவாதியிடமிருந்து எங்களைக் காக்கவேணும். .... அப்பா! போங்கோ. எங்க இனத்தைக் காக்கிறவங்க வடக்கே இருக்கிறாங் களாம். போங்க... எங்கட மண் ணைக் காருங்க... இனத்தைக் காருங்கள்."

அம்மா மயங்கி விழுகிறாள்.

## 9



ஓரிரவு. தாத்தா தனது பேரனைக் கையில் பற்றியவாறு, மறுகையில் தனது துப்பாக்கியுடன் முன்பு தான் காட்டில் சந்தித்தவர் களைக் காணச் சென்றுகொண்டிருக் கிறார்.

விடியலின் ராகங்கள் கேட்கும் அந்தத்திசையை நோக்கி.

---

# அக்கறை...

எம்மண்ணின் விடுதலைப் போராட் டத்தின் வளர்ச்சியையும் அதன் ஆக்கபூர்வ மான செயற்பாட்டின் விளைவுகளையும் மாதம் தோறும் எமக்கு கலையம்சத்துடன் ஊட்டும் எரிமலை கடந்த ஆவணி மாத இதழில் "இடர் நடுவேயும் வேளாண் மன்னர்கள்" என்ற படம் பெண் அடிமையை சித்தரிப்பது போல் இருந்தது. இனிமேலும் இதுபோன்ற தவறுகள் இடம் பெறாமல் இன்னும் தரமுடன் எதிர்பார்க்கிறேன்.

வாழ்க தமிழீழம்
அன்புடன் கஜேந்திரன்,
பாரிஸ்

### போர் உலா படித்தேன்

எரிமலை வாசகர்களுள் நானும் ஒருத்தி. அத்துடன் நெஞ்சை உருக்கும் கப்டன் மலரவனின் "போர் உலா" படித்தேன் என்பதைவிட ஒவ்வொரு இதழாக மனப்பாடம் செய்தேன் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். மதிப்பிற்கும் போற்றுதற்குரியதுமான அந்த உயர்ந்த மாவீரனின் குடும்பமே விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ள போது என்னைப் போன்றோர் சொந்த விருப்புகளுக்குட்பட்டு புலம்பெயர்ந்துள்ளமை வெறும் சுயநலமாகத்தானிருக்கும். எனினும் இதுபோன்ற படைப்புக்களையும், எரிமலை, களத்தில் போன்றவற்றையும் வாசிக்கும் போது தமிழீழத்தில் இருப்பதாகவே உணர்கிறேன். கட்டுக்கோப்பாகத் தொகுத்திருப்பதும் இந்நூலிற்கொரு மகிமையைக் கொடுக்கிறது. எவ்வளவு துன்பத்திற்கு மத்தியிலும் இந்நூலில் குறிப்பிட்டபடி ஒவ்வொரு போராளியும் நகைச்சுவையுணர்வோடு வாழ்கிறார்கள், வாழ்ந்திருக்கிறார்கள். நமது மக்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாக வாசிக்கவேண்டிய ஒரு வரலாற்றுக் காவியம் இது.

நன்றி.
வெ. ராகினி,
பாரிஸ்.

### புலம்பெயர் வாழ்வினைத் தொடாத கவிதைகள்

எரிமலையில் புரட்டாதி 94ல் வெளிவந்த 'புலம்பெயர்ந்தோர் கவிதைகள்' புலம்பெயர் வாழ்வினைத் தொடாத கவிதைகளாகவே இருந்தன. ஏன் இந்தப் பொல்லாத வாழ்வினைப் பற்றி யாரும் பெரிதாக தொடுகிறார்களில்லை. ஆழமாக நோக்கவேண்டிய கடமைப்பாடு கலைஞர் களுக்கு இருக்கிறது. அவர்கள் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும். சில கவிதைகளின் தலைப்புகளில் இவ்வாழ்வின் துயரத் தொடுகை இருந்தது. ஆனால் கவிதைகளில் இல்லை. கற்பனையை விடுத்து எமது நிலம் பிரிந்த வேதனையைப் பாடுவோம். சமகால வாழ்வியல் உண்மை களை வெளிக்கொணர்வோம் என கவிஞர் கள் ஏன் எண்ணாமல் போகிறார்கள். இனியாகிலும் எழுதுவார்களா?

இப்படிக்கு
சாந்தன்
பாரிஸ்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# தன்னிறைவான பொருளாதாரமே தேசிய வாழ்வுக்கு மூலாதாரமானது

எந்த விடுதலைப் போராட்டத்திலும் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி விடுதலைப் போரை முறியடிக்கவும் மக்களைப் போராட்டத்தினின்றும் அந்நியப் படுத்தி போராட்டத்தின் மீது வெறுப்படையச் செய்து பங்களிப்பு செய்யாமல் தடுக்க எதிரியானவன் கட்டாயம் முற்படுவான். இது உலக விடுதலைப் போராட்டங்களின் பட்டறிவாகும்.

உலகத்தின் பட்டறிவை நன்றாக உள்வாங்கிக் கொண்டதன் வெளிப்பாடாகவே "தன்னிறைவான பொருளாதாரம் என்பது தேசிய வாழ்வுக்கு மூலாதாரமானது. தனியரசு நிர்மாணத்திற்கும் மூலாதாரமானது. உணவுப் பொருட்களுக்கும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் சிங்கள தேசத்தில் தங்கியிருந்தபடி தனியரசு கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. எனவே எமது மண்ணில் எமது கால்களில் தங்கிநிற்கும் தன்னிறைவான வாழ்வை நாம் கட்டியெழுப்பவேண்டும்" என்று எமது தேசியத் தலைவர் அவர்கள் தெளிவுபடக் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழவேண்டுமென்பதற்காகவே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப்போராட்டத்தின் மூலம் விடுவிக்கப்படும் எமது மண் வெறுமனே இராணுவ ரீதியில் மட்டும் விடுதலை பெற்றால் போதாது. சமூக, பொருளாதார ரீதியிலும் நாம் விடுதலை பெற வேண்டும். இவ்வளவு இழப்புக்கள், உயிரழிவுகளுக்கு மத்தியில் நாம் வென்றெடுக்கும் தேசம் வெறுமனே ஒரு நிலப்பரப்பாகவன்றி தனது காலில் நிற்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.

இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காகவே தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது. இந் நிறுவனம் போர்க்காலத்திலேயே சுதந்திர, சுயசார்புப் பொருண்மியத்தை உடைய தமிழீழத்திற்கான அடிக்கற்களை இடத் தொடங்கிவிட்டது. சுதந்திரமான, சுபீட்சமான தேசத்துக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள தனது வரையறுக்கப்பட்ட வளங்களைக்கொண்டு மிகுந்த முனைப்புடன் செயற்படுகிறது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது சுதந்திர தமிழீழத்திற்கான ஆரம்பப் பணிகளை வளர்ப்பதுடன் நின்றுவிடாது போர்க்காலச் சூழ்நிலையில் எமது மக்களின் கஷ்டங்களை ஓரளவுக்காகாவது நீக்கி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் ஈடுபட்டு வருகிறது.

குடாநாட்டுடனான வன்னிப் பெருநிலப்பரப்பினது தொடர்பு இராணுவ ஆக்கிரமிப்பினால் துண்டிக்கப்பட்ட பின்னர் குடாநாட்டு மக்கள் விறகுக்காக பெரும் தட்டுப்பாட்டை எதிர்நோக்கினர். மின்சாரம், சமையல் வாயு போன்ற ஏனைய எரிபொருட்களின் தடையினால் விறகு மட்டுமே கிடைக்கக் கூடிய எரிபொருளாகியது. ஆனால் சனத்தொகை மிகுந்த யாழ். மாவட்டத்தின் விறகுத் தேவையைச் சமாளிக்க யாழ். மாவட்டத்தின் பற்றைக் காடுகள் அழிக்கப்பட்டன. இந்நிலையில் விறகுத் தேவையில் சிக்கனத்தைப் பேணும் "இரட்டைச் சூட்டடுப்பு" பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டது. ஆனையிறவு உப்பளப் பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளானதால் அத்தியாவசியப் பண்டமான உப்பு எமக்கு ஓர் விலையுயர்ந்த பொருளாக மாறி கிலோ 20 - 30 ரூபா வரை விலைபோனது. இந்நிலையில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், செம்மணி, கரணவாய் உப்பளங்களை செப்பனிட்டு உப்பு உற்பத்தியை மேற்கொண்டது. இதனால் இன்று உப்பின் விலை கிலோ 8 - 10 ரூபா வரையாக உள்ளது. உப்பு உற்பத்தியில் தமிழீழம் தற்போது தன்னிறைவடைந்துள்ளது.

வடதமிழீழத்தில் நெல்லுற்பத்தியை பெருக்கும் முயற்சியிலும் நிறுவனம் தீவிர கவனம் செலுத்தியது. இதனால் படிப்படியாக நெல்லுற்பத்தி அதிகரித்து வடதமிழீழத் தேவையில் பெரும்பகுதியை நிறைவு செய்யக்கூடியளவிற்கு இன்று உற்பத்தி அதிகரித்துள்ளமை குறிப்பிடக்கூடியதாகும். விரைவில் வடதமிழீழத்தில் நெல்லின் தன்னிறைவு கிட்டக்கூடியதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டங்களைச் செயல்படுத்துகின்றது.

இவ்வாறு மக்களின் இன்றைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிறுவனம் எதிர்காலத் தமிழீழத்திற்கான திட்டமிடலையும் மேற்கொள்கிறது. சுதந்திரத் தமிழீழத்திற்கான உட்கட்டுமான வசதிகளான நீர்ப்பாசனம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்னுற்பத்தி போன்றன குறித்த விளக்கப்படங்கள், திட்டங்கள் என்பன தயாரிக்கப்படுகின்றன. கைத்தொழில் உற்பத்திகள் குறித்து ஆராயப்படுகிறது; திட்டமிடப்படுகிறது.

இந்நடவடிக்கைகளின் போது இங்குள்ள கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள், புத்தி ஜீவிகள், பொதுமக்களின் கருத்துக்கள், அனுபவங்களை அறிந்து, உள்வாங்கி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது விடுதலைப் போரில் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டும் பணியையும் எதிர்கால தமிழீழத்திற்கான திட்டமிடல், போர்க்காலத் தேவைகளையும் நிறைவேற்றுதல் ஆகிய பணிகளையும் நிறுவனம் நிறைவேற்றி வருகிறது.

இப்பணிகளால் விடுதலையடையும் தமிழீழம் எதிர்காலத்தில் சுபீட்சமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com